கிராமப்புற மேலாண்மை – வணிக சுற்றுச்சூழல்



# கிராமப்புற மேலாண்மை
# வணிக சுற்றுச்சூழல்

முதல் பதிப்பு

सत्यमेव जयते

MoE

Government of India
Ministry of Education

**பதிப்பாசிரியர் குழு:**

முனைவர் பிரசன்ன குமார்

முனைவர் ரேகா

**முதல் பதிப்பு**: 2020

**சர்வமதச தர புத்தக எண் (ISBN)**:

**விலை**: ₹ 750/-

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

இந்த  புத்தகத்தின் எந்த பகுதியும் எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் வெளியீட்டாளரின் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கப்படக்கூடாது.

**மறுப்பு**

இந்த புத்தகத்தில்  ஆசிரியர்கள் வெளிப்படுத்திய அறிக்கைகள்/ கருத்துக்களுக்கு ஆசிரியர் அல்லது வெளியீட்டாளர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள்.

© மகாத்மா காந்தி  தேசிய கிராமிய கல்வி கவுன்சில் (எம்ஜிஎன்சிஆர்இ)

**உயர்கல்வித் துறை மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு**

5-10-174, 5-10-174, ஷக்கர் பவன், தரை தளம், ஃபதே மைதன் சாலை, ஹைதராபாத் - 500 004, தெலுங்கானா மாநிலம்.

**தொலைபேசி**: 040-23422112, 23212120, **தொலை நகல்**: 040-23212114

**மின்னஞ்சல்**: editor@mgncre.org **வலைத்தளம்**: www.mgncre.org

**வெளியீட்டாளர்**: மகாத்மா காந்தி தேசிய கிராமிய கல்வி கவுன்சில் (எம்ஜிஎன்சிஆர்இ), ஹைதராபாத்.

## முன்னுரை

நான் இந்தப் புத்தகத்தை மாணவர்களுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு வணிக சுற்றுச்சூழல் என்ற தலைப்பில் வழங்குவதில் மிகவும் பெருமைப்படுகிறேன். மேலும் இந்த புத்தகத்தை இன்றைய பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்திய பல்கலைக்கழகம் மற்றும் பாடத்திட்ட தயாரிப்பு துறைக்கும் எனது பணிவான நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பது வணிக சுற்றுச்சூழல் ஆகும். மேலும் இன்றைய தருணத்தில் எந்த ஒரு நாட்டின் பொருளாதாரமும் தனித்து இயங்க முடியாது. இதற்கு காரணம் ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய அங்கமாக சுற்றுச்சூழல் அமைந்துள்ளது. எந்த நாடும் தன்னால் சிறப்பாக உற்பத்தி செய்ய முடியாத பல பொருட்களையும், சேவைகளையும் பிற நிறுவனங்களிடமிருந்து வாங்கி தமது நாட்டு மக்களுக்கும், சிறு, குறு நிறுவனங்கள் வழங்கிய நாட்டின் உற்பத்தி மற்றும் விற்பனையும் அதிகரித்து வருகின்றன.

மேலும் இன்றைய வணிகச் சூழலில் நிறுவனங்கள் மற்றும் நாடுகளுக்கிடையே வணிகச் சூழலில் பல்வேறு போட்டிகள் நிலவுகின்றன. எனினும் அரசின் நடைமுறைகள் பல்வேறு வணிகச் சட்டங்கள் இவற்றை உள்ளடக்கி அரசு மிகவும் சிறப்பாக வணிக சூழலை கையாண்டு வருகின்றது.

இந்த புத்தகத்தை தமிழ் வழி மாணவர்களுக்குச் சென்று சேரும் வகையில் ஆழமாகவும் எளிதமயாகவும் எழுதி, தமிழில் மேற்கத்திய கருத்துக்களை சிறப்பாகப் பதிவிட்டுள்ள முனைவர் **பூ.தேவமைந்தன்** அவர்களுக்கு என் வாழ்த்துக்கதளத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த புத்தகத்தை நிறைவு செய்வைற்கு ஆதரவு அளித்த எம்.ஜி.என்.சி.ஆர் குழு உறுப்பினர்களுக்கும் நன்றி.

இந்த நூலில் குறிப்பாக தமிழ் மொழியில் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு மகாத்மா காந்தி தேசிய கவுன்சில் கிராமப்புற கல்வி புதிய பாடத்திட்டத்தின்படி எளிய தமிழில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த புத்தகம் மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் என நம்புகிறேன்.

**டாக்டர் டபிள்யூ ஜி பிரசன்னா குமார்**

**தலைவர் எம்.ஜி.என்.சி.ஆர்.இ**

## பொருளடக்கம்


**பாடக் குறிக்கோள் மற்றும் அறிமுகம்** **4-7**

**அலகு 1 இந்திய வணிக சுற்றுசூழலில் ஊரக பொருட்கள்** **8-37**

1.1 வணிகச்சுற்றுச் சூழல்
1.2 யுக்தி மேலாண்மை
1.3 பொருளாதாரம் சார்ந்த மற்றும் சாராச்சுற்றுச் சூழல்
1.4 தொழில் நுட்ப சுற்றுசூழல்
1.5 ஊரக பொருட்கள் – இந்திய சுற்றுச்சூழலின் சவால்கள்

**அலகு 2 சமகால கண்ணோட்டங்கள்** **38-60**

2.1. பொது கொள்கைத் திட்டங்கள்
2.2. பணக்கொள்கை
2.3. நிதிக்கொள்கை
2.4. நிறும சமூக பொறுப்பு
2.5. நீடித்த நிலையான வளர்ச்சி

**அலகு 3 இந்தியாவில் திட்டமிடல் மற்றும் சீர்திருத்தங்கள்** **61-91**

3.1. ஐந்தாண்டு திட்டங்கள்
3.2. நிலசீர்திருத்தங்கள்
3.3. பொருளாதார தாராளமயமாக்கள் மற்றும் உலகமயமாக்கல்
3.4. பசுமை புரட்சி
3.5. பொதுத்துறை நிறுவங்களின் செயல்பாடு

**அலகு 4 பேரியல் பொருளாதார காரணிகள்** **92-117**

4.1 தேசிய வருமானம்
4.2 நுகர்வு மற்றும் முதலீடு
4.3 பணவீக்கம்
4.4 வாணிப சுழற்சி
4.5 சமூக பொருளாதார காரணிகள்

**அலகு 5 சட்ட கட்டமைப்பு** **118- 141**

5.1 சட்ட நடைமுறைகள்
5.2 நிறும சட்டம், 2013
5.3 அந்நியச் செலாவணி மேலாண்மைச்சட்டம்
5.4 நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்

அட்டவணைகளின் பட்டியல்
படங்களின் ட்டியல்
தொகுப்பாளர்களின் சுயவிவரம்
நூலாசிரியரின் சுயவிவரம்

# அட்டவணைகளின் பட்டியல்



| | |
|---|---|
| 1.1 வங்கிகள் மூலம் இந்திய அரசு வழங்கிய கடன் | 15 |
| 1.2 கிராமபுற நுகர்வோர் மற்றும் நகர்ப்புற நுகர்வோர் , இடையேயான வேறுபாடுகள் | 26 |
| 1.3 கிராமப்புற இந்தியாவில் கிடைக்கும் பொருட்கள் | 27 |
| 1.4 இந்திய கிராமங்கள் மக்கட் தொகை அடிப்படையில் பிரிப்பு | 28 |
| 2.1 மின்னணு பரிவர்தனை | 34 |
| 2.2 2019 பொருட்கள் மற்றும் சேவை வரி (கோடிகளில்) | 34 |
| 2.3 வங்கி வீதக்கொள்கை | 39 |
| 2.4 பணஇருப்பு விகிதம் (Cash Reserve Ratio) | 40 |
| 2.5 சட்ட நீர்மை விகிதம் (Statutory Liquidity Ratio) | 40 |
| 2.6 மத்திய அரசு பற்றாக்குறை (Percent of GDP at current Market prices) | 42 |
| 2.7 நிதிபற்றாக்குறை | 44 |
| 2.8 இயற்கை எரிவாயு பயனாளிகள் | 52 |
| 2.9 குழந்தைகள் இறப்பு விகிதம் | 53 |
| 3.1 அன்னிய செலாவணி இருப்பு | 77 |
| 3.2 இந்திய பொதுத்துறை நிறுவங்களின் செயல்பாடு | 86 |
| 4.1 2019ம் வேலையில்லாதோர் சதவீதம் | 110 |
| 4.2 குழந்தைகளின் எண்ணிக்கை (சதவீதத்தில்) | 111 |
| 4.3 பட்ஜெட் குழந்தைகளுக்கு நிதி ஒதுக்கீடு | 112 |
| 4.4 உயற்கல்விக்கான கடன் | 112 |
| 4.5 ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இறப்பு எண்ணிக்கை | 113 |
| 4.6 இந்திய மாநிலங்களில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம் | 113 |
| 4.7 PMUY திட்டத்தின் மூலம் நுகர்வோர் எண்ணிக்கை | 114 |
| 4.8 PMUY திட்டத்தில் மறுபடியும் சமயல் எரிவாய்வு வாங்கியோர் | 114 |

# படங்களின் பட்டியல்


| | |
|---|---|
| 1.1.1 வணிக சுற்றுச்சூழல் | 2 |
| 1.1.2 வணிக சுற்றுச்சூழல் காரணிகள் | 3 |
| 1.2.1 யுக்தி மேலாண்மை | 7 |
| 1.2.2 யுக்தி மேலாண்மையின் முக்கியதுவம் | 8 |
| 1.2.3 யுக்தி மேலாண்மையின் வகைகள் | 9 |
| 1.3.1 பொருளாதாரம் சார்ந்த மற்றும் சாரா சுற்றுச்சூழல் | 13 |
| 1.3.2 வணிகத்தின் பொருளாதார சுற்றுச்சூழல் | 14 |
| 1.3.3 பொருளாதாரம் சாரா சுற்றுச்சூழல் | 17 |
| 1.4.1 தொழில்நுட்ப சுற்றுச்சூழல் | 21 |
| 1.5.1 கிராமப்புற சந்தையில் சுற்றுச்சூழல் | 25 |
| 2.1.1 பொது கொள்கைத் திட்டங்கள் | 33 |
| 2.2.1 பணக்கொள்கையின் நோக்கங்கள் | 36 |
| 2.3.1 நிதிக்கொள்கை | 41 |
| 2.4.1 நிறும சமூக பொறுப்பு | 45 |
| 2.4.2 நிறும சமூக பொறுப்பு பகுதிகள் | 45 |
| 2.5.1 நீடித்த நிலையான வளர்ச்சி | 49 |
| 3.1.1 ஐந்தாண்டு திட்டங்கள் | 58 |
| 3.1.2 ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம் | 59 |
| 3.2.1 நில சீர்திருத்தங்கள் | 65 |
| 3.2.2 நிலவுடமை முறை | 67 |
| 3.3.1 உலகமயமாக்கல் | 74 |
| 3.4.1 புதிய வேளாண்மை நுட்ப முறை | 78 |
| 3.5.1 பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடு | 83 |
| 4.1.1 தேசிய வருமானம் | 90 |
| 4.1.2 தேசிய வருவாய் | 90 |
| 4.2.1 நுகர்வு மற்றும் முதலீடு | 94 |
| 4.2.2 நுகர்வுச் சார்பு காரணிகள் | 94 |
| 4.2.3 முதலீட்டின் வகைகள் | 98 |

| | |
|---|---|
| 4.3.1 பணவீக்கம் | 100 |
| 4.3.2 பணவீக்கத்தின் வகைகள் | 101 |
| 4.3.3 பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் முறைகள் | 103 |
| 4.4.1 வாணிபச் சூழல் | 105 |
| 4.4.2 வாணிபச் சூழலுக்கான காரணங்கள் | 105 |
| 4.4.3 வாணிபச் சுழற்சியின் நிலைகள் | 106 |
| 4.5.1 சமூக பொருளாதார காரணிகள் | 110 |
| 5.1.1 சட்ட நடைமுறைகள் | 118 |
| 5.1.2 சட்டத்தின்  வகைகள் | 119 |
| 5.1.3 மனிதச் சட்டங்கள் | 119 |
| 5.2.1 நிறும சட்டம் | 121 |
| 5.2.2 நிறுமத்தை தோற்றுவித்தல் | 121 |
| 5.2.3 சட்டபூர்வமான நிறும பதவிகள் | 124 |
| 5.2.4 இயக்குனர்களின் வகைகள் | 125 |
| 5.3.1 அந்நியச் செலாவணி மேலாண்மைச்சட்டம் | 129 |
| 5.4.1 நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் | 135 |

# அலகு 1- இந்திய வணிக சுற்றுசூழலில் ஊரக பொருட்கள்

## அத்தியாய அறிமுகம்

இந்தியா கிராமங்களில் தான் வாழ்கிறது என்கிறார் நமது தேசப்பிதா மகாதமா காந்தி. அவரின் கூற்றுப்படி இந்தியா மக்கட் தொகையில் கிட்டத்தட்ட 70 சதவிகித மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். எண்களில் கூறினால் 80 கோடிக்கு அதிகமானோர் கிராமங்களில் வசிக்கின்றனர் இந்தியா கிராமப்புற மக்கட்தொகையாக ஐரோப்பா கண்டத்தின் மக்கட் தொகை அதிகம்.

2007 மேக்கன்சி கிராமப்புற இந்தியாவை குறித்து ஓர் அறிக்கை வெளியிட்டது. அதன் சிறப்புகள் கீழக்கண்டவாறு காணலாம். 2025 ம் ஆண்டில் 63 சதவிகித இந்திய மக்கள் கிராமப்புறங்களில் வசிப்பர். ஊரக நுகர்வு கூட்டு வளர்ச்சி விகிதம் 3.9 சதவீதத்தில் (1985-2005) 5.1 சதவீதம் (2005-2025) அதிகரிக்கும். 2025ல் ஊரக நுகர்வு மும்மடங்கு அதிகரிக்கும். அதன் மதிப்பு 26 டிரில்லியன் ரூபாய்கள். இந்தியா ஊரக சந்தையானது 2025ல் தென்கொரியா அல்லது கனடா சந்தையை விட பெரியதாக இருக்கும். கிராமப்புற மக்களின் வறுமையானது 51.5 கோடியிலிருந்து 26.6 கோடியாக குறையும். (இது சதவீதத்தில் 65 இருந்து 29 சதவிகிதமாக குறையும்). சராசரி வீட்டு வருமானம் 3.6 சதவீதம் 20 வருடங்களில் அதிகரிக்கும்.

## அத்தியாய நோக்கங்கள்

இப்ப படத்தை படித்த பின்னர் நீங்கள்

- வணிகச் சுற்றுச் சூழலினை பாதிக்கும் காரணிகளைப் பற்றி விவரிக்க முடியும்
- வணிகச் சுற்றுச்சூழல் ஆய்வின் முக்கியத்துவத்தை விளக்க முடியும்
- யுக்தி மேலாண்மையின் முக்கியத்துவம், வகைகள், சிறப்பியல்புகள், செயல்பாடுகள் படிநிலைகளை விவரிக்க முடியும்
- வணிகத்தை பொருளாதாரம் சார்ந்த மற்றும் சாரா சுற்றுசூழல் காரணிகளை விளக்கமுடியும்
- தொழில் நுட்பத்தை பாதிக்கும் காரணிகளை விவரிக்க முடியும்
- கிராமப்புற ஊரக சுற்றுசூழல் காரணிகளை விளக்க முடியும்

## அத்தியாய அமைப்பு

1.1 வணிகச்சுற்றுச் சூழல்

1.2 யுக்தி மேலாண்மை

1.3 பொருளாதாரம் சார்ந்த மற்றும் சாராச்சுற்றுச் சூழல்

1.4 தொழில் நுட்ப சுற்றுசூழல்

1.5 ஊரக பொருட்கள் – இந்திய சுற்றுச்சூழலின் சவால்கள்

## 1.1 வணிகச்சுற்றுச் சூழல்

### அறிமுகம்

வணிக நிறுவனமானது தனித்து இயங்க முடியாது. நம் உடலில் எவ்வாறு பல விதமான உறுப்புகள் சார்ந்து உயிர் வாழ்கின்றோமோ அதே போல் வணிகமானது நாட்டில் உள்ள சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் சட்டத் துறைகளின் ஓர் பகுதியாக விளங்குகிறது. மனித வாழ்வில் எவ்வாறு பிறப்பு, வாழ்க்கை, வளர்ச்சி மற்றும் இறப்பு உள்ளதோ அதே போல் வணிகத்திற்கும் வடிவமைப்பு மற்றும் சிறப்பியல்புகள் உள்ளன. வணிகச் செயல்பாடுகள் இரு காரணிகளை ஒத்தே அமைகிறது. (1) உட்புறக் காரணிகள் (2) வெளிப்புறக்காரணிகள். உட்புறக் காரணிகள் என்பது வணிகத்தின் கட்டமைப்பு, வடிவம், அளவு, கொள்கை, மூலதனம் மற்றும் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களைக் கொண்டு அமைகிறது. வெளிப்புறக் காரணிகள் என்பது வணிகத்தின் வளர்ச்சியையும் மேம்பாட்டினையும் பாதிக்கும் வணிக உட்காரணிகளைத் தவிர உள்ள அனைத்தையும் அடக்கியதாகும்.




படம் எண் 1.1.1 வணிக சுற்றுச்சூழல்

### வணிகத்தின் வரைவிலக்கணம்

சொல்லகராதிப்படி வணிகம் என்பது தொழில், வியாபாரம், உத்தியோகம் ஆகும். வணிகம் என்ற சொல் எப்போதும் இயங்கும் நிலைமையைக் குறிப்பிடுவதாகும். பொருளியல் குறிப்பின்படி வணிகம் என்ற சொல் செல்வத்தை உருவாக்குதல் அல்லது செல்வத்தை உருவாக்க எடுத்துக் கொள்ளும் முயற்சியை குறிக்கிறது.

### வணிகச் சுற்று சூழல் காரணிகள்

சுற்றுச் சூழல் என்பது தனியான ஓர் காரணி அல்ல. இது பல்வேறு காரணிகளை தம்முள்

அடக்கியுள்ளது. ஒவ்வொரு காரணியும் வணிக நிறுவனத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகும். இக் காரணிகளை நாம் ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.




**படம் எண் 1.1.2 வணிக சுற்றுச்சூழல் காரணிகள்**

### 1) மக்கள் தொகை இயல் சார்ந்த காரணிகள்

மக்கள் தொகை இயல் என்பது மக்களைச் சார்ந்த பல காரணிகளைக் கொண்டுள்ளது. அவை மக்கள் தொகையின் அளவு, வளர்ச்சி, பரந்த தன்மை, பகிர்வு, வயது மற்றும் பாலியல் கலவை போன்றவை ஆகும். உலகளவில் சீனாவுக்கு அடுத்த நிலையில் இந்திய சந்தை உள்ளது. இந்திய மக்கட் தொகை சதவிகிதம் வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு இந்து சதவிகிதம். மக்களுடைய எழுத்தறிவு சதவிகிதம் 70 சதவிகிதம். இந்திய மக்களில் 70 லட்சத்திற்கும் அதிகமான பொறியாளர்கள், மருத்துவர்கள், விஞ்ஞானிகள் வாழ்கின்றார்கள்.

### 2) பொருளாதார காரணிகள்

வணிக நிறுவனங்கள் அனைத்தும் பல வகையான பொருளாதார நடைமுறைகளால் தாக்கப்படுகின்றன. இவ்வகை பொருளாதார பிரச்சனைகளை கட்டுப்படுத்தவும் முடியாது பொருளாதார காரணிகள். இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

அ. தேவை நடைமுறைகள்

ஆ. போட்டி நடைமுறைகள்




**ஆதாரம் :** இந்திய நிதி அமைச்சகம் வெளியீடு (2020)

**3) புவியியல் மற்றும் உயிரின வாழ்க்கைச் சூழல் சார்ந்த காரணிகள்**

புவியியல் சார்ந்த காரணிகள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வணிகம் செய்வதை பேரளவில் பறிக்கும் காரணியாகத் திகழ்கிறது. பொதுவாக ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களுடைய தேவைகள் விருப்பம் ஆகியவை ஒரு விதமாகவும் வேறுபகுதியில் வாழும் மக்களுடைய தேவைகள், விருப்பம் ஆகியவை வேறுவிதமாகவும் இருக்கிறது.

புவியியல் சூழ்நிலை, இயற்கை அமைப்பு, சீதோஷ்ணநிலை, மழைப்பொழிவு, ஈரப்பதம், ஆகியவை மக்களின் வாழும் நிலையை நிர்ணயிக்கும் காரணிகளாக உள்ளது. நாட்டில் உள்ள சிலபகுதிகள் ஒவ்வொரு விதத்திலும் ஒவ்வொரு நன்மையைக் கொண்டுள்ளது. ஆண்டு முழுவதும் மழை பொழியும் சிரபுஞ்சி மேகாலயா மாநிலத்தில் உள்ளது. மழையே இல்லாத லடாக்கும் இந்தியாவில் தான் உள்ளது. இந்தியாவைப் பொறுத்த வரையில் பருத்தித்துணி உற்பத்தியானது மும்பை மற்றும் கோயம்புத்தூரில் இருக்கக்கூடிய சீதோஷ்ண நிலையினைப் பொறுத்து அங்கே தயாரிக்கப்படுகிறது. இரும்பு மற்றும் எஃகு ஆலைகள் எங்கு நிலக்கரி மற்றும் இரும்புத்தாது கிடைக்கிறதோ அங்கேயே அமைக்கப்படுகிறது. அதே போல் தேயிலை மற்றும் காபி தொழிற்சாலையானது எங்கு பயிரிடப்படுகிறதோ அங்கேயே ஆரம்பிக்கப்படுகிறது.

**4) சமூகம் மற்றும் பண்பு சார்ந்த காரணிகள்**

ஒட்டு மொத்த சமூகத்தோடு தொடர்புடையதே சமூகச் சுற்றுச்சூழல் ஆகும். அனைத்து உப பண்புகளையும் உள்ளடக்கிய பண்புச் சுற்று சூழல் ஆகும். சமூகம் என்பது நிலையானது அல்ல. எப்பொழுதும் மாறிக் கொண்டே இருக்கக்கூடியது புதிய தேவைகள் உருவாகிக்கொண்டே இருக்கிறது எனவே சமூகத்தில் உண்டாகும் அபிவிருத்திகளை கவனித்து அதற்கேற்றப்படி நமது உற்பத்தி சந்தையிடுகைத் திட்டங்கள் மற்றும் தந்திரங்களில் தகுந்த மாற்றங்களைச் செய்து சமூகத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். ஆலும், வேலும் கொண்டு பல் துலக்கிய மக்கள், இப்பொழுது பற்பசை மற்றும் பற்பொடி கொண்டு பல் துலக்கின்றனர்.

சமூகம் மற்றும் பண்பு சார்ந்த அபிவிருத்தியை அனுசரித்துப் போவது என்பது உண்மையிலேயே அதிகபட்ச இலாபத்தை அடைய நிறுவனத்திற்கு உதவுகின்றது.

## 5) அரசியல் மற்றும் சட்டக் காரணிகள்

### அரசியல் காரணிகள்

தெற்காசியாவில் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. 1947 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை காங்கிரஸ் கட்சி நாட்டை ஆண்டது. 1977 முதல் 1979 வரை ஜனதா கட்சி இந்தியாவை ஆட்சி புரிந்தது. பிறகு 1980 முதல் 1989 மீண்டும் காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிந்தது. 2014 முதல் பாரதிய ஜனதா கட்சி இந்தியாவை ஆட்சி செய்து வருகிறது.

### சட்டம் சார்ந்த காரணிகள்

எந்த ஒரு தனியார் நிறுவனமும் நுழைந்து இயங்க இயலாத ஒரு சில துறைகள் உள்ளன. இவை தவிர பல்வேறு பொருட்களின் விலைகளும் அவற்றின் பகிர்ந்தளிப்பும் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில் ஒரே நாடு, ஒரே வரி என்ற அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவை வரி 2018 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

## 6) தொழில் நுட்பக் காரணிகள்

தொழில்நுட்பம் என்பது செயலினை ஆற்றக்கூடிய வழியாகும். தற்கால உற்பத்திக்கு தொழில் நுட்பம் மிகவும் உதவுகிறது. தொழில்நுட்ப மேம்பாடு மிகவும் இன்றியமையாததாகும். தொழில் நுட்ப மேம்பாடு நிச்சயமாக பொருளதார மேம்பாட்டிற்கு தமது பங்களிப்பைச் செய்ய முடியும். ஆனாலும் தொழில் நுட்ப ஆய்வினை மேற்கொள்வதில் சில குறைபாடுகள் உள்ளன.

தகவல் மற்றும் தொலைத்தொடர்பு புரட்சியால் உலகில் எங்கிருந்தாலும் மற்றொரு மூலையில் உள்ள நபரை தொடர்பு கொள்ள இயலும். இந்திய அரசின் ஆதார் திட்டத்தின் மூலம் மக்களின் கைரேகை, முக அடையாளம் கொண்டு மக்களுக்கு அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு செய்யப்படுகிறது.

## வணிகச் சுற்றுச் சூழல் ஆய்வின் முக்கியத்துவம்

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்ளத் தவறும் எந்த ஒரு நிறுவனமும் வெற்றியடைய முடியாது. ஆகவே ஒவ்வொரு நிறுவனமும் சுற்றுச் சூழலை முறைப்படி ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. இந்த ஆய்வானது வாய்ப்புகளை எதிர் நோக்குவதற்கும் விருப்பமுள்ள பதிலைப் பெறுவதற்குரிய திட்டத்தைத் தீட்டுவதற்கும் தகுந்த நேரத்தை அளிக்கிறது.

## சுற்றுச்சூழல் ஆய்வின் நன்மைகள்

வணிகக் கொள்கைகள் மற்றும் தந்திரங்களின் உருவாக்கம், கவனமானச் சுற்றுச்சூழல் ஆய்வின் அடிப்படையிலேயே அமைதல் வேண்டும் என வில்லியம் எஃப் கலிக் மற்றும் லாரன்ஸ் ஆர். ஜான்ச் ஆகியோர் சுற்றுச் சூழல் ஆய்வின் நன்மைகளைக் கூறுகின்றனர்.

**1) நோக்கங்களை அடையத் தவறியதன் காரணங்களை கண்டுணர**

நிறுவன நோக்கத்தை அடையத் தவறும் போது அதற்கான காரணங்களைக் கண்டுணர்ந்து சுற்றுச் சூழலுக்கேற்ப தம்முடைய கொள்கைகள் மற்றும் தந்திரங்களை மாற்றிக் கொள்ள உதவுகிறது.

**2) முன்னெச்சரிக்கையை அளிக்கிறது**

சுற்றுச்சூழல் தொடர்பான ஆய்வானது வாய்ப்புகளை எதிர்பார்த்தல் மற்றும் அதற்குரிய விளைவை அடைவதற்கு ஏற்ற திட்டத்தைத் தீட்டுதல் ஆகியவற்றிற்குத் தேவையான கால அவகாசத்தை வணிகருக்கு அளிக்கிறது.

**3) சந்தையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ள**

ஒவ்வொரு நிறுவனமும் சந்தையுடன் தொடர்ச்சியான தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும் சந்தையில் நடக்கும் நிகழ்வுகளையும் அறிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் நிறுவனமும் சந்தைச் சூழலுக்கேற்ப தமது நடவடிக்கைகளை மாற்றியமைக்க முடியும்.

**4) எதிர் காலத்தை முன்மதிப்பிடுவதற்கு**

சுற்றுச் சூழலின் மாற்றங்களை அறிந்து துல்லியமாக மதிப்பிட்டுக் கூற முடியாது. ஆனால் சில அறிஞர்களின் கருத்துப்படி எதிர்ப்பார்ப்புகளும் முன்மதிப்பீடுகளும் எந்த அளவிற்கு துல்லியமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு முடிவுகள் துல்லியமாக இருக்கும் என்று அறியப்படுகிறது. எனவே சுற்று சூழல் ஆய்வு எந்த அளவிற்கு துல்லியமானதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அது நன்மையை அளிக்கும்.

மாணவர் செயல்முறை

மாணவர்கள் ஒரு குழுவாக இணைந்து வணிக சுற்றுச்சூழல் காரணிகளை பட்டியலிடவும்.

## 1.2 யுக்தி மேலானண்மை

### அறிமுகம்

யுக்தி மேலாண்மை என்ற வாதம் இரண்டாவது உலகப் போரில் போர் வல்லுநர்களால் உருவாக்கப் பட்டதாகும். மேலும் போர்களத்தில் எதிரிகளை வெல்ல இராணுவத்தினர் பயன்படுத்திய யுக்திகள் என்றும் குறிப்பிடலாம். அதுபோல், வணிக உலகில் வணிகவியல் போட்டியை எதிர் கொள்ள பல்வேறு யுக்திகள் பயன்படுத்தப் படுகின்றன. ஆண்டுருஸ் என்ற பேராசிரியர் யுக்தி மேலாண்மைக்கு கீழ்கண்ட வரைவிலக்கணம் கொடுத்துள்ளார். யுக்தி என்பது ஒரு நிறுவனத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்கு திட்டமிட்ட பல வழிகளில் திட்டமிட்ட நோக்கங்களை அடையலாம் என்கிறார் . மேலும் இதனை வேறு வார்த்தைகளில் குறிப்பிடுகையில், யுக்தி என்பது ஒரு நல்ல திறமையான செயல்திட்டம் ஆகும். இந்த திட்டம் வணிகத்தில் போட்டியாளர்களின் போட்டியை எதிர்கொண்டு நிறுவனம் தனது நோக்கத்தை

அடைய பெரிதும் உதவுகிறது.




**படம் எண் 1.2.1 யுக்தி மேலாண்மை**

## யுக்தி மேலாண்மையின் முக்கியத்துவம்

நவீன வணிகம் என்பது பழங்கால வணிகத்தை விடவும் பெரிதும் மாறுபட்டதாகும். தற்போது ஒரு நாட்டின் பொருளாதாரம் உலகப் பொருளாதாரத்துடன் இணைந்தும், மாறியும் வருகின்றது. எனவே, ஒவ்வொரு நிறுவனமும் இந்த உலகமயமான வணிகக் கொள்கைகளால் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமாகிறது. இந்த கொள்கைகளின் விளைவாக சந்தையில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கிடையே பலத்த போட்டிகள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக பல நிறுவனங்கள் தன்னைப் இயலாமல் போய், சந்தையிலிருந்து விலக்கப் படலாம். எனவே இத்தகைய மாறிவரும் சூழலில் தந்திரமான மேலாண்மை யுக்திகளைக் கடைபிடிப்பது அவசியமாகிறது.

இத்தகைய யுக்திகளை சரிவர கடைபிடிப்பதால், பணியில் உள்ளவர்கள் தங்கள் பணிகளை சரிவர செய்யமுடிகிறது. மேலும் பணியாளர்கள் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட யுக்தியுடன் பணியை மேற்கொள்ளலாம். எனவே பணியில் உள்ளவர்கள் தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ள இத்தகைய யுக்தியை வகுத்துக் கொள்ளலாம். மேலும் ஒரு வெற்றிகரமான மேலாண்மை நிறுவனமானது தன்னிடத்தேயுள்ள ஒரு திறமையான யுக்தியாளரை வைத்துக்கொள்ளும். இவர் அந்த நிறுவகத்தின் யுக்திகளை வகுக்கும் பொறுப்பினையும் ஒத்து கொள்வார். எனவே முடிவுகள் அவரது யுக்திகள் மூலம் எடுக்கப்பட்டு, உயர் மேலாண்மையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. நிறுவனத்தின் இத்தகைய யுக்திகளை பொதுவாக நிறுவனங்களில் எடுப்பவர்கள் பின்வருமாறு:

- (i) நிர்வாகக் குழு உறுப்பினர்கள்
- (ii) உயர் மேலாளர்கள்
- (iii) திட்டமிடல் மற்றும் நிதியியல் மேலாளர்கள்
- (iv) மேலாண்மை ஆலோசனையாளர்கள்
- (v) நிறுவனத்தின் மீது மிக்க ஈடுபாடு உள்ளவர்கள்

இத்தகைய யுக்திகள் நிறுவனத்தின் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படுகின்றன. அதில் குறிப்பாக வகைப்பிரிவு, தலைமை நிறுமத்துறை மற்றும் தொழில்துறை என்பனவாகும்.




**படம் எண் 1.2.2 யுக்தி மேலாண்மையின் முக்கியதுவம்**

### 1) வகைப் பிரிவு யுக்திகள்

வணிகப் பிரிவு யுக்திகளை ஒரு நிறுவனம் பல யுக்திகளிலிருந்து சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றை ஒரு குறிப்பிட்ட சந்தையிலோ, தொழிற்சாலையிலோ, அல்லது வணிகம் செயல்படும் இடத்திலோ செயல்படுத்தலாம். உதாரணம், இந்துஸ்தான் யுனிலீவர் லிமிட்டெட் நிறுவனம் பல்வேறு நுகர்வோர் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறது. குறிப்பாக, சோப்பு, பற்பசை, பவுடர் சமையல் எண்ணெய் என்பனவாகும். ஒவ்வொரு பொருளுக்கும் பல்வேறு யுக்திகளை மேற்கொண்டும், சந்தையின் நிலைமைக்கு ஏற்பவும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு யுக்திகளை வகுத்துக்கொண்டு செயல்படுகிறது .

### 2) தலைமை - நிறுமத்துறை யுக்திகள்

நிறுமத்துறை தலைமை யுக்திகள் என்பது நிறுவன தலைமை அலுவலகம் எடுக்கும் யுக்திகள் மிகவும் இன்றியமையாததாகும். வணிக முடிவெடுக்கும் போது நிர்வாகம் மற்றும் பணியாளர் நலனை அடிப்படையாக கொண்டும், நிறும நலன் கருதியும் முடிவு எடுக்கப்படும். ஒரு நிறுமம் சிறந்த யுக்திகளைத் தேர்வு செய்வது என்பது, நிறுமத்தின் பொருள்கள், பணிகள் மற்றும் சேவைகளை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்துவது எனத் திட்டமிடுவதாகும். இந்த நிறுமத்துறை யுக்தியானது, நிறும உயர் அதிகாரிகளால் எடுக்கப்படுகிறது. அதாவது நிர்வாகக்குழு இயக்குநர்கள், தலைமைச் செயல் அதிகாரி, உற்பத்தி, விற்பனை, நிதி, மனிதவளம் சார்ந்த துறைகள்.

### 3) தொழிற்துறை சார்ந்த யுக்திகள்

தொழிற்துறை யுக்திகள் என்பது ஒவ்வொரு தொழில் துறையும் ஒவ்வொரு விதமான யுக்திகளைக் கடைபிடிப்பது வழக்கமாகும். அதாவது, உற்பத்தித்துறை, சந்தைத்துறை, விற்பனைத்துறை, நிதித்துறை, பொருள்துறை , பணி தொடர்பான துறை என பல துறைகள் இருக்கும் போது அதன் தன்மைக்கு ஏற்ப யுக்திகளைக் கடைபிடிக்கின்றன. ஒவ்வொரு துறையும் அதனுடைய இலக்குகள், நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடையும் போது நிறுவனத்தினுடைய பொதுவான எல்லா நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அடைந்துவிடலாம். நிறுவனத்தின் ஒவ்வொரு துறையும், தமது செயல்பாடுகளை நிறைவேற்றினால் அதனுடைய குறிக்கோள்களை அடையலாம். மேலும் ஒவ்வொரு தொழில் துறைக்கும் தனித்தனி துணைப் பிரிவுகள் உண்டு, அவை ஒவ்வொன்றும் செவ்வனே செயல்படுவது அவசியமாகும். இம்மாதிரியான துணைப் பிரிவுகள் செவ்வனே செயல்

பட்டு, முக்கிய பிரிவிற்கு உதவும் போது நிறுவனத்தின் ஒட்டு மொத்தச் செயல்பாடுகள் வெற்றிகரமாக செயல் பட முடியும்.

### மேலாண்மையின் தந்திரமான யுக்திகள்

இன்றைய உலகில் வனிகத்தில் மட்டுமின்றி அனைத்து துறைகளிலும் போட்டி நிலவுகிறது. வணிகப் போட்டி உள்நாட்டுச் சந்தை மட்டுமின்றி உலகச் சந்தைக்கும் பொருந்தும். முடிவு எடுத்தல் என்பது அதிலும் உயர்மட்ட மேலாண்மை முடிவுகள் வணிகத்தைச் சார்ந்து இருப்பதால், உரிய நேரத்தில் முடிவு எடுக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். மேலும் உரிய நேரத்தில் மேலாளர்கள் முடிவு எடுக்கத் தவறினால் சந்தையில் உள்ள போட்டியாளர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வார்கள். எனவே மேலாளர்கள் திறம்பட செயல்பட வேண்டியது அவசியமாகிறது.

பொதுவாக வணிக முடிவுகளை, சாதாரண அல்லது வழக்கமான முடிவுகள் என்றும், முக்கியமான அல்லது யுக்தியான அல்லது தந்திரமான முடிவுகள் என்றும் வகைப்படுத்தலாம். சாதாரண முடிவுகள் என்பது ஏற்கனவே ஒழுங்கு படுத்தப்பட்ட செயல் முறைகளைப் கடைபிடித்து எடுக்கும் முடிவு ஆகும். யுக்தியான முடிவுகள் என்பது அவ்வப்போது, சூழ் நிலைக்கு ஏற்ப உடனடியாக எடுக்கப்படும் முடிவுகளாகும். மேலும் முடிவு எடுப்பது நிச்சயமற்ற அபாயமான , நிச்சயமான நிலமைகளைச் சந்திக்க நேரலாம். மேலும் முடிவுகள் மேற்கண்டபடி திட்டமிட்டோ அல்லது திட்டமிடாதபடியோ எடுக்க நேரிடலாம், முடிவுகளைச் செயல் படுத்திய பிறகு அவற்றைத் தொடர்ந்து கண்காணித்து அதன் பலன்களை ஆராய்ந்து எங்கெல்லாம் மாற்றங்கள் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் மாற்றங்களைச் செய்ய வேண்டும். அப்பொழுது தான் நிறுவனம் சரியான பாதையில் பயணிக்கும்.

### யுக்தி மேலானமையின் வகைகள்

நிறுமங்கள் செயல்படுத்தும் யுக்திகளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை




**படம் எண் 1.2.3 யுக்தி மேலாண்மையின் வகைகள்**

**(1) நிறும அளவிலான யுக்திகள்**

நிறும அளவிலான யுக்திகள் என்பது நிறும உயர் மட்ட தலைவர்கள், மேலாளர்கள் மற்றும் அதிகாரிகளால் நிறும நீண்டகால வளர்ச்சிக்காக எடுக்கப்படும் யுக்தியாகும். உயர் மட்ட அதிகாரிகளால் எடுக்கப்படும் நிர்வாக முடிவுகள், கிளைகட்கு எடுக்கப்படும் நிர்வாக முடிவுகள், வளங்களைப் பகிர்தல், முதலீடுகளை நிர்வாகம் செய்தல், நிறும விரிவாக்கம் செய்தல், நிறுவனங்களைப் பிற நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுதல், போட்டியினை எதிர்கொள்ளுதல் என்பனவாகும். இத்தகைய முடிவுகள் உயர்மட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுவதால், இதனை நிறும அளவினான யுக்திகள் என்கின்றோம். சுருக்கமாகக் குறிப்பிடுகையில் நிறும அளவிலான யுக்திகள் என்பது ஒரு நிறுவனத்தின் உயர்மட்ட அதிகாரிகளால் எடுக்கப்படும் யுக்தி பூர்வமான முடிவுகள் ஆகும். குறிப்பாக அதில் காணப்படும் யுக்திகள் பெரும்பாலும்.

- (i) நிறும விரிவாக்க யுக்திகள்
- (ii) நிறும நிலைத் தன்மையான யுக்திகள்
- (iii) வணிக செயல்பாட்டு எல்லையை கொண்டு செயல்படும் யுக்திகள்
- (iv) இரண்டுக்கு மேற்பட்ட நிறுவனங்களை ஒன்றிணைத்து செயல்படும் யுக்திகள்
- (v) பன்னாட்டுச் சந்தையில் ஈடுபடும் யுக்திகள்
- (vi) போட்டி சூழலை எதிர்கொள்ளும் யுக்திகள்
- (vii) வணிக நிறுவனங்களை இணைத்தல் யுக்திகள்
- (viii) போட்டி நிறுவனங்களை வாங்குதல்
- (ix) வணிக நிறுவனங்களை விரிவாக்கம் செய்தல்

என பல்வேறு புக்திகளை வகுத்து நிறும உயர் மட்ட அதிகாரிகள் நிறும அளவில் முடிவு எடுக்கின்றனர்.

**(2) வணிக அளவிலான யுக்திகள்**

வணிக அளவிலான யுக்திகள் என்பது ஒரு நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் தேவையைக் கண்டறிந்து அவர்களைத் திருப்திப் படுத்துவதே வணிக அளவிலான யுக்திகள் எனப்படும். மேலும் இத்தகைய யுக்திகள் நிறுவனத்தின் செயல்பாடுகளை அதிகரித்து வாடிக்கையாளர்களைத் தக்க வைத்து சேவைகளை வழங்கி போட்டிகளையும் எதிர்கொண்டு நிறுவனத்தை நிலைத் தன்மையுடன் வழி நடத்திச் செல்வதாகும். குறிப்பாக வணிக அளவிலான யுக்திகள் வணிக அமைப்பு, பொருட்களின் சந்தை அளவு, போட்டியாளர்களின் தரம், நிறுமத் தலைமையின் செயல்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிச் செயல்படுகிறது.

(3) **செயல்பாட்டு அளவிலான யுக்திகள்**

செயல்பாட்டு அளவிலான யுக்திகள் என்பது நிறுமத்தின் ஏதேனும் ஒரு குறுப்பிட்ட செயலை செய்வதற்கு மேற்கொள்ளப்படும் யுக்தியாகும். அதாவது நிறுவனம் தனது செயல்பாடுகளை செயல்படுத்தும் போது ஒவ்வொடு செயலுக்கும் யுக்திகளை வகுத்து செயல்படும். மேலும் நிறுமம் தனது நோக்கத்தை அடைதல், வளங்களைப் பகிர்தல் என பல்வேறு யுக்திகளை வகுத்துக் கொண்டு செயல்படுவதுடன் நிறுவன செயல்பாடுகளை சார்ந்து தனித்தனியான யுக்திகளுடன் செயல்படும் தன்மையுடையது எனலாம்.

இவ்வாறு யுக்தி மேலாண்மை நிறுவனங்களில் செயல்படுகிறது.

**யுக்தி சார்ந்த முடிவெடுத்தலின் சிறப்பியல்புகள்**

யுக்தி சார்ந்த முடிவெடுத்தலின் சிறப்பியல்புகள் பின்வருமாறு.

1) யுக்தி சார்ந்த முடிவெடுத்தல் எப்பொழுதும் எதிர்காலம் சார்ந்தது.
2) புக்தி என்பது மதிப்பு கூட்டு சார்ந்த செயல் ஆகும்.
3) நிறுமத்தின் ஒட்டுமொத்த செயல்களிலும் பரவியுள்ளது.
4) யுக்தி என்பது ஒரு நோக்கத்தின் இறுதியை அடையும்வரை.
5) யுக்தி என்பது வளங்களை நீண்ட காலத்திற்கு திட்டமிட்டு பகிரும் வகையில் அமைந்துள்ளது.
6) யுக்தி என்பது பெரும்பாலும் போட்டி சார்ந்து உள்ளது.
7) யுக்திகள் எப்பொழுதும் நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளுடன் இணைந்த செயல் ஆகும்.
8) பொதுவாக யுக்தி என்பது பலதரப்பட்ட தந்திரவழி முறைகளை உள்ளடக்கியதாக உள்ளது.
9) மேலும் யுக்தியானது எதிர்கால வணிக நிலைகளை முன்கணித்து செயல்படுகிறது.

**யுக்தி மேலாண்மை செயல்பாடுகள் படிநிலைகள்**

யுக்தி மேலாண்மை செயல்பாடுகளில் பல்வேறு நிலைகள் காணப்படுகின்றன. அவை:

1) யுக்திகளை வகுத்தல்
2) பார்வை, பணி மற்றும் நோக்கங்களைத் தீர்மானித்தல்
3) வலிமை, வலிமையின்மை, வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் – ஆய்வு
4) யுக்தியின் பல்வேறு வகைகளைக் கண்டறிதல்
5) சிறந்த யுக்தியைத் தேர்வு செய்தல் – பயன்பாடு சாதகத்தன்மை, ஒத்துக் கொள்ளுதல் என்பன
6) யுக்தியைச் செயல்படுத்தல்
7) யுக்தியை மதிப்பீடு மற்றும் கட்டுப்படுத்தல்

### யுக்தியின் நன்மைகள்

வனிக நிறுவன யுகதிகளின் பல்வேறு பயன்பாடுகளை இங்கு பார்ப்போம்.

1. யுக்தி மேலாண்மை ஒரு நிறுவனம் எதிர்கால திட்டமிட பெரிதும் உதவுகிறது.
2. நிறுவனம் தனது செயல்பாடுகளை வகுத்துக்கொள்ள பெரிதும் உதவும்.
3. நிறுவனம் தனது பணிகளை கட்டுப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் உதவுகிறது.
4. செயல்பாடுகளை அளவீடு செய்ய பெரிதும் உதவுகிறது.
5. நிறுமத்தில் வலிமை/வலிமையின்மையை அறிய முடிகிறது.
6. மேலும் நிறுவனத்தின் வாய்ப்புகள் மற்றும் அச்சறுத்தல்களை முன் கணிக்க முடிகிறது.
7. வணிக சூழலை மதிப்பீடு செய்ய உதவுகிறது.
8. நிறும போட்டி சூழலை எதிர்கொள்ள முடிகிறது.

**மாணவர் செயல்பாடு**

நீவிர் ஒரு குழுவாக இணைந்து யுக்தி மேலாண்மையின் சீராபிபியூகள் மற்றும் முக்கியதுவத்தை விளக்கவும்

## 1.3 பொருளாதாரம் சார்ந்த மற்றும் சாராச்சுற்றுச் சூழல்

### அறிமுகம்

வணிக மேலாளர் சூழ்நிலைக்கேற்றவாறு வணிகத்தை நகர்த்தி வழி நடத்துகிறார். ஒரு வணிகத்தின் வெற்றி அல்லது தோல்வி என்பது ஒரு சில காரணிகளைக் கொண்டே அமைகிறது. அதில் சில காரணிகளைக் கட்டுபடுத்த இயலும். சிலவற்றை கட்டுபடுத்த இயலாது. காரணிகளை பல்வேறு வகையாகப் பிரிக்கிறோம். அவை பொருளாதார, அரசியல், சமூக மற்றும் பண்பு காரணிகளாகும். நிறுவனங்கள் அமைப்பு பெரிய அளவில் இருக்கும் போது சூழ்நிலை சார்ந்த காரணிகள் மிகவும் சிக்கலான ஒன்றாக அமைகிறது. சில வணிக சுற்று சூழல் காரணிகள் மாறக்கூடிய தன்மையினதாகவும் சில நிலைத்தத் தன்மையுடையதாகவும் இருக்கிறது. வணிகத்தினை பாதிக்கும் காரணிகளாக சமூக பண்பு நலன்கள் மற்றும் ஜாதி சார்ந்த காரணிகளாக இருக்கும் போது அவை சந்தை சாரா சுற்றுச் சூழல் என்றழைக்கப்படுகிறது. பொதுவாகவே வணிகச் சுற்று சூழல் பொருளாதாரம் சார்ந்த மற்றும் பொருளாதாரம் சாரா காரணிகள் என இருவகைகளாகப் பிரிக்கப்படுகின்றது.




**படம் எண் 1.3.1 பொருளாதாரம் சார்ந்த மற்றும் சாரா சுற்றுச்சூழல்**

## வணிகத்தின் அடிப்படைப் பகுதிகள்

*1)* வணிகத்தை பொருளாதார நடவடிக்கைகளாகவும்

*2)* வணிக நிறுவனத்தை பொருளாதாரத்தின் ஒரு பிரிவாகவும்

*3)* வணிக முடிவுகளை பொருளாதார முறைகளாகவும் நாம் காணலாம்.

### 1) வணிகத்தை பொருளாதார நடவடிக்கைகள்

தொடக்க நிலை பொருளாதாரம் பற்றாக்குறையாக இருக்கக்கூடிய இயற்கை ஆதாரங்களை நன்முறையில் உபயோகித்து எவ்வாறு நம்முடைய கொள்கையை அடைவது என்பதனை கூறுகிறது. பல்வேறு அமைப்புகளான நுகர்வு, உற்பத்தி பகிர்வு மற்றும் மாற்றத்தை உள்ளடக்கியுள்ளது. ஒரு வணிக நிறுவனத்தினுடைய முதன்மை நோக்கமே பொருளாதார நடவடிக்கையில் ஓரளவு வெற்றியடைவதேயாகும். ஆகவே ஒவ்வொரு வணிக நிறுவனத்தினுடைய தன்மையினைப் பொறுத்து. அவற்றின் பொருளாதார செயல்பாடுகள் வேறுபடுகின்றது. எடுத்துக் காட்டாக உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்தியை முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளது. பங்கு மாற்றங்கள் முக்கியமாக பங்குகள் மற்றும் கடனீட்டு பத்திரங்களை வாங்கி விற்கும் தொழிலைச் செய்கிறது. வங்கியியல் தொழிலானது நீண்ட கால மற்றும் குறுகிய கால கடன்களை அளிக்கும் தொழிலை செய்கிறது. வணிகத்தை பொருளாதார நடவடிக்கைகளாக கூறுவதற்கு பற்றாக்குறையாக உள்ள வள ஆதாரங்களை நன்முறையில் பயன்படுத்திட நோக்கங்களை அடைவதே ஆகும்.

### 2) வணிக நிறுவனத்தை பொருளாதாரத்தின் ஒரு பிரிவு

வணிக நிறுவனம் உள்ளீடுகளை, வெளியிடுகளை மாற்றும் போது பொருளாதாரத்தின் ஒரு பிரிவாக கூறப்படுகிறது. உள்ளீடு வெளியீடாக மாற்றம் செய்யப்படுவது என்பது பொருட்களாக மட்டுமல்லாது அது சேவையாக கூட இருக்கலாம். உள்ளீடு மற்றும் வெளியீடுகளின் அளவு வணிகத்தின் அமைப்பு, தொழில்நுட்பம் ஆகிவற்றைக் கொண்டுமாறுபடுகிறது. ஆனாலும் வணிக நிறுவனங்கள் இலாபத்தினை அதிகப் படுத்துதை முக்கிய நோக்கமாக உள்ளது. இலாபத்தினை மீண்டும் உற்பத்தியில் முதலீடு செய்வதால் அதிக இலாபத்தினை அடைய முடிகிறது. ஆகவே வணிகத்தினை பொருளாதாரத்தின் ஒரு பிரிவாக நாம் கூறுகிறோம்.

### 3) வணிக முடிவுகளை பொருளாதார முறைகள்

முடிவு எடுத்தல் என்பது வணிகத்தில் ஒரு முக்கியமான பொருளாதார முறைகளாக கூறப்படுகிறது. பொருளாதாரத்தை பல்வேறுபட்ட முடிவுகளுக்கிடையே நல்லவற்றை தேர்ந்தெடுக்கும் அறிவியல் ஆகும். நம்மிடையே அளவுக்கதிகமான இயற்கை ஆதாரங்கள் இருக்கும் போது முடிவெடுத்தலில் சிரமங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே இயற்கை ஆதாரங்கள் பற்றாக்குறையாக

இருக்கும் போது அதில் எந்த ஆதாரத்தை நன்முறையில் பயன்படுத்தி நோக்கங்களை அடைய வேண்டும் என்பதனை முடிவு செய்கிறது. எனவே இப்பகுதியான வியாபார கொள்கைகள் மற்றும் தந்திரங்களை தேர்ந்தெடுக்கும் ஒரு முக்கியமான காரணியாக விளங்குகிறது.

### வணிகத்தின் பொருளாதாரச் சுற்றுச் சூழல்

வணிக நிறுவனம் என்பது சந்தையியல் முறையில் ஒரு வணிக நிறுவனமாக அழைக்கப்படுகிறது. பொருளாதார முடிவுகள் இருவகைப்படும் அவை. பேரியல் பொருளாதார முடிவுகள் மற்றும் நுண்ணியல் பொருளாதார முடிவுகள் ஆகும். பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதார முறையின் சிறப்பியல்பு கொண்டு முடிவு செய்யப்படுகிறது. மேலும் பொருளாதார சுற்றுச்சூழல் எந்தெந்த காரணிகள் வணிகத்தை பாதிக்கின்றன என்பதை காண்போம்.




**படம் எண் 1.3.2 வணிகத்தின் பொருளாதார சுற்றுச்சூழல்**

### 1) பணக் கொள்கையும் வணிகமும்

அரசானது தாராளமயமான பணக் கொள்கை பின்பற்றும் புதிய நிறுமங்களும் ஏற்கனவே உள்ள நிறுமங்கள் விரிவடைதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன. தாராள பணக் கொள்கையினால் கடன் அதிகமாக பெறுவதற்கும் குறைந்த சதவீத கடன் மூலம் நிறுவனங்களை மேம்படுத்துவதற்கும் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. கடன் வசதிகளை அதிகப்படுத்துவதாலும் கடன்வட்டி சதவிகித மாற்றத்தினால் வணிகமானது பேரளவில் பாதிக்கப்படுகிறது.

கடந்த அக்டோபர் மாதம் 2019 மற்றும் நவம்பர் 2019 ல் கிட்டதட்ட 5 லட்சம் கோடி அளவில் மத்திய அரசு வங்கிகள் மூலம் கடன்கள் வழங்கியுள்ளது.

**அட்டவணை 1.1 வங்கிகள் மூலம் இந்திய அரசு வழங்கிய கடன்**

| கடன் வகை | அக்டோபர் 2019 (கோடிகளில்) | நவம்பர் 2019 (கோடிகளில்) | மொத்தம் (கோடிகளில்) |
|---|---|---|---|
| சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவங்கள் | 37,210 | 35,775 | 72,985 |
| வங்கிகள் இல்லாத நிதி நிறுவங்கள் கடன் | 17,163 | 25,005 | 42,168 |
| நிறுவங்கள் கடன் | 122,785 | 97, 366 | 220,151 |
| வீட்டுக் கடன் | 12,166 | 15,008 | 27,254 |
| வாகன கடன் | 7,085 | 4,003 | 11,088 |
| கல்வி கடன் | 425 | 686 | 1,111 |
| விவசாய கடன் | 40,504 | 37,870 | 78,374 |
| மற்றவை | 15,250 | 23,454 | 38,704 |
| மொத்தம் | **2,52,589** | **2,39,245** | **4,91,834** |

**ஆதாரம் :** இந்திய நிதி அமைச்சகம் வெளியீடு (2019)

### 2) நிதிக் கொள்கையும் வணிகமும்

நிதிக் கொள்கை என்பது வரிவதிப்பானது பொதுக் கடன் மற்றும் பொதுச் செலவு ஆகியவை நாட்டின் மேம்பாட்டிற்காக எவ்வாறு உபயோகப்படுகிறது என்பதை கூறுவதாகும். நிதிக்கொள்கை என்பது வளர்ச்சியடையா நாடுகளைப் பொறுத்த வரையில் பொருளாதார மேம்பாட்டிற்கு முக்கியமாக கருதப்படுகிறது. நிதிக் கொள்கையானது நுகர்வு, முதலீடு மற்றும் செலவினை நேரடியாக பாதிக்கிறது. எனவே நிதிக் கொள்கையானது ஒன்று மக்களின் வருமானத்தை அதிகரிக்கிறது அல்லது குறைக்கிறது வருமானத்தை கூட்டுவதோ அல்லது குறைப்பதோடு மட்டுமல்லாமல் தேவையினை அதிகரிக்கிறது. நிறுவங்கள் செலுத்தக்கூடிய வரியை இந்திய அரசு 30 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக குறைத்துள்ளது. இதன் மூலம் உலக முதலீட்டாளர்களை சீனாவிலிருந்து இந்தியாவுக்கு ஈர்த்துள்ளது. ஏனென்றால் சீனாவில் நிறுவனங்கள் செலுத்தக்கூடிய வரியானது 25 சதவீதமாகும்.

### 3) வெளிப்படையான கட்டுபாடும் வணிகமும்

இந்த பகுதியில் அரசால் ஆணையிடப்படும் நடவடிக்கைகள் அல்லது வெளிப்படையான கட்டுப்பாடுகள் ஆகும். அவை அனுமதிக் கொள்கை அல்லது விலைக் கொள்கை ஆகும். சிலவகையான கட்டுப்பாடுகள் தேசிய நலனுக்காக மேற்க் கொள்ளப்படுகின்றன. கடத்தலுக்கு எதிரான கட்டுப்பாடு, பதுக்கலுக்கு எதிரான கட்டுப்பாடாகும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கும் இடையே நல்ல கட்டுப்பாடு இருக்க வேண்டும். 2019 டிசம்பர் முதல் வாரத்தில் அன்னிய

செலாவணி இருப்பு இதுவரை இல்லாத அளவில் 453 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

### 4) அயல்நாட்டு வணிகச் கொள்கையும் வணிகமும்

தற்போது நாடுகள் அனைத்தும் வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபடுகின்றன. ஒன்று பொருட்களை இறக்குமதி செய்வதற்கோ அல்லது ஏற்றுமதி செய்வதற்கோ வணிகத்தில் ஈடுபடுகின்றன. தாராளமயமான வணிக கொள்கை மட்டுமே வணிக நிறுவனத்தை முன்னேற்றுகின்றது. கடந்த அக்டோபர் 2019 ல் நாட்டின் ஏற்றுமதி 1.90 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது. இறக்குமதி 2.69 லட்சம் ரூபாய் அளவுக்கு நடந்துள்ளது. வாரா பற்றாக்குறை 79,200 கோடி ரூபாய் அளவுக்கு குறைந்துள்ளது. மொத்தம் 30 முக்கிய துறைகளில், 18 துறைகளில் ஏற்றுமதி வளர்ச்சி சரிவை கண்டுள்ளது.

### 5) பொருளாதார முறையும் வணிகமும்

பொருளாதார முறை என்பது மக்களுடைய விருப்பத்தை நிறைவேற்றக் கூடிய அளவுக்கு இருக்கவேண்டும். வணிகக் கட்டமைப்பு என்பது நாட்டினுடைய பொருளாதார முறையை ஒத்தே அமைகிறது. முதலாளித்துவ பொருளாதார முறையானது தனியார் வகை நிறுவனங்கள் வளர்ச்சியை மட்டுமே ஊக்குவிக்கிறது. இந்திய நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 55 சதவீதம் அளவுக்கு பங்கு வகிக்கிறது சேவைகள் துறை.

### 6) பொருளாதார திட்டமிடலும் வணிகமும்

முதலாளித்துவ பொருளாதாரத்தில், பொருளாதார வளர்ச்சி என்பது தனி நிறுவனங்களின் வளர்ச்சியையும் சந்தை மாற்றங்கள் மற்றும் விலையைப் பொருத்தே அமைகிறது. ஆனால் பொதுவுடமை மற்றும் கலப்பு பொருளாதாரத்தில் பொருளாதார திட்டமிடல் என்பது வணிக நடவடிக்கைகளை சரி செய்யக்கூடிய ஒரு கருவியாக திகழ்கிறது. வணிக நிறுவனங்கள் தங்களுடைய நிறுவனத்திற்குரிய கொள்கைகள் தந்திரங்களை ஆகியவற்றை உருவாக்கும் போது தேசிய கொள்கையினை கருத்தில் கொண்டே உருவாக்க வேண்டும். என்ன தயாரிக்க வேண்டும், எப்படி தயாரிக்க வேண்டும். யாருக்காக தயாரிக்க வேண்டும் என்பதை மத்தியத் திட்டக் குழு கொடுக்கும் தகவலின் அடிப்படையிலேயே முடிவு செய்ய வேண்டும். நாடு தழுவிய பொருளாதார கணக்கெடுப்பு, அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நிறைவு பெறும்.

### 7) கட்டமைப்பு வசதிகள்

வணிகமானது நன்கு வளர்ந்து நல்ல பலன்களைத் தரவேண்டுமானால் நல்ல கட்டமைப்பு வசதிகள் அவசியமாகும். கட்டமைப்பு வசதிகள் என்பது இரயில், தரைவழி, வான்வழி போக்குவரத்து வசதிகள். காப்பீடு, பாலங்கள், அணைக் கட்டுகள், கால் விசை உற்பத்தி, வங்கி, கல்வி, தொழில் நுட்பத் தகவல் தொடர்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். வரும் ஆண்டுகளில் கிராமப்புற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பிரதமர் திரு. மோடி அரசு 45 லட்சம் கோடி முதலீடு செய்கிறது.

8) சந்தையின் அளவு

வணிகத்தின் அளவானது சந்தையின் அளவினை சார்ந்துள்ளது. தேவைக் குறைவு வளர்ச்சியடையாத சந்தைகள் ஆகிய இரண்டும் வியாபாரத்தில் முதலீடு செய்பவர்களை ஊக்குவிப்பதில்லை. நவீன வாணிகத்தில் பன்னாட்டு வணிகத்தின் வளர்ச்சியால் பன்னாட்டு சந்தையும் வளர்ச்சியடைந்துள்ளது.

மேற்கூறிய உண்மைகளிலிருந்து சுற்றுச்சூழல் என்பது சில தடைகளுக்கு உட்பட்டே நவீன வணிகத்தினை நடத்த வேண்டியுள்ளது. வணிகமானது அரசின் கொள்கையையோ தேசிய திட்டமிடலின் நோக்கத்தினையோ விடுத்து தன்னுடைய பணியில் ஈடுபட முடியாது. ஒரு நல்ல மேலாண்மை என்பது வணிகத்தில் ஏற்படும் மாற்றத்தினையோ மேலும் எந்த வகையில் மாற்றம் ஏற்படுகிறது என்பதை அறிவிக்க வேண்டும்.

## பொருளாதாரம் சாரா சுற்றுச்சூழல்

பொருளாதாரம் சாரா சுற்றுச் சூழல் என்பதை கண்டு பிடிப்பது மிகவும் கடினமான காரியம் ஆகும். ஆயினும் நாம் கொடுத்திருக்ககூடிய அளவு கோல்களைக் கொண்டு நம்முடைய ஆய்வினை எளிதாக முடிக்கலாம். பொருளாதாரம் சாராச் சுற்று சூழல் மொத்தம் ஐந்து பகுதிகளாக பிரிக்கப் படுகிறது.




படம் எண் 1.3.3 பொருளாதாரம் சாரா சுற்றுச்சூழல்

### 1. சமூகவியல் காரணிகள்

சமூகவியல் காரணிகளில் மிக முக்கியமாக வணிகச் சுற்றுச் சூழலை பாதிக்கும் காரணிகளாக உற்பத்தி வழிமுறைகள், செல்வம் மற்றும் வருமானப் பகிர்வு, வாய்ப்புகளில் சம உரிமை, பொது நலம், கட்டமைப்பு ஆகியவை அடங்கும். ஆனால் இக்காரணிகள் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும். சமூக காரணிகள் பொருளின் தன்மை, பொருளின் தரம் சந்தையியல் தந்திரம் ஆகியவற்றை முக்கியமாக கொண்டுள்ளது. பெரும்பாலான இந்திய மாநிலங்களில் மூதாதையோர் சொத்துரிமை தந்தையிடமிருந்து மகனுக்கு செல்லும். ஆனால் மேகாலயாவை சார்ந்த காரோ மற்றும் காசி பழங்குடி இனத்தவரிடையே மூதாதையோர் சொத்துரிமை தாயிடமிருந்து மகளுக்கு செல்லும்.

## 2. கல்வி மற்றும் பண்பு சார்ந்த காரணிகள்

கல்வி மற்றும் பயிற்சி ஆகியவை தொழிற்சாலைக்கு திறமை வாய்ந்த பயிற்சி பெற்ற முழுத்தகுதி வாய்ந்த பணியாளர்களை தருகிறது. மேலாண்மைத் திறமை என்பது தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டினை சார்ந்தே உள்ளது. கல்வி மட்டுமே திறமைவாய்ந்த தகுதி பெற்ற தொழிலாளர்களை அளிக்க முடியாது. குறிப்பிட்ட பயிற்சி மற்றும் கல்வியின் மீது மக்களுக்கு ஒரு நம்பகமான தன்மையினைப் பொறுத்தே அமைகிறது. இந்தியா மின்னணு வணிகத்தில் 50000 சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு பயிற்சி தர வால்மார்ட் ஒப்புக்கொண்டுள்ளது.

பண்பு சார்ந்த காரணி என்பது பொருளாதாரம் சாரா காரணிகளில் ஒன்றாக அமைகிறது. மக்களுடைய பண்பு மற்றும் அவர்களுடைய விருப்பு வெறுப்பிற்கு ஏற்றவாறு அவர்களுடைய நுகர்வுத் தன்மையும் மாறுபடுகிறது. ஆகவே மக்கள் ஒரே மாதிரியான பொருளினை உபயோகித்தாலும் நுகர்வுக்கேற்றவாறு சந்தை மற்றும் நாட்டுக்கு நாடு பண்பு சார்ந்த காரணிகள் வேறுபடும்.

## 3. வரலாற்றுக் காரணிகள்

உலகத்திலுள்ள அனைத்து நாடுகளின் தற்போதைய சூழ்நிலை என்பது பழைய சூழ்நிலையைப் பொறுத்தே அமைகிறது. பல நிறுவனங்கள் ஒன்று தங்களுடைய பழைய நிறுவனத்தினை புதுமைப்படுத்துகின்றன. சமீபத்தில் டைட்டன் நிறுவனம் "**நம்ம தமிழ்நாடு கலெக்சன்**" என்ற பெயரில், தமிழக கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் விதமாக காஞ்சி பட்டு மற்றும் தமிழ் எழுத்துக்கள் பொருந்திய கை கடிகாரத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தியுள்ளது.

## 4. அரசியல் சார்ந்த காரணிகள்

அரசாங்கமே வணிகத்தின் கட்டமைப்பினையும் தன்மையினையும் முடிவு செய்கிறது. இம்முடிவினை கொள்கையின் வாயிலாகவே எடுக்கப்படுகிறது. வணிக நடவடிக்கைகள் அனைத்துமே அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் தத்துவங்களை பாதிக்கின்றன. ஜனநாயக அமைப்பானது எந்த கட்சி அரசினை ஆட்சி செய்கிறேதோ அவர்களுடைய முறையிலேயே வணிகக் கொள்கைகள் மற்றும் தந்திரங்கள் ஆகியவை கையாளப்படுகின்றது. அரசியல் சார்ந்த காரணிகள் என்பது சமுதாய நலம்மிக்க வணிகத்தை ஊக்குவிக்கிறது.

## 5. சட்டம் சார்ந்த காரணிகள்

அரசியல் சார்ந்த காரணிகளின் வெளிப்பாடே சட்டம் சார்ந்த காரணியாகும் அரசியல் சார்ந்த காரணி என்பது அரசியல் மற்றும் சட்ட காரணியாகும் வணிகமானது சட்டவிதிகள் மற்றும் நடைமுறைகளைச் சார்ந்தே உள்ளது. இந்தியாவில் மறைமுக வரிகள் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி என்றார் பெயரில் ஒரே வரியாக அமல்படுத்தப்பட்டுள்ளது.

## பொருளாதாரம் சார்ந்த மற்றும் சாராச் சுற்றுச் சூழலின் ஒருமித்த செயல் விளைவுகள்

பொருளாதாரம் சார்ந்த மற்றும் பொருளாதாரம் சாரா காரணிகள் ஒன்றோடு ஒன்று மற்றொன்றுடன் பின்னி செயலாற்றுகின்றன. ஆகவே ஒன்று மற்றொன்றை பாதிக்கின்றது. பொருளாதாரச் சுற்றுசூழல் மிகவும் சக்தி வாய்ந்தது. ஆகவே இது பொருளாதாரம் சாரா சுற்றுச் சூழலையும் பெரிதும் பாதிக்கிறது. அனைத்துக் காரணிகளையும் ஒன்றிணைந்து ஒன்று மற்றொன்றுடன் எவ்வாறு பின்னி செயல்படுகிறது என்பதை காண்போம்.

### 1. இயற்கை சார்ந்த சுற்றுச் சூழலுக்கும் பொருளாதார சுற்றுச் சூழலுக்கும் இடையிலான ஒருமித்த செயல் விளைவு

நம்நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நமது அரசு இயற்கைச் சுற்றுச் சூழல் மீது ஏற்படும் பாதிப்புகளைக் கருத்தில் கொள்ளாது பல்வேறு தொழிற் சாலைகளையும் அனைத்து இடங்களிலும் அமைக்க ஊக்குவித்தது. தொழிலதிபர்களும் இயற்கை வளங்களை முழுவதும் உபயோகிக்க அனுமதிக்கப்பட்டனர். அப்பொழுது தான் அரசானது சுற்றுச்சூழல் மாசுபடுவதை சிந்தித்தது. அதன் விளைவாக இயற்கை வாழ்க்கையில் ஏற்படக் கூடிய அழிவையும் உணர்ந்துள்ளது. தற்போது அரசு மாநகர்ப் பகுதியிலிருந்து 75 கி.மீ. தூரத்திற்குள்ளும் பெரிய நகரங்களிலிருந்து 35 கி.மீ. தூரத்திற்கும் எந்தத் தொழிற் சாலைகளையும் தொடங்க அனுமதிப்பதில்லை. இக்காரணியானது கண்டிப்பாக பொருதாதாரப் பிரச்சனைகளை எழுப்பி இட அமைப்பு சார்ந்த பிரச்சனைகளை உருவாக்கும் சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

### 2. வரலாறு சார்ந்த சுற்றுச் சூழலுக்கும் பொருளாதாரச் சுற்றுச் சூழலுக்கும் இடையிலான ஒரு மித்த செயல் விளைவு

நிகழ்காலம் என்பது கடந்த காலத்தின் ஒரு பிரதிபலிப்பு ஆகும். நிகழ்கால சூழ்நிலையானது கடந்த காலத்தில் நாம் பெற்ற அனுபவத்தின் உதவி கொண்டு கையாளப்படலாம். பொருளாதார சுற்றுச்சூழல் நமது நாட்டின் கடந்த கால ஆதிக்கத்தின் விளைவே ஆகும். கடந்த கால நிகழ்ச்சிகளே தற்போதைய பொருளாதாரக் கொள்கை முடிவுகளுக்கு வழிகாட்டிகளாக சட்டம் அளிக்கிறது.

### 3. சமூகம் மற்றும் பண்பு சார்ந்த சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார சுற்றுச் சூழல் ஆகியவற்றிற்கு இடையிலான ஒருமித்த செயல் விளைவு

வணிகத்தை நோக்கிய சமூகப் போக்கே தனியார் வணிகத்தை தமது வாழ்க்கைப் பணியாக ஏற்றுக் கொள்ளும் மக்களின் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. சிலர் அபாயகரமான வேலையில் ஈடுபட எப்போதும் தயங்க மாட்டார்கள். இவ்விதப் போக்கு இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. குறிப்பாக வடநாட்டில் வாழும் மக்கள் அபாயத்தை ஏற்கும் வகையினராவார்கள். இவர்கள் நாடு முழுவதும் வணிக நிறுவனங்களை நிறுவி உள்ளனர். ஆனால் நம்மாநில மக்கள் பெரும்பாலான புதிய திட்டங்களில் ஈடுபட மிகவும் தயங்குகின்றனர்.

4. **அரசியல் மற்றும் சட்டமுறை சார்ந்த சுற்றுச் சூழலுக்கும் பொருளாதார சுற்றுச் சூழலுக்கும் இடையிலான ஒருமித்த செயல் விளைவு**

அரசியல் மற்றும் பொருளாதார சுற்றுச் சூழலுக்கு இடையே ஒரு நேரடி உறவு முறை நிலவுகிறது. அரசியலில் ஸ்திரத்தன்மை நிலவும் சூழ்நிலையில் வணிக நடவடிக்கைகள் வளம் பெறும், புதிய நிறுவனங்கள் தொடங்கப்படும். ஆனால் மாறாக அரசியல் சுற்றுச் சூழல் ஸ்திரமற்று இருப்பின் தொழில் முனைவோர் புதிய முயற்சிகளில் இறங்க மாட்டார்கள் மேற்கு வங்காளம் மற்றும் கேரளாவில் இருந்த பெருமளவிலான தொழில் நிலையங்கள் அங்கு நிலவிய சுற்றுச் சூழலின் காரணமாக வேறு மாநிலங்களுக்கு மாற்றப்பட்டு விட்டன. தேசிய மயமாக்கலுக்கான அச்சுறுத்தல் இருந்தால், தனியார் தொழில் முனைவோர் தங்களின் இயக்கங்களை விரிவுபடுத்த மாட்டார்கள். நமது தொழில் கொள்கைத் தீர்மானம் 1948 இதற்கு ஒரு முன் உதாரணம். பின்னர் 1956ல் இந்த அச்சுறுத்தல் ஒரு வழியாக களையப்பட்டு தனியார் தொழில் முனைவோர் புதிய முயற்சிகளைத் தொடங்க அனுமதிக்கப்பட்டனர்.

மேலே கூறப்பட்ட விவரங்களிலிருந்து பொருளாதாரச் சுற்று சூழல் காரணிகள் எவ்வாறு பொருளாதாரம் சாரா சுற்றுச் சூழல் காரணிகளுடன் பின்னி ஒருமித்த விளைவுகளை ஏற்படுத்துகிறது என்று கண்டோம். பல்வேறு சுற்றுச் சூழல்களும் ஒன்றை பாதித்தும் மற்றும் ஒன்று மற்றொன்றால் பாதிக்கப்பட்டும் உள்ளன. ஆகவே வணிகமும் அதன் சுற்றுச் சூழல் பரஸ்பரம் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளது.

குறிப்பாக கடந்த 20 ஆண்டு காலமாக நமது முன்னோர்களும் நாமும் கூட நினைத்துப் பார்க்காத அளவிற்கு சுற்றுச் சூழலின் பல்வேறு பகுதிகளிலும் மாற்றங்கள் ஏற்பட்ட வண்ணமே உள்ளது. உண்மையில் சொல்லப் போனால் இம்மாற்றங்கள் புரட்சிகரமானதாகவே உள்ளது. இன்றைய வணிகர்கள் எதிர்பாராத அறைகூவல்களை சந்திக்க வேண்டியுள்ளது. ஆகவே உலகெங்கிலும் உள்ள பல நிறுவனங்கள் நாளைய தொழில் நுட்பத்தை இன்றே கொண்டு வர முயல்கின்றன.

**மாணவர் செயல்முறை**
பொருளாதாரம் சார்ந்த மற்றும் சாராத சுற்றுச்சூழலின் இயல்புகளை ஒரு குழுவாக ஆலோசிக்கவும்

## 1.4 தொழில் நுட்ப சுற்றுசூழல்

### அறிமுகம்

தொழில் நுட்பம் என்பது உற்பத்தியில் ஒரு இடுமானமாகும். தொழில் நுட்பம் என்பது ஏற்கனவே இருக்கக்கூடிய வளத்தினை அல்லது உற்பத்தி காரணியினைக் கொண்டு புதிய பொருட்களை உற்பத்தி செய்ய வழிவகுக்கிறது. தொழில் நுட்ப வளர்ச்சி எனப்படுவது ஒரு தொழிலாளரின் அளவினை உயர்த்தக் கூடிய தொழில் முறை மாற்றமேயாகும். தொழில் நுட்ப மாறுதல்

எனப்படுவது பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் தெரிந்த தொழில் நுட்பங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய உற்பத்தி முறையேயாகும்.

தொழில் நுட்ப மாறுதல் என்பது தெரிந்த தொழில் நுட்பங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய உற்பத்தி முறை என்று கூறிய போதிலும் வளர்ச்சியடைந்த நாடுகள் அனைத்து தொழில்




**படம் எண் 1.4.1 தொழில்நுட்ப சுற்றுச்சூழல்**

நுட்பங்களையும் பயன்படுத்துவதில்லை. ஏனென்றால் அந்நாடுகளில், அந்தந்த தொழில் உள்ள நிலையான முதலீட்டிற்குத் தக்கவாறும், விளைவு விதிகளுக்குத் தக்கவாறும், அங்காடி அமைப்பு, பற்றாக்குறை போன்ற ஒன்றுக்கொன்று தொடர்புள்ள பல்வேறு காரணிகளுக்கு தக்கபடி தொழில் நட்பத்தைப் பயன்படுத்துகின்றனர்.

## தொழில்நுட்பத்தை பாதிக்கும் காரணிகள்

ஏற்கனவே சொல்லியபடி புதிய கண்டுபிடிப்பு என்பது அறிவியற் தன்மையுடன் தொடர்புடையது. அதனை பயன்படுத்துவது பொருளாதாரத் தன்மையுடையது. ஆகவே பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புடைய புதிய கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்த தூண்டும் காரணிகளை பொருளாதார காரணிகள் மற்றும் இதர காரணிகள் எனவும் பிரிக்கலாம்

## பொருளாதாரக் காரணிகள்

தொழில் முயல்வோர்கள் புதிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துவதற்கு இலாப நோக்கமே காரணமாகும். சில கண்டுபிடிப்புக்கள் உற்பத்திச் செலவினை குறைக்கலாம், அல்லது அதே உற்பத்திச் செலவிற்கு தரம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்யலாம். எப்படி இருந்த போதிலும்இலாப நோக்கத்தோடு தான் தொழில் முயல்வோன் செயல்படுகிறான். ஆகவே புதிய கண்டுபிடிப்புகளுக்கு முக்கிய காரணம் இலாப நோக்கம் ஆகும்.

### இதர காரணிகாளவன

1) பயன்படுத்தத் தக்க கண்டுபிடிப்பு நடவடிக்கைகள்;
2) தொழில் முயல்வோர்கள் இத்தகைய வாய்ப்பினை அங்கிகரித்து ஏற்றுக் கொள்ளல்;
3) புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்த நிதி வசதி போன்றவையாகும்.

### கண்டுபிடிப்புகளை பயன்படுத்துதலின் விளைவுகள்

புதிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் பின்வருமாறு:

#### 1. உற்பத்திக் காரணிகளின் தொகுப்பில் மாற்றம்

புதிய கண்டுபிடிப்பின் விளைவாக மூலதனம் சேமிக்கப்பட்டுத் தொழிலாளர் அதிகமாக பயன்படுத்தப்படலாம், மூலதன - தொழிலாளர் விகிதாச்சாரம் மாறலாம். பொதுவாக புதிய கண்டுபிடிப்புக்கள் நீண்ட காலத்தில் மூலதனத்தை அதிக அளவில் பயன்படுத்தும்படி அமையும்

#### 2. சிக்கனம்

தொழில்நுட்ப வளர்ச்சியானது தொழில் விரிவிற்கு பயன்பட்டு உற்பத்தி செலவினை குறைக்க உதவுகின்றது.

#### 3. உற்பத்தித் திறன் உயர்வு

குறிப்பிட்ட சில உற்பத்தி காரணிகளைத் திறமையாகப்பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தியினைப் பெருக்கி, உண்மை வருவாயை உயர்த்துகின்றது.

#### 4. தொழில் அமைப்பில் மாற்றம்

தொழில்நுட்ப மாற்றத்தினால் தொழில் அமைப்பில் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு உதாரணமாக சிற்றளவு தொழிலான கைவினைத் தொழில், தொழில் நுட்ப மாற்றத்தின் பயனாக பெருமளவில் தரம்வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்கின்றது.

### தொழில் நுட்பமும் பொருளாதார வளர்ச்சியும்

சரியான தொழில் நுட்பத்தைத் தேர்ந்தெடுப்பது என்பது மிகவும் அவசியமானது ஆகும். ஏனென்றால் சில நுட்பங்கள் உற்பத்திக் காரணிகளுள் சிலவற்றை அதிகமாகவும் மற்றும் சில காரணிகளைச் சரியான முறையில் கலந்து பயன்படுத்த சரியான தேர்வு செய்வது அவசியமாகின்றது.

சரியான நுட்பத்தினைத் தேர்வு செய்யும்பொழுது, எந்த தொழிலிலும் கட்டுமான பணிக்கும் உற்பத்திக்கும் இருக்கும் காலத்தினைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது தொழிலில் இருந்து கிடைக்கும் பலன் மிக குறுகிய காலத்தில் கிடைக்குமா அல்லது நீண்ட காலத்தில் கிடைக்குமா என்பதனை அறிவது அவசியம் ஆகும்.

பலவிதமான தொழில் நுட்பங்கள் பல்வேறு அளவுகளில் தொழிலாளர், இயந்திரங்கள், மூலப்பொருட்களைப் பயன்படுத்தக் கூடியவைகளாக இருக்கின்றன. பின்தங்கிய நாடுகளில் இத்தகைய சூழ்நிலை நிலவும் பொழுது வளர்ச்சி வீதத்தை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டு அதற்குத் தக்க தொழில் நுட்பத்தினை தேர்வு செய்தல் வேண்டும். உண்மையில் எல்லா பின்தங்கிய நாடுகளுக்கும் பொருந்தக் கூடிய ஒரு தொழில் நுட்பத்தினைத் தெரிவு செய்வது என்பது இயலாத காரியம். ஏனென்றால் ஒவ்வொரு நாட்டிலும், நாட்டு வருவாயும், மூலதனத் திரட்சியும், மக்கள் தொகை பெருக்கமும் மற்ற காரணிகளும் மாறுபட்டிருக்கும். ஆகவே இவைகளை மனத்தில் கொண்டே அந்தந்த நாட்டுக்கேற்ற தொழில் நுட்பத்தினைத் தேர்வு செய்தல் வேண்டும். இதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. நடப்பில் கிடைக்கும் காரணிகள்

நடப்பில் கிடைக்கும் வளங்களும் உற்பத்திக் காரணிகளும் தான் எத்தகைய தொழில் நுட்பத்தினைத் தேர்வு செய்யவேண்டும் என்பதனை தீர்மானிக்கிறது.

2. ஏற்கனவே உள்ள தொழில் நுட்பம்

எந்த ஒரு புதிய தொழில் நுட்ப முறையினை கையாலுமுன் ஏற்கனவே நடைமுறையில் உள்ள தொழில் நுட்பத்தினை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.

3. கிடைக்கும் வளத்தினை பொருத்தது

எந்த தொழில் நுட்பத்தையும் தேர்வு செய்ய கிடைக்கக் கூடிய வளத்தினை கவனத்தில் கொள்ள வேண்டும். தற்பொழுதுள்ள வளம், பரீட்சார்ந்த ரீதியில் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தவும், உற்பத்தி அளவில் மாறுதல் ஏற்படுத்த உதவுகிறது. இந்த அடிப்படையில் மூலதனம் முக்கியம் வாய்ந்ததாகும். மூலதனச் செறிவுள்ள தொழில் நுட்பம் பொருளாதார வளர்ச்சியின் அளவினைச் சுட்டிக்காட்டுவதாக அமையும், மூலதனம் மட்டுமே வளர்ச்சி பெற உதவாது அதனுடன், திறமை, அமைப்பு போன்றவைகளும் செயல்பட வேண்டும். இந்த அடிப்படையில் பின்தங்கிய நாடுகளின் மூலதனப்பற்றாக்குறை நிலவும் பொழுது, விரைவில் பொருளாதார வளர்ச்சியினை எட்ட மூலதனச்செறிவின் நுட்பத்தினை பெருமளவுல் பயன்படுத்தக்கூடாது. ஏனெனில் இது உற்பத்திக் காரணிகளைச் சரியாகப் பயன்படத்தாது வீணடிக்கும் நிலையில் விட்டுவிடும்.

4. நிறுவன அமைப்புகள்

ஒரு நாட்டின் தொழில் நுட்ப அளவினை நிர்ணயிக்க அரசியல், சமுதாயம், பொருளாதார அமைப்புகளுடன் மக்களின் எண்ணங்களும் எதிர்பார்ப்புக்களும், நடவடிக்கைகளும் ஈடுபடுகின்றன. முற்போக்கான எண்ணங்கள் இன்றி மக்கள் சோர்வுற்றிருப்பார்களேயானால் புதிய நுட்பங்களை பரீட்சித்துப் பார்க்க முடியாமல் போய் விடும். விவசாயத்தில் புது நுட்பத்தினைப் புகுத்து முன், நில உரிமை, உரிமை மாற்றல் போன்றவற்றில் மாறுதல் செய்ய வேண்டும். சமுதாய அமைப்பினை தொழில் நுட்ப மாற்றத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்தல் அவசியம் ஆகும்.

## இந்தியாவில் தொழில் நுட்பம்

பெரும்பாலும் பின்தங்கிய நாடுகளில் நவீன தொழில் நுட்பங்கள் வெளியார் முதலீட்டுடன்தான் நடைபெறுகிறது. இத்தகைய நுட்பங்கள் ஏற்றுமதிக்காக உள்ள பொருட்களை உற்பத்தி செய்வதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. சில நாடுகளில் புதிய நுட்பங்கள், சுரங்கத் தொழில், பண்ணை வளர்ச்சி போன்றவற்றிலும் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக தாய்லாந்தில் ரப்பர் தோட்டங்களின் வளர்ச்சிக்காக புதிய நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விவசாயத்தில் மட்டும், அதிக செலவில்லாத புதிய தொழில் நுட்பங்களை புகுத்தி கணிசமான அளவு உற்பத்தியினைப் பெருக்க முடியும். உதாரணமாக சிறந்த விதைகளையும், பயிர் சுழற்சியினையும், பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதையும், சிறந்த உரங்களை இடுவதையும் கூறலாம். முன்னோடி நாடுகளுக்கு புதிய முறைகளை கண்டுபிடிக்க வெகுகாலம்

பிடித்திருக்கலாம். ஆனால் அத்தகைய காலதாமதம் பின் தங்கிய நாடுகட்கு இல்லை. ஏனெனில் ஏற்கனவே பரீட்சார்த்த முறையில் பரிசோதித்துப் பார்த்துள்ள ஏராளமான தொழில் நுட்பங்கள் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளன.

2022ம் ஆண்டுக்குள் எல்லா கிராமங்களுக்கும் இணைய வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் 7 லட்சம் கோடி முதலீட்டில் வசதிகள் செய்யப்படும் என்று சமீபத்தில் தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது. பருத்தி உற்பத்தியை அதிகரிக்க தென்னிந்திய பஞ்சாலை அமைப்பின் (Southern India Mills Association) அங்கமான பருத்தி உற்பத்தி மற்றும் ஆய்வு நிறுவனம் (Cotton Development and Research Association) உகாண்டா நாட்டின் பருத்தி உற்பத்தி நிறுவனம் மற்றும் தேசிய வேளாண்மை ஆய்வு நிறுவனம் (Cotton Development Organization and National Agricultural Research Organization) ஓர் உடன்படிக்கை செய்துள்ளது. இதன் மூலம் இந்தியா மற்றும் உகாண்டா விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும்.

### தொழில் நுட்ப மாற்றத்திற்கு ஏற்படும் பிரச்சனைகள்

புதிய தொழில் நுட்பங்கள் புதிய இயந்திரங்களை பயன்படுத்துவதை நடைமுறைக்குக் கொண்டு வருகின்றன. விவசாயத்தில் சிறந்த விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், நவீன விவசாய கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், மின் சக்தி, பாசன வசதிகள் போன்றவை செய்து தரப்பட வேண்டியுள்ளது. இவை பெருமளவில் இத்துறையில் முதலீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. நவீன தொழில் நுட்பங்கள், பெருமளவு முதலீட்டுடன் தொடர்பு கொண்டவையாக இருக்கின்றன. தொழில் நுட்ப வளர்ச்சியில் முதலும் தொழில் நுட்பமும் கூட்டு இடுமானங்களாகும். தொழில் வளர்ச்சிக்காக முதலீட்டுத் தொகையினை உயர்த்த வழிவகுக்கிறது. மூலதனம் இல்லையென்றால் தொழில் நுட்ப வளர்ச்சியானது தடைப்படுகிறது. முதலீடு தடைப்பட்டால் வளர்ச்சியும் தடைபடுகின்றது.

மேலைநாடுகளின் தொழில் நுட்பங்கள் அந்தந்த நாடுகளில் நிலவிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டே வரையப்பட்டவை. அவற்றைப் இந்தியா போன்ற நாடுகளில் பயன்படுத்தும் பொழுது அப்படியே பயன்படுத்த முடியாது. ஏனென்றால் பின்தங்கிய நாடுகளின் மூலதன அளவு மாறுபட்டிருக்கலாம். உதாரணமாக மேலை நாட்டில் பயன்படுத்தப்பட்ட விவசாய முறையை இங்கேயும் அப்படியே பயன்படுத்த இயலாது. நிலங்களின் வளங்கள் இருநாடுகளிலும் மாறுபட்டிருக்கக் கூடும். ஆகவே அந்நாடுகளில் பயன்படுத்தப்பட்டத் தொழில் நுட்பங்களை பின்தங்கிய நாடுகளில் கடைபிடிக்க வேண்டுமென்றால் இங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஆராய்ச்சி செய்து மாற்றியமைத்து பின்னர் பயன்படுத்த வேண்டும். வளர்ச்சியடைந்த நாடுகளில் பெரும்பாலும் முதல் அதிகமாகவும் தொழிலாளர் முறைகளையும், நுட்பங்களையும் பயன்படுத்தும். ஆனால் பின்தங்கிய நாடுகளில் மூலதனப்பற்றாக்குறையும் பெருமளவில் தொழிலாளர்களும் இருப்பர். இந்நிலையில் இந்நாடுகள் தொழிலாளர் செறிவுள்ள நுட்பங்களைக் கடைபிடிப்பது அவசியம். ஏனெனில் பற்றாக்குறையாக உள்ள மூலதனத்தைச் சரியான முறையில் வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடிகிறது. மேலும் இங்குள்ள வேலையில்லா பிரச்சினையையும் ஓரளவு குறைக்க வழிவகுக்கிறது.

சில பொருளியல் நிபுணர்கள் தொழில் செறிவுள்ள முதலீட்டிலிருந்து சிறந்த பலனை அடைவதற்கு மூலதன செறிவுள்ள முதலீட்டை தொடங்க வேண்டும் என்கின்றனர்.

நாட்டினை தொழில் வளமுடையதாக்க வேண்டுமெனில் மூலதனச் செறிவுள்ள தொழில்களைத்

தொடங்குதல் அவசியம் என்கின்றனர். இத்தகைய தொழில்களைத் தொடங்கும்பொழுது பொருளாதார வளர்ச்சிக்கு எந்த வகையில் துணை புரிகிறது என்பதனை ஆராய வேண்டும். இந்த அடிப்படையிலேயே மூலதனச் செறிவுள்ள தொழில்களை தொடங்க வேண்டும் என்கின்றனர். இவர்கள் பின்தங்கிய நாடுகள், தங்கள் பொருளாதார மற்றும் பிற சூழ்நிலைகளுக்கு ஏற்ப தங்களுக்குப் பொருந்துகின்ற நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறுகின்றனர். இதன் அடிப்படையில், மூலதனச் செறிவுள்ள நுட்பங்களை வளர்ச்சிக்கு உகந்த முறையில் பயன்படுத்தும் பொழுது அத்தகைய தொழில்கள் வளர்ச்சியடையும் பொழுது அதற்கு தேவையான மூலதனம் அதிலிருந்தே கிடைக்கும்படி இருத்தல் வேண்டும். இது நவீன நுட்பங்களை மேலும் வளமாக்கப் பெருமளவில் பயன்படுத்த உதவும்.

**மாணவர் செயல்முறை**
மானவர்களாகிய நீவிர் தொழில்நுட்ப சுற்றுச்சூழலின் சவால்களை எடுத்து இயம்புக

## 1.5 ஊரக பொருட்கள் – இந்திய சுற்றுச்சூழலின் சவால்களும்

### அறிமுகம்

கிராமப்புற இந்தியா என்பது இனிமேல் நாளைய சந்தை இல்லை. இது இன்றைய சந்தை. இந்தியா கிராமங்களில் தான் வாழ்கிறது என்கிறார் நமது தேசப்பிதா மகாதமா காந்தி. அவரின் கூற்றுப்படி இந்தியா மக்கட் தொகையில் கிட்டத்தட்ட 70 சதவிகித மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். எண்களில் கூறினால் 80 கோடிக்கு அதிகமானோர் கிராமங்களில் வசிக்கின்றனர் இந்தியா கிராமப்புற மக்கட்தொகையானது ஐரோப்பா கண்டத்தின் மக்கட் தொகையைவிட அதிகம். அந்த மக்கள் பெரும்பகுதி திறன் கோட்பாடு உடையவராக இருந்தால் நாம் உலகத்தின் முன்னேறிய நாடாக உருவாவதற்கு வெகுதூரம் இல்லை.

இந்தியா கிராமப்புற சந்தை ஓர் செழிப்பான சந்தை. மத்திய புள்ளியியல் அலுவலகம் (Central Statistical office) தகவலின்படி மாத தனி நபர் நுகர்வு (monthly per capita rural consumption 2009 - 10) ஆண்டில் ரூபாய் 599 இருந்த 2011-12 ஆண்டில் 18 சதவீதம் அதிகரித்துள்ளது. அந்த காலகட்டத்தில் நகர்பபுற சந்தையானது 13.3 சதவிகிதம் மட்டும் அதிகரித்துள்ளது. அது போல் கிராமப்புற மக்கட் தொகையில் பாதிக்கு மேற்பட்டோர் 20 வயதுக்குள்ளே இருக்கின்றனர். இது வருங்காலத்தில் மிக பெரிய சந்தை.

கிராம சந்தையில் சுற்றுச்சூழல் மூன்று காரணிகளை கொண்டது.




**படம் எண் 1.5.1 கிராமப்புற சந்தையில் சுற்றுச்சூழல்**

### அ. கிராமப்புற நுகர்வோர் (Rural Consumer)

இரண்டு முக்கிய சமாச்சாரங்களை இங்கு கோடிட்டு காட்ட வேண்டும். ஒன்று, கிராமப்புற நுகர்வோர் நகர்ப்புற நுகர்வோர்களிடமிருந்து மாறுபட்டவர்கள். இரண்டு கிராமப்புற நுகர்வோர் அவர்களுக்குகிடையே வேறுபாடு உள்ளது.

கிராமப்புற நுகர்வோர் மற்றும் நகர்ப்புற நுகர்வோர் இடையே உள்ள வேறுபாடுகளை காண்போம்.

**அட்டவணை 1.2 - கிராமபுற நுகர்வோர் மற்றும் நகர்ப்புற நுகர்வோர் , இடையேயான வேறுபாடுகள்**

| காரணிகள் (Factors) | கிராமப்புற நுகர்வோர் | நகர்பபுற நுகர்வோர் |
|---|---|---|
| **1. தொழில் (Occupation)** | விவசாயம் , கால்நடை வளர்ப்பு | உற்பத்தி, சேவைகள் துறை |
| **2. வருவாய் ஆதாரம் (Source of Income)** | முதன்மை தொழில் (Primary Activity) | இரண்டாம் தொழில் (Secondary Activity) |
| **3. சாதி ஆதிக்கம் (Caste Influence)** | உண்டு | இல்லை |
| **4. நுகர்வு முறை (Consumption Pattern)** | தொழில், வருமானம், சாதி, சமூக பொருளாதார காரணிகள் மற்றும் பருவகால மாற்றம் | தொழில் மற்றும் வருமானம் |
| **5. தேவை (Demand)** | நுகர்வு பரவல் 6,00,000 கிராமங்கள் | நுகர்வு பரவல் 3200 மாநகரங்கள் மற்றும் கிராமங்கள் |
| **6. வாங்கும் நடத்தை (Buying Behaviour)** | சாதி, மதம் மற்றும் கலாச்சார காரணிகள் வாங்கும் நடத்தையை தீர்மானிக்கிறது | சாதி, மதம் மற்றும் கலாச்சார காரணிகள் வாங்கும் நடத்தையை தீர்மானிக்கவில்லை |
| **7. மாத சராசரி தனி நபர் செலவு (Average monthly per capita Expendutre)** | ரூபாய் 1053.64 | ரூபாய் 1984.46 |

**ஆதாரம்:** 2009-10 தேசிய மாதிரி கணக்கெடுப்பு வீட்டு நுகர்வோர் செலவு (National Sample Survey Household Consumer Expenditure)

கிராமபுற நுகர்வோர் அவர்களுக்கிடையே மிகப்பெரிய வேறுபாடு உள்ளது.

#### 1. தொழில்

கிராமப்புறத்தில் பெரும்பாலோனர் விவசாயியாக இருந்தாலும் அவர்களுக்கிடையே பெரிய விவசாயி, சிறிய விவசாயி, விவசாய கூலிகள் என்ற பாகுபாடு உள்ளது.

## 2. வருமானம்

பெரும்பாலும் கிராமப்புறங்களில் விவசாயிகள் சொற்ப வருமானதை கொண்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஆனால் சமீபத்திய புள்ளிவிவரத்தின் படி நாற்பத்தொரு சதவித இந்திய நடுத்தர மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். நகரங்களை போல அவர்களிடம் எல்லா பொருட்களும் உள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை அதனை உறுதிப்படுத்துகிறது.

**அட்டவணை 1.3 – கிராமப்புற இந்தியாவில் கிடைக்கும் பொருட்கள்**

| கிராமப்புற இந்தியா | டயர் 1<br>முதல் 4% | டயர் 2<br>அடுத்த 10% | டயர் 3<br>அதற்கடுத்த 35% | டயர் 4<br>கடைசி 50% |
|---|---|---|---|---|
| 1. வீடுகள் (மில்லியனில்) | 6 | 15 | 51 | 74 |
| 2. பொருட்கள் (%) | | | | |
| இரண்டு சக்கர வாகனம் | 43.1 | 24.6 | 8.3 | 2.2 |
| கார் | 3.5 | 0.8 | 0.1 | 0.0 |
| வண்ண தொலைக்காட்சி | 40.1 | 27.7 | 12.3 | 4.5 |
| தொலைபேசி | 33.3 | 19.4 | 6.6 | 1.7 |
| குளிர்சாதன பெட்டி | 24.9 | 14.3 | 3.6 | 0.9 |
| துணி துவைக்கும் இயந்திரம் | 3.9 | 1.7 | 0.3 | 0.0 |
| கணினி | 1.2 | 0.3 | 0.0 | 0.0 |

**ஆதாரம் :** ஹன்சா ஆய்வறிக்கை / ஐ ஆர் எஸ் தகவல், ராமா பீஜபுர்கர், நாங்கள் அப்படிதான், பெண்குயின் புத்தகங்கள் இந்தியா, புதுதில்லி, 2007.

**Source:** Hansa Research / IRS Data, Quoted is Rama Bijapurkar, we are like that only, Penguin Books India, New Delhi 2007.

## 3. மக்கள் தொகை

மக்கட் தொகை கிராமங்களிடையே மிகப்பெரிய வேறுபாடு உள்ளது. சில கிராமங்களில் 200 கீழே வசிக்கிறார்கள் பல கிராமங்களில் 5000 க்கும் மேலேயே வசிக்கிறார்கள். இதனால் ஊரக தேவை பரவலில் மாறுபாடு உள்ளது.

அட்டவணை 1.4 - இந்திய கிராமங்கள் மக்கட் தொகை அடிப்படையில் பிரிப்பு

| மக்கட் தொகை அளவு | கிராமங்களின் (எண்ணிக்கை) | கிராமங்கள் (சதவிகித அடிப்படையில்) |
|---|---|---|
| 200 கீழ் | 92541 | 15.6 |
| 200-500 | 127054 | 21.4 |
| 501-1000 | 144,517 | 24.4 |
| 1001-2000 | 129,662 | 21.9 |
| 2001-5000 | 80,313 | 13.5 |
| 5000 மேல் | 18,758 | 3.2 |
| மொத்தம் | 593,145 | 100 |

**ஆதாரம்:** மார்ட் : பிடபிள்யூ சந்தையியல் வெள்ளை புத்தகம் , 2006
**Source:** MART: Quoted in BW Marketing White Book, 2006

### 4. எழுத்தறிவு விகிதம்

எழுத்தறிவு விகிதம் மாநிலங்களுக்கிடையே மிகப் பெரிய வேறுபாடு உள்ளது. கேரளா போன்ற மாநிலங்களில் எழுத்தறிவு விகிதம் அதிகமாக உள்ளது. பீகார், சத்திஸ்கர் ஜார்காண்ட் போன்ற மாநிலங்களில் எழுத்தறிவு விகிதம் குறைவாக உள்ளது.

### 5. மாநிலங்களுக்கிடையே மாறுபாடு

கிராமப்புற நுகர்வோர் மாநிலங்களுக்குக்கிடையே மிகப்பெரிய மாறுபாடு உள்ளது. பஞ்சாப், ஹரியானா, கேரளா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் நுகர்வு அதிகமாக உள்ளது. பீகார் ராஜஸ்தான், உத்திரகாண்ட் போன்ற மாநிலங்களில் நுகர்வு குறைவாக உள்ளது

## ஆ. கிராமப்புற கட்டமைப்பு (Rural Infrastructure)

இந்தியா கிராமப்புறங்கள் இரண்டு முக்கிய சவால்களை எதிர் கொள்கிறது. ஒன்று போக்குவரத்து மற்றொன்று தகவல் தொடர்பு. சாலை போக்குவரத்தை பொறுத்த வரையில் இந்திய அரசாங்கம் தங்க நாற்கர சாலைகள் மூலம் நாட்டின் பெரிய நகரங்களை இணைக்கிறது. இதன் மூலம் நகரங்களுக்கு அருகில் உள்ள கிராமங்கள் பயனடையும். பிரதம மந்திரி சாலை திட்டத்தின் மூலம் கிராம சாலைகள் மேம்படுத்தப்படுகிறது. வட கிழக்கு மாநிலங்களில் ரயில் மூலம் இணைக்க அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது.

இந்தியாவில் 22 பெரிய மொழிகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட வட்டார மொழிகளை மக்கள் பேசுகின்றனர். மேலும் புவியியல் ரீதியான கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என பல பிரிவுகளாக மக்கள் இருப்பதால் மக்களது உணவு, உடை, பழக்க வழக்கங்கள் மாறுபட்டுள்ளன. உதாரணமாக வட இந்தியர் கோதுமையை முக்கிய உணவாக கொண்டுள்ளனர். தென்னிந்தியர் அரிசியை முக்கிய உணவாக கொண்டுள்ளனர். மக்களிடையே பொருட்களை சந்தைபடுத்துதல் மிகப்பெரிய சவாலான காரியம். சமீபதில் பாரத பிரதமர் திரு. நரேந்திரா மோடி அவர்கள் கூறியபடி ரூபாய் 45 இலட்சம் கொடிகள் கிராமப்புற கட்டமைப்பை மேம்படுத்த முதலீடு செய்யப்படும்.

இ. கிராமப்புற தேவை/நுகர்வு (Rural demand / Consumption)

i. மக்கட் தொகை அடிப்படையில் கிராமப்புற இந்தியா, நகர்புற இந்தியாவை விட அதிகம். கிராமத்தில் 82 கோடி மக்கள் வாழ்கின்றனர், நகர்ப்புறத்தில் 34 கோடி மக்கள் வாழ்கின்றனர் **(ஆதாரம் : 2011 மக்கட் தொகை கணக்கெடுப்பு)**

ii. சந்தை அடிப்படையில் கிராமப்புற இந்தியா நகர்புற இந்தியாவை விட பெரிது. National Council for Applied Economic Research (NCAER) கருத்துக்கணிப்பின்படி சோப்பு, பவுடர், சமையல் எண்ணெய், தேயிலை, சிகரெட், தலைக்கு தேய்க்கும் எண்ணெய் போன்ற பொருட்களின் சந்தை, நகர சந்தையை விட பெரியதாகும்.

iii. வளர்ச்சி விகிதத்தில் கிராமப்புற இந்தியா நகற்புறத்தை சில பொருட்களில் முந்துகிறது. (NCAER) கருத்துக்கணிப்பின்படி, தேயிலை, துணி துவைக்கும் சலவை சோப், மோட்டர் சைக்கிள் புது அலைபேசி இணைப்பு, கிறாமப்புற இந்தியா நகர்ப்புறத்தை விட முன்னேறுகிறது.

**ஊரக பொருட்கள் – சவால்கள்**

சிலநேரம் ஊரக சந்தைகளுக்கு ஏற்ப பொருட்களை வடிவமைக்க வேண்டும். இதற்கு பல உதாரணங்களை கூறலாம்.

i. பிலிப்ஸ் இந்தியாவின் ரேடியோ

ii. வண்ண தொலைக்காட்சி பெட்டி பேட்டரி பேக்கப் உடன்

iii. வட்டார மொழிகளில் மெனு உடன் கைபேசி

iv. டீசலுடன் ஓடக்கூடிய துணிதுவைக்கும் இயந்திரம்

ஊரக மக்களுக்கு பிடித்த வண்ணத்தை தயாரிப்பதில் நிறுவனங்கள் முனைப்பு காட்டுகின்றன. ஆசியன் பெயிண்ட் ஊரக சந்தைக்கென்று பளிச்சென வண்ணம் தயாரிக்கின்றது.

ஊரக மக்கள் சிறிய பாக்கெட், குறைந்த விலையில் பொருட்களை விரும்புகின்றனர். அதனால் தான் கோக் நிறுவனம் 200 மில்லி லிட்டர் கோக்கை ஐந்து ரூபாய்க்கு சந்தையில் அறிமுகப்படுதியது. இதனால் அதனுடைய 2005 ல் வாடிக்கையாளர் எண்ணிக்கை 2005ம் ஆண்டு 16 கோடியிலிருந்து 24 கோடிக்கு அதிகரித்தது.

டைடன் கடிகாரங்கள் கிராமப்புற மக்களுக்காக சோனாடா என்ற கடிகாரத்தை அறிமுகப்படுத்தியது. கிராமப்புற மக்கள் பொருட்களின் மதிப்புக்கு முக்கியதுவம் தருபவர்கள். எனவேதான் இந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் தனது லைவ்பாய் சோப்பை விலை குறைந்த சோப்பாக விற்காமல், சருமம் பாதுகாப்பானது எனக் கூறி விற்கிறது. அரவிந்த் மில்ஸ் ஊரக சந்தையில் ஜீன்ஸில் “ரப் மற்றும் டப்” என்ற பெயரில் அறிமுகப்படுதியது. பிரிட்டானியா டைகர் பிஸ்கட்டை ஊரக சந்தையில் குறைந்த விலையில் அறிமுகப்படுத்தியது

ஊரக மக்களை மாநில வாரியாக, மொழி வாரியாக, காலநிலை வாரியாகவோ பிரிப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன.

மக்களிடையே பொருட்களை கொண்டு சேர்ப்பதில் மிகப்பெரிய சவால்கள் நிறைந்திருக்கிறது கிராமங்களில் போக்குவரத்து, குடோன் வசதிகள், பொருட்களை பகிர்ந்தளித்தலில் பெரும்பங்கு

வகிக்கிறது. வணிக நிறுவனங்கள் தங்களது கம்பெனி வாகனங்களைக் கொண்டு போக்குவரத்தை சரி செய்கிறது. எவரெடி போன்ற நிறுவனங்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்களை சொந்தமாக கொண்டுள்ளது. இதன் மூலம் 6 லட்சம் சிறு கடைகளுக்கு எவரெடி பேட்டரி விநியோகம் செய்யப்படுகிறது.

சமீப காலங்களில் ஊரகப் பகுதியில் பெரிய வணிக நிறுவனங்கள் தங்களது கிளைகளை ஏற்படுத்தியுள்ளன.

i. கோத்ரேஜ் குழுமத்திலிருந்து ஆதார் மொத்த விற்பனை சந்தை 3 இந்திய மாநிலங்களான குஜராத், பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் தொடங்கப்பட்டுள்ளன.

ii. இந்தியன் புகையிலை நிறுவனம் ஐடிசி சாகர் என்ற பெயரில் பைக், டிராக்டர், துணி, சிமென்ட், இரும்பு, டீசல் மற்றும் நிதி சேவைகளை தொடங்கியுள்ளது.

iii. டி எம் சி ஸ்ரீராம் குழுமம், ஹரியாலி கிசான் பஜார் என்ற பெயரில் வேளாண் பொருட்கள் மற்றும் நிதி சேவைகளை தொடங்கியுள்ளது.

**மாணவர் செயல்முறை**
ஊரகப் பொருட்களுக்கான இந்திய சவால்களை ஒரு குழுவாக நீவிர் இணைந்து விளக்குக

## தொகுப்புரை

வணிக நிறுவனமானது தனித்து இயங்க முடியாது நம் உடலில் எவ்வாறு பல்வேறு உறுப்புகள் உள்ளனவோ அதுபோல் வணிகமும் சமூகம் அரசியல் பொருளாதாரம் மற்றும் சட்டத்துறைகளுக்கு கீழ் கட்டுப்பட்ட ஓர் அங்கமாகும். வணிக நிறுவனத்தைப் பாதிக்கக்கூடிய மற்றும் அதைச் சூழ்ந்திருக்கும் அனைத்து நிபந்தனைகள். நிகழ்ச்சிகள் மற்றும் விளைவுகளின் கூட்டே சுற்றுச் சூழலாகும். சுற்றுச் சூழலை பாதிக்கும் காரணிகளாக

1. மக்கள் தொகை இயல் சார்ந்த காரணிகள்
2. பொருளாதார காரணிகள்
3. புவியியல் மற்றும் உயிரின வாழ்க்கைச் சூழல் சார்ந்த காரணிகள்
4. சமூகம் மற்றும் பண்பு சார்ந்த காரணிகள்
5. அரசியல் மற்றும் சட்டக் காரணிகள்
6. தொழில் நுட்பக் காரணிகள் ஆகும்.

மேலும் இந்திய ஊரக நுகர்வோர், கட்டமைப்பு, தேவை – நுகர்வு மற்றும் ஊரக சவால்களை விவரித்தோம்.

### மாதிரி வினா

1. வணிக சுற்றுச்சூழல் என்றால் என்ன?
2. வணிகச் சுற்று சூழல் காரணிகள் யாவை? விளக்குக.
3. யுக்தி மேலாண்மையின் சிறப்பியல்புகளை விளக்குக

4. யுக்தி மேலாண்மையின் படிநிலைகளை விளக்குக.
5. பொருளாதாரம் சார்ந்த சுற்றுசூழல் காரணிகளை விளக்குக
6. பொருளாதாரம் சாரா சுற்றுசூழல் காரணிகளை விளக்குக
7. தொழில் நுட்பத்தை பாதிக்கும் காரணிகள் யாவை?
8. கிராமப்புற நுகர்வோர் மற்றும் நகர்புற நுகர்வோர் இடையேயான வேறுபாடுகள் யாவை?

## வாசிப்பு பொருள்

- மெக்கென்சி அறிக்கை , MGI, சண்பரான்சிஸ்கோ (2007)
- 2009-10 தேசிய மாதிரி கணக்கெடுப்பு வீட்டு நுகர்வோர் செலவு (National Sample Survey Household Consumer Expenditure)
- ஹன்சா ஆய்வறிக்கை / ஐ ஆர் எஸ் தகவல், ராமா பீஜபுர்கர், நாங்கள் அப்படிதான், பெண்குயின் புத்தகங்கள் இந்தியா, புதுதில்லி, 2007.
- மார்ட் :பிடபிள்யூ சந்தையியல் வெள்ளை புத்தகம் 2006 ,

## குறிப்புரை


- Ahmed. F. and Alam, A. (2014). Business Environment: Indian and Global Perspective. Prentice Hall: New Delhi.
- Francis Cherunilam (2017). Business Environment Text & Cases. Himalaya Publishing House. New Delhi
- Dr. Radha (2013). Business Environment. Prasanna Publications, Chennai
- Ramaswamy V. S. and Namakumari S (2010): Marketing Management: Tata McGraw Hill, New Delhi

# அலகு 2- சமகால கண்ணோட்டங்கள்

### அத்தியாய அறிமுகம்

பொதுக் கொள்கை திட்டங்கள் முடிவெடுத்தலுக்கு பேருதவி புரிகிறது. தொழில் நிறுவனத்தின் நோக்கங்கள் ஈடேற, செயலாளர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளாக இவை அமைகின்றன. குறிப்பிட்ட சூழ்நிலையில் இச்செயல் வழியை மேற்கொள்ள வேண்டும் என்பதை பொதுக் கொள்கைத் திட்டம் தெளிவாக்குகிறது. பண மதிப்பிழப்பு, மின்னணு பரிவர்த்தனை மற்றும் பொருட்கள் மற்றும் சேவை வரி போன்ற பொதுக் கொள்கை திட்டங்கள் இப்பாடத்தில் விளக்கப் பட்டுள்ளது. நிதிக் கொள்கை மற்றும் பணக்கொள்கையின் நோக்கங்கள் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. நிறும சமூக பொறுப்பு பகுதிகளாக நுகர்வோர், ஊழியர்கள், சுற்றுச்சூழல், வணிகர்கள், சமூகம், பங்குதாரர்கள் மற்றும் நிறுவனம் என ஏழு பிரிவுகளாக பிரிக்கலாம். 17 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை விவரித்துள்ளோம்.

### அத்தியாய நோக்கங்கள்

இப்ப பாடத்தை படித்த பின்னர் நீங்கள்

- பொதுக் கொள்கை திட்டங்கள் பற்றி விவரிக்க முடியும்
- பணக்கொள்கை மற்றும் நிதிக்கொள்கைகளை விளக்க முடியும்
- நிறும சமூக பொறுப்பு உறுப்புகள் பற்றி விவரிக்க முடியும்
- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை விவரிக்க முடியும்

### அத்தியாய அமைப்பு

- **2.1 பொது கொள்கைத் திட்டங்கள்**
- **2.2 பணக்கொள்கை**
- **2.3 நிதிக்கொள்கை**
- **2.4 நிறும சமூக பொறுப்பு**
- **2.5 நீடித்த நிலையான வளர்ச்சி**

## 2.1 பொது கொள்கைத் திட்டங்கள்

### அறிமுகம்

முடிவெடுத்தலுக்கு உதவி புரிவதை பொதுக்கொள்கைத் திட்டங்கள் வழக்கமாக கொண்டுள்ளது.

தொழில் நிறுவனத்தின் நோக்கங்கள் ஈடேற, செயலாளர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளாக இவை அமைகின்றன. குறிப்பிட்ட சூழ்நிலையில் இச்செயல் வழியை மேற்கொள்ள வேண்டும் என்பதை கொள்கைத் திட்டம் தெளிவாக்குகிறது. எடுத்துக்காட்டாக, ஆட்களை பணியில் அமர்த்துவதில் உள்ளூர் மக்களையே வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்பது ஒரு நிறுவனத்தின் கொள்கைத் திட்டமாக இருக்கும், உயர் பதவிக்குப் பணியிலமர்த்த வெளியிலிருந்து உரியோரைத் தேர்ந்தெடுப்பதற்கு மாறாக பணியிலிருப்போரில் திறமை மிக்கோருக்கு பதவி உயர்வு அளிப்பது வாயிலாக உயர் பதவி இடத்தை நிரப்பி கொள்வது என்பது நிறுவனத்தின் கொள்கைத் திட்டம்.

ஒரு தீர்மானம் முன்னோடியாக நின்று பின் வருங்காலத்திலும் அவ்வாறே செயல்படுத்தத் தக்கதாக இல்லாவிடில் அதை கொள்கை திட்டமாகாது. கொள்கைத் திட்டம் உயர் மட்டத்திலாயினும், துறை அளவிலாயினும், வேளாண்மையில் எந்நிலையிலும் வைக்கப்படலாம்.




**படம் எண் 2.1.1 பொது கொள்கைத் திட்டங்கள்**

## பண மதிப்பிழப்பு

நவம்பர் 8, 2016இல் பணமதிப்பிழப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும், அது 2017 முழுவதும் தன் பாதிப்புகளை உணர செய்தது. செல்லாததாக்கப்பட்ட நோட்டுகளில் ரூ.15,28,000 கோடி மதிப்புடைய பணம் (அதாவது மொத்த மதிப்பான ரூ.15,44,000 கோடியில் 99 சதவிகிதம்) இந்திய ரிசர்வ் வங்கிக்கு திரும்ப வந்துவிட்டது.

நவம்பர் 2016 முதல், மே 2017 வரை, கணக்கில் வராத பணமாக ரூ.17,526 கோடி ரூபாய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, ரூ.1003 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. விசாரணையும் கண்காணிப்பும் தொடர்கிறது.

கருப்பு பணம் மற்றும் ஹவாலா நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 37,000 போலி நிறுவனங்களை அரசாங்கம் ஏற்கனவே கண்டுபிடித்துவிட்டது.

2017 மே 23-ஆம் தேதிக்குள், வருமான வரித்துறையின் புலனாய்வு அமைப்புகள் 400க்கு மேற்பட்ட பினாமி பரிவர்த்தனைகளைக் கண்டுபிடித்துள்ளதோடு, அதன் மூலம் முடக்கப்பட்ட சொத்துகளின் சந்தை மதிப்பு ரூபாய் 600 கோடிக்கும் மேல்.

## மின்னணு பரிவர்த்தனை

டிஜிட்டல் பரிவர்த்தனைகள் 56 சதவீதம் உயர்ந்துள்ளது. அக்டோபர் 2016இல் 71.27 கோடியாகயிருந்த டிஜிடல் பரிவர்த்தனைகள், மே 2017 இறுதிக்குள், 111.45 கோடியாக உயர்ந்துள்ளது.

அட்டவணை 2.1 மின்னணு பரிவர்தனை

| மாதம் | மின்னணு பரிவர்தனை |
|---|---|
| நவம்பர் | 94,00,400 |
| டிசம்பர் | 1,04,05,500 |
| ஜனவரி | 97,01,100 |
| பிப்ரவரி | 92,59,400 |
| மார்ச் | 1,49,58,900 |
| ஏப்ரல் | 1,09,60,200 |
| மே (28 ஆம் தேதி வரை) | 94,21,400 |

ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி வெளியீடு (2017)

## ஜிஎஸ்டி

சரக்கு மற்றும் சேவை கட்டணம் என்ற கருத்து, முன்பும் சரி, இப்போதும் சரி, நல்ல கருத்தே. இது 160 நாடுகளில் சிற்சில வித்தியாசங்களோடு அமலில் இருக்கிறது. ஒரு சில பொருட்களுக்கும் சேவைகளுக்கும் விலக்கு அளிக்கப்பட்டாலன்றி, மற்ற அனைத்துக்கும் ஒற்றை வரி விதிக்கப்படும் என்பது தான் இதன் அடிப்படைக் கருத்து.

அட்டவணை 2.2 - 2019 பொருட்கள் மற்றும் சேவை வரி (கோடிகளில்)

| ஜனவரி | 1,02,503 |
|---|---|
| பிப்ரவரி | 97,247 |
| மார்ச் | 1,06,577 |
| ஏப்ரல் | 1,13,865 |
| மே | 1,00,289 |
| ஜூன் | 99,939 |
| ஜூலை | 1,02,083 |
| ஆகஸ்ட் | 98.202 |
| செப்டெம்பர் | 91,916 |
| அக்டோபர் | 95,380 |
| நவம்பர் | 1,03,492 |
| டிசம்பர் | 1,03,184 |

ஆதாரம்: சேவை மற்றும் சரக்கு துறை வெளியீடு (2019)

இது பல்வேறு வரிகளை உள்ளடக்கிய ஒற்றை வரியாகும். ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேலிருக்கும் அத்தனை பரிவர்த்தனைகளும் ஜி.எஸ்.டி.க்குக் கீழ் வந்துவிடும். பல்வேறு அடுக்குகளில் விதிக்கப்படும் கூட்டு வரிகள் இதனால் நீக்கப்படும். இதனால் வரிசெலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். இந்த நலன்களையெல்லாம் அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொண்ட பின்னர், ஜி.எஸ்.டி.யின் முக்கியமான அம்சங்களைப் பற்றி அனைத்து மாநிலங்களுக்கும் இடையே கருத்தொற்றுமை ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய ஓர் ஒற்றுமை ஏற்படாததாலும், சமரசங்கள் வலிந்து திணிக்கப்பட்டதாலும், ஒரு குறையுடைய ஜி.எஸ்.டி.யை அமல்படுத்தத் தொடங்கியிருக்கிறோம்.

### திட்டத்தின் குறைகள்

ஜி.எஸ்.டி. என்பது நிலையான ஒற்றை வரியாக (சலுகை விகிதம், குறைபாட்டு விகிதத்தோடு) இருந்திருக்க வேண்டும், இப்போது அப்படி இல்லை. இதில், 0, 2.5, 3, 5, 12, 18, 28 ஆகிய விகிதங்களும், இன்னும் ஆடம்பரப் பொருட்களுக்குக் கூடுதல் தீர்வைகளும் இருக்கின்றன.

ஜி.எஸ்.டி. ஒரு ஒருமித்த வரி அமைப்பின் கீழ் இருந்திருக்க வேண்டும், ஆனால் இப்போது அப்படி இல்லை . இரட்டைவரி வேறு இருக்கப் போகிறது. மாநில, மத்திய அரசுகள் வரிகளை 90:10 என்ற விகிதத்திலும் (1.5 கோடி ரூபாய்க்குக் குறைவாக இருக்குமானால்), 50:50 என்ற விகிதத்திலும் (1.5 கோடி ரூபாய்க்கு மேல் இருக்குமானால்) பிரித்துக்கொள்ளும்.

ஜி.எஸ்.டி. வரிவிதிப்பில், வரி விவரங்களைத் தாக்கல் செய்யும் எண்ணிக்கை குறைந்திருக்க வேண்டும், ஆனால் அப்படி நடைபெறவில்லை. ஒரு மாதத்துக்கு மூன்று தாக்கல்கள், ஆண்டு இறுதியில் ஒன்று என்று கணக்கிட்டால் மொத்தம் 37 முறை தாக்கல் செய்ய வேண்டும். இதில் ஒரு குறிப்பிட்ட தொழில், பல மாநிலங்களில் செயல்படுமானால், அங்கே வரிவிதிப்பதில் மாநில அரசாங்கமும் ஈடுபடும். அப்படியானால், மேலே சொன்ன எண்ணிக்கை போன்றே ஒவ்வொரு மாநிலத்துக்கும் இன்னொரு மடங்கு கூட்டிக்கொண்டே போகவேண்டியதுதான்.

பொருட்களையும் சேவைகளையும் வகைப்படுத்தும் பிரச்சனைகளை ஜி.எஸ்.டி. நீக்கியிருக்க வேண்டும், ஆனால், அப்படிச் செய்யவில்லை. பல சமயங்களில் பொருந்தக்கூடிய விகிதங்கள் மாற்றப்பட்டன. பல்வேறு ஆதரவுக் குழுக்கள் தங்களது கைவண்ணத்தைக் காட்டின.

மாணவர் செயல்முறை
பொதுக் கொள்கை திட்டங்களின் முக்கியத்துவத்தை நீவிர் விளக்குக

## 2.2 பணக்கொள்கை

### அறிமுகம்

பணக்கொள்கை என்பது பணத்தைப் பற்றியக் கோட்பாடுகளுக்கும், பணத்தின் நடைமுறைக்கும் இடையே உள்ள உறவைக் குறிப்பதாகும், இதனை “பணக்கோள்” எனவும் குறிப்பிடுவதுண்டு. நாட்டின் பணத்திட்டத்தை ஒட்டி அரசும், பண நிர்வாகமும் பணத்தின் அளவையும், வட்டி

விகிதத்தையும், செயல்படுத்துகின்ற போக்கினைப் பணக்கொள்கை எனலாம்.

**பணக்கொள்கையின் நோக்கங்கள்**




**படம் எண் 2.2.1 பணக்கொள்கையின் நோக்கங்கள்**

### நடுநிலைப்பணக்கொள்கை

பண அளிப்பில் ஏற்படும் மாறுதல் விலை, உற்பத்தி, வருமானம்,வேலை அளவு போன்றவற்றில் மாறுதலை ஏற்படுத்துகின்றன. இதனால் பொருளாதார முக்கிய காரணிகளில் மாற்றம் அடைந்து பொருளாதாரத்தை அவை பாதிக்கக்கூடும். எனவே, பண அளிப்பில் மாற்றங்கள் ஏற்படுவதைத் தவிர்த்து, பொருளாதார நடவடிக்கைகளில் திடீர் மாற்றம் ஏற்படாமல் இருக்கச்செய்ய வேண்டும். மக்கள்தொகை, உற்பத்தி அளவு, பணத்தின் சுழல்வேகம் ஆகியன ஒருநாட்டில் நீண்ட காலத்தில் மாறக்கூடிய தன்மையுடையதால், பணத்தின் அளிப்பு அதிகரிக்கலாம். ஆனால், அத்தகைய சூழ்நிலையில் பணம் அளிப்பின் மாறுதல் பொருளாதாரச் சீர்கேடுகளைக் கொண்டுவராத வகையில் இருக்க வேண்டும்.

### விலையை நிலைப்படுத்துதல்

பணக்கொள்கையின் நோக்கம் நாட்டில் விலை மட்டத்தை நிலையாக வைத்திருக்க வேண்டும் என்பது ஆகும். நாம் இவ்வாறு விலை நிலையாக இருக்க வேண்டும் என்று கூறும்போது, எப்போதும் ஒரு நாட்டில் எந்தவிதப் பொருளின் விலையிலும் மாற்றம் இருக்கக்கூடாது என்று பொருள் அல்ல. சராசரி விலையில் மொத்தக் குறியீட்டு எண்ணோ, நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணோ காட்டுகின்ற அளவிற்கு அதிக மாற்றம் இருக்கக்கூடாது என்றுதான் கூறுகிறோம்.

பணக்கொள்கையின் மூலம் விலையை நிலைப்படுத்துவதால் பின்வரும் நன்மைகள் ஏற்படலாம் அவை:

1. வாணிப சங்கடத்தை தவிர்க்கலாம்.
2. நாட்டின் உண்மையான வளத்தைப் பெருக்கமுடியும்.
3. பொருளாதாரத்தில் உறுதியான போக்கு.
4. பணம் தனது பணியைச் செம்மையாகச் செய்யமுடியும்.
5. வருமானப்பங்கீட்டில் முறையான போக்கு.
6. பொருளாதார வளர்ச்சியும், தலப்பெருக்கமும் ஏற்படும்.

### அந்நியச்செலாவணி மாற்று வீதத்தை நிலைப்படுத்துதல்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே, உலக நாடுகள் ஒவ்வொன்றும் பல பொருளாதார காரணங்களுக்காக, நெருக்கமான உறவைக் கொண்டுள்ளன. இந்நிலை இரண்டாம் உலகப்போருக்குப்பின், குறிப்பாக பன்னாட்டுப் பண நிதிக்கழகங்களின் தோற்றத்திற்குப்பின் வலுப்பட்டது. நாடுகளுக்கிடையே ஏற்றுமதி, இறக்குமதி, பொருளாதார உறவுகள் அன்னியச் செலாவணி அடிப்படையில் அமைந்துள்ளது. எனவே, இதனை ஒரே நிலையாக வைத்திருப்பதுதான் பணக்கொள்கையின் நோக்கமாக இருக்க வேண்டும்.

**நன்மைகள்**

1. பண்ணாட்டு வாணிபம் சீராக நடைபெற,
2. அந்நியச் செலாவணி மாற்று அங்காடியில் ஊடக வாணிபத்தை தவிர்க்க.
3. அயல்நாட்டு முதல் வெளியேறாமல் இருக்க.
4. உள்நாட்டு நிலையைப் பாதிக்காமல் இருக்க.
5. பன்னாட்டு பொருளாதார உறவுகளை சீராக வைத்திருக்க.
6. நாட்டிற்கு தொடர்ந்து அயல்நாடுகளின் கடனைப் பெறுவதற்காக.

### முழு வேலை வாய்ப்பு நிலையை அடைதல்

வேலைநிறைவை எவ்வாறு அடைவது என்பதற்கு கீன்சின் விளக்கம் பலரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவர் தனது "பொதுக்கோட்பாட்டில்" வேலை நிறைவை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஒரு நாட்டில் வேலை அளவிற்குச் சமமாகத் தான் உற்பத்தி, வருமானம் ஆகியவை இருக்கும். இந்நிலை தீவிரத் தேவையைப் பொறுத்ததாகும் நாட்டில் மொத்தச் செலவு சரியான வழியில் இருந்தால், வருமானம் முழுதும் உற்பத்தி மீது செலவிடப்படுவதாகப் பொருளாகும். இச்செலவை கீன்ஸ் நுகர்ச்சிச் செலவு எனவும், மூலதனச்செலவு எனவும் பிரிக்கின்றார். மூலதனச்செலவுகளை நீண்ட காலத்தில்தான் பாதிக்கச் செய்ய முடியும். ஆகையால், நாட்டில் விரைவான வேலைப்

பெருக்கத்திற்கும், வளர்ச்சிக்கும், குறுகிய காலத்தில் பாதிப்பைப் பெறும் நுகர்ச்சிச் செலவை அதிகரிக்கக் கூறுகின்றார்.

ஆனால் தனி மனிதர்களின் நுகர்ச்சிச் செலவை, வருமான அளவைச் சார்ந்து இருப்பதால் இதனைப் பெருக்க அரசுச் செலவுகள் அதிகரிக்கப்பட வேண்டும். இலாப நோக்கை எண்ணாமல் அரசு பொதுச்செலவை மேற்கொள்ளுதல், மலிவுப் பணக்கொள்கை மூலம் தனியார் மூதலீட்டாளர்களைக் கடன் வாங்கத் தூண்டல் போன்றவற்றாலும் நுகர்ச்சிச் செலவு, தீவிரத் தேவை பெருக்கமடையும். அதன்படி, சேமிப்பு முதலீட்டைவிட அதிகரிக்கும்போது, தனியார் துறையின் ஊக்கம் பெற்று நாட்டில் உற்பத்தி வருவாயும், வேலைவாய்ப்பு அதிகரிக்கும். பின்னர் வேலை நிறைவை அடைந்ததும் சேமிப்பையும், முதலீட்டையும் சமமாக வைத்திருக்க வேண்டும்.

பணக்கொள்கையின் பிற நோக்கங்களை விட, வேலை நிறைவு சிறந்ததாகக் கருதப்படுகிறது. அதற்குப் பின்வருவன காரணங்களாகும்.

1. அரசின் மனிதாபிமானக் கொள்கை
2. உலகத்தின் பொதுப்பிரச்சினை
3. சமுதாயக் கொள்கை
4. நாட்டின் உயர்வு, தாழ்வு நிலையை அகற்றுதல்

### பொருளாதார வளர்ச்சி

நீண்ட காலத்தில் நாட்டின் உண்மை வருமானத்தை அதிகரிக்கின்ற வழிவகைகளே பொருளாதார வளர்ச்சி எனப்படும். இதனை அடைய நாட்டின் உழைப்புச் சக்தி, இயந்திர சாதனங்கள், மூலதன உற்பத்தி ஆகியவற்றை அதிகரிக்க வேண்டும். இந்த எல்லா பொருளாதாரக் காரணிகளையும் இணைக்கும் சக்தியாக பணம் விளங்குகிறது.

எனவே, பணம் என்ற இச்சாதனத்தை சீரிய முறையில் நெறிப்படுத்துவதே பணக்கொள்கையின் நோக்கமாகும். பல நாடுகளில் இயற்கை வளங்களும், பிற உற்பத்தி சாதனங்களும் மலிந்து காணப்பட்டாலும், பண அளிப்பின் பற்றாக்குறையின் காரணமாகப் பொருளாதார வளர்ச்சியை அடையமுடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில் நிதி ஆதாரங்களைப் பெருக்கி, உற்பத்திக் காரணிகளை முழுமையாகப் பயன்படுத்துவதின் மூலம் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

## ரிசர்வ் வங்கியின் கடன் கட்டுப்பாட்டு முறைகள்

### வெளிச்சந்தை நடவடிக்கைகள்

இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டப்படி, ரிசர்வ் வங்கி 90 நாட்களுக்குள் பணம் கிடைக்கக்கூடிய மாற்று உண்டியல்கள், வாக்குறுதி சீட்டுகள் ஆகியவற்றை வாங்க, விற்க, மறுகழிவு செய்ய உரிமை பெற்றுள்ளது. ரிசர்வ் வங்கி, அரசாங்க பத்திரங்களை மட்டுமே கையாளுவதை கொள்கையாகக் கொண்டுள்ளது. வெளிச்சந்தை நடவடிக்கைக் கடன் கிடைப்பதையும் கடன் செலவையும் நேரடியாக பாதிக்கின்றன.

அட்டவணை 2.3 - வங்கி வீதக்கொள்கை

| ஆண்டு | வங்கி வீதம் |
|---|---|
| 1953 | 3.5 |
| 1974 | 9.0 |
| 1981 | 10 |
| 1991 | 12 |
| 2012 | 9 |

**ஆதாரம்** : இந்திய நிதி அமைச்சகம் வெளியீடு (2013)

1. கடனளவுப்பங்கு, சராசரி சட்ட இருப்பில் 50% ஆகும்.
2. இதற்கு 100% வரைக் கடன் பெற்றால் அதற்கு வங்கி வட்டி வீதத்திற்கு மேல் 1% தண்ட (Penalty) வட்டி விதிக்கப்படும்.
3. அதற்கு மேலும் வணிக வங்கி, ரிசர்வ் வங்கியிடம் கடன் வாங்கினால் 2% தண்ட வட்டி கொடுக்க வேண்டும்.

1963ல் வட்டி வீதம் 4% ஆக உயர்த்தப்பட்டது. 1964ல் மூன்றடுக்கு முறைக்கு பதிலாக இரண்டடுக்கு முறை புகுத்தப்பட்டது. இதன்படி சட்ட இருப்பில் 50% க்கு குறைந்ததற்கு 41/2 சதவிகிதமும், அதற்கு மேற்பட்டதற்கு 6 சதவிகிதமும் வட்டி நிர்ணயிக்கப்பட்டது. 1964ல் பங்கு முறை மறைந்தது. வட்டி வீதம் 5% ஆக உயர்த்தப்பட்டது. வங்கிகளின் ரொக்க விகிதம் 28% க்குக் குறைந்ததால், வட்டி வீதம் உயர்த்தப்பட்டது. 1965 பிப்ரவரியில் வட்டி வீதம் 6%. 1974 ல் வட்டி வீதம் 9% . 1976ல் ரிசர்வ் வங்கி, வணிக வங்கிகளுக்கு ரூ 917 கோடி கடன் கொடுத்திருந்தது. 1981ல் வட்டி வீதம் 10% 1991 ஜுலையில் 11% ஆகவும் 1991 அக்டோபரில் 12% ஆகவும் உயர்ந்தது.

வட்டி வீதம், ரிசர்வ் வங்கியால் சிறிதுசிறிதாக உயர்த்தப்பட்டதால், அது வட்டி வீதத்தை கடன் கட்டுப்பாட்டுக் கருவியாக செயல்படுத்தவில்லை என்பதை புரிந்து கொள்ளலாம். அது கடன் அளவையும் கடனுக்கான செலவையும் குறைக்கவும் பயன்படுத்தப்படவில்லை. எனவே வட்டி வீதம் இந்தியாவில் விளைவுள்ள முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பது தெரியவருகிறது.

### மாற்று இருப்பு வீத மாற்றங்கள்

### 1. பண இருப்பு விகிதம் (Cash Reserve Ratio-CRR)

நரசிம்மன் கமிட்டி அறிக்கையின்படி பண இருப்பு விகிதம் அதிகமானால், வங்கியின் இலாபத்தன்மையை பாதிக்கும்.

அட்டவணை 2.4 - பணஇருப்பு விகிதம் (Cash Reserve Ratio)

| ஆண்டு | பணஇருப்பு விகிதம் |
|---|---|
| 1994 – 95 | 15 |
| 2000 - 01 | 8 |
| 24.6.2003 | 4.5 |
| ஆகஸ்ட் 2008 | 9.0 |
| 17.01.2009 | 5.0 |
| 24.04.2010 | 6.0 |
| 24.01.2012 | 5.5 |
| 12.03.2012 | 4.75 |

ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி புள்ளியியல் விபரம் (2013)

### 2. சட்ட நீர்மை விகிதம் (Statutory Liquidity Ratio - SLR)

இது பணஇருப்பு வீதத்திற்கு துணையாக ரிசர்வ் வங்கியால்செயல்படுத்தப்படுகிறது. 1949ல், நிகர தேவை மற்றும் கால வைப்புகளில் 20% நீர்மை விகிதமாக இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. ரிசர்வ் வங்கி CRRஐ உயர்த்தும் போதெல்லாம், வணிக வங்கிகள், அரசு பத்திரங்களை விற்பதன் மூலம் தம் நீர்மை தன்மையை பெருக்கிக் கொண்டன.

அட்டவணை 2.5 - சட்ட நீர்மை விகிதம் (Statutory Liquidity Ratio)

| ஆண்டு | சட்ட நீர்மை விகிதம் |
|---|---|
| 22.9.1990 | 38.5 |
| 10.10.1997 | 25 |
| 8.11.2008 | 24 |
| 7.11.2009 | 25 |
| 18.12.2010 | 24 |

ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி புள்ளியியல் விபரம் (2011)

### தெரிவுக் கடன் கட்டுப்பாடு

இந்த தெரிவுக் கடன் கட்டுப்பாட்டு முறைகள் பருத்தி, கோதுமை, நெல், அரிசி, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறி எண்ணெய், சர்க்கரை, மனிதர் தயாரித்த நூலிழைகள், துணி ஆகியவற்றுக்கு அமல்படுத்தப்பட்டன. வட்டி வீதம், மற்ற பத்திரங்களின் வட்டி வீதத்தைவிட அதிகமாக தீர்மானிக்கப்பட்டது.

**பணப்புழக்க சரிசெய்தல் வசதி**

இத்திட்டத்தில் ஜுன் 5, 2000 இத்திட்டம் அமல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் ரெப்போ (Repo) ஏலம் மூலம் மதிப்பை ஒரே நாளில் செலுத்த வேண்டும்.

மாணவர் செயல்முறை
பணக் கொள்கையின் பயன்பாட்டினை நீவிர் ஒரு குழுவாக இணைந்து பாட்டியலிடுக

## 2.3 நிதிக்கொள்கை (Fiscal Policy)

நிதிக்கொள்கை ஓர் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். நிதிக்கொள்கைக்கு மூன்று பணிகள் இருக்கின்றன.

- வரவு செலவு திட்டங்களில் சமூகப்பணிக்கான ஒதுக்கீடு.
- வரவு செலவு திட்டங்களில் வழங்கல் பணி.
- வரவு செலவு திட்டங்களில் நிலைப்படுத்துதல், அதாவது பொருளின் விலையில் மாற்றமில்லாமல் வழங்குதல்.

நிதிக்கொள்கைக்கு சம்மந்தமுள்ள சில சொற்றொடர்களை விவாதிப்போம்.




**படம் எண் 2.3.1 நிதிக்கொள்கை**

**நிதி பற்றாக்குறை**

நிதி பற்றாக்குறை என்பது மொத்த அரசாங்க செலவுகளுக்கும் அரசாங்க வருவாய்க்கும் இடையேயான இடைவெளியாகும். வருவாய் பற்றாக்குறை என்பது வருவாய் செலவுக்கும் நடப்பு வருவாய்க்கும் இடையேயான வித்தியாசமாகும். முதன்மை பற்றாக்குறை என்பது நிதி பற்றாக்குறைக்கும் கடனுக்கான வட்டி செலுத்துவதற்கான இடைவெளியாகும்.

அட்டவணை 2.6 - மத்திய அரசு பற்றாக்குறை (Percent of GDP at current Market prices)

| நிதி ஆண்டு | வருவாய் பற்றாக்குறை | மொத்த நிதி பற்றாக்குறை | முதன்மை பற்றாக்குறை |
|---|---|---|---|
| 1980-81 | 1.4 | 5.7 | 3.9 |
| 1985-86 | 2.1 | 7.8 | 5.1 |
| 1986-87 | 2.5 | 8.4 | 5.4 |
| 1987-88 | 2.6 | 7.6 | 4.4 |
| 1988-89 | 2.5 | 7.3 | 3.9 |
| 1989-90 | 2.4 | 7.3 | 3.7 |
| 1990-91 | 3.3 | 7.8 | 4.1 |
| 1991-92 | 2.5 | 5.6 | 1.5 |
| 1992-93 | 2.5 | 5.3 | 1.2 |
| 1993-94 | 3.8 | 7.0 | 2.7 |
| 1994-95 | 3.1 | 5.7 | 1.3 |
| 1995-96 | 2.5 | 5.1 | 0.9 |
| 1996-97 | 2.4 | 4.8 | 0.5 |
| 1997-98 | 3.0 | 5.8 | 1.5 |
| 1998-99 | 3.8 | 6.5 | 2.0 |
| 1999-20 | 3.5 | 5.4 | 0.7 |
| 2000-01 | 4.1 | 5.7 | 0.9 |
| 2001-02 | 4.4 | 6.2 | 1.5 |
| 2002-03 | 4.4 | 5.9 | 1.1 |
| 2003-04 | 3.6 | 4.5 | 0.0 |
| 2004-05 | 2.4 | 8.9 | 0.0 |
| 2005-06 | 2.5 | 4.0 | 0.9 |
| 2006-07 | 1.9 | 3.3 | -0.2 |
| 2007-08 | 1.1 | 2.5 | -0.9 |
| 2008-09 | 4.5 | 6.0 | 2.6 |
| 2009-10 | 5.2 | 6.5 | 3.2 |
| 2010-11 | 3.3 | 4.9 | 1.8 |
| 2011-12 திருத்தப்பட்ட மதிப்பீடு | 4.7 | 5.9 | 2.8 |

**ஆதாரம்**: 1. இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய பொருளாதாரத்தின் புள்ளியியல் கையேடு, 2008-09 (மும்பை, 2009) அட்டவணை 243, பக்கம் 464.

2. மத்திய வரவுசெலவு திட்டம் 2012-13 Business std March 17, 2012 page 7.

## நிதிப்பொறுப்பு மற்றும் வரவு செலவு திட்ட மேலாண்மை (Fiscal Responsibility and Budget Management Bill ) மசோதா

நிதிப்பொறுப்பு சட்டத்திற்கான கமிட்டி 17 ஜனவரி, 2000 தொடங்கப்பட்டது. இந்த கமிட்டி பல்வேறு நிதி அமைப்பை ஆராய்ந்து நிதிப்பொறுப்பு சம்பந்தமான வரைவை சிபாரிசு செய்தது. குழுவின் அறிக்கைப்படி மத்திய அரசின் நிதி பொறுப்பை பலப்படுத்த வேண்டும். அதன்படி நிதிப்பொறுப்பு மற்றும் வரவு செலவு திட்ட மேலாண்மை மசோதா டிசம்பர் 2000 அறிமுகப்படுத்தப்பட்டது.

**இந்த மசோதாவின் நோக்கங்கள்**

(i) **வருமான பற்றாக்குறை:** ஏப்ரல் 1, 2001 நிதியாண்டில் வருமான பற்றாக்குறையானது மொத்த உற்பத்தி குறியீட்டில் (GDP) 0.5 சதவீதத்திற்குள் குறைக்கவேண்டும்(அதாவது மார்ச் 31, 2006).

(ii) **நிதி பற்றாக்குறை:** ஏப்ரல் 1, 2001 நிதியாண்டில் மொத்த நிதி பற்றாக்குறையானது மொத்த உற்பத்தி குறியீட்டில் (GDP) 0.5 சதவீதமாக குறைக்கவேண்டும். இது படிப்படியாக ஐந்து ஆண்டிற்குள் 2 சதவீதமாக குறைக்கவேண்டும்.

(iii) **பொதுக்கடன்:** ஏப்ரல் 1, 2001 நிதியாண்டில்தொடங்கி பத்து ஆண்டுகளில் மத்திய அரசின் கடனானது (வெளிநாடுகளில் வாங்கிய கடனையும் சேர்த்து) 50 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கக்கூடாது.

(iv) **இந்திய ரிசர்வ் வங்கி கடன்:** மத்திய அரசு, ரிசர்வ் வங்கியில் ஏதேனும் கடன் வாங்க வேண்டுமென்றால், அத்துடன் போடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி நடக்கவேண்டும்.

## நிதிப்பொறுப்பு மற்றும் வரவு செலவு மேலாண்மை சட்டம்

பாராளுமன்ற நிலைக்குழு நிதிப்பொறுப்பு மற்றும் வரவு செலவு மேலாண்மை மசோதாவில் சில திருத்தங்கள் செய்து சட்டமாக ஐக்கிய முன்னனி அரசாங்கம் ஜூலை 5, 2004 அமல்படுத்தப்பட்டது.

இந்த சட்டத்தின்படி மார்ச் 2009 ஆண்டிற்குள் வருமான பற்றாக்குறை முற்றிலுமாக ஒழிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றும் நிதிப்பற்றாக்குறையை மொத்த உற்பத்தி குறியீட்டில் 3 சதவீதத்திற்கு குறைவாக இருக்கவேண்டும். மேலும் நிதி மற்றும் வருவாய் பற்றாக்குறையை குறைக்க ஆண்டுதோறும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. இதற்காக விஜய் கேல்கர் தலைமையில் ஒரு குழு அமைத்து நிதிக்கொள்கைகளை மத்திய அரசு கண்காணித்தது.

இதன் விளைவாக வரிக்கும் மொத்த உற்பத்தி குறியீடு விகிதம் (Tax – GDP Ratio ) 2003-04 ஆண்டில் 9.2 சதவீத்தில் இருந்து 2008-09 ஆண்டில் 13.2 சதவீதமாக அதிகரித்தது. அதுபோல செலவு – மொத்த உற்பத்தி குறியீடு விகிதம் (Expenditure – GDP Ratio) 2003-04 ஆண்டில் 15.4 சதவீத்தில் இருந்து 2008-09 ஆண்டு 14.3 சதவீதமாக குறைந்துள்ளது.

### 2019 ஆண்டில் நிதிபற்றாக்குறை

மத்திய நிதித்துறை தகவல்படி 2019 நவம்பர் மாதம்வரை நிதிபற்றாக்குறை கிட்டத்தட்ட 8.07 இலட்சம் கோடி ரூபாய். கடந்த செப்டம்பரில் மத்திய அரசு வணிக நிறுவணங்களுக்கு 1.45 இலட்சம் கோடி ரூபாய் வரிச்சலுகை வழங்கியது. பொருளாதார மந்த நிலையால் உள்நாட்டு மொத்த உற்பத்தி 4.5% குறைந்துள்ளது.

**அட்டவணை 2.7 - நிதிபற்றாக்குறை**

| ஆண்டு | நிதிபற்றாக்குறை (மொத்த உள்நாட்டு உற்ப்பத்தி சாதவீததில்) |
|---|---|
| 2015-16 | 3.9 |
| 2016-17 | 3.5 |
| 2017-18 | 3.5 |
| 2018-19 | 3.4 (PA) |
| 2019-20 | 3.3 (BE) |

**ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி (2020)**

**மாணவர் செயல்முறை**
நிதிக் கொள்கையின் சாதக, பதாகங்களை நீவிர் ஒரு குழுவாக இணைந்து ஆராய்க.

## 2.4 நிறும சமூக பொறுப்பு

நிறும சமூக பொறுப்பு என்ற கருத்தை முதன்முதலில் முன்மொழிந்தவர் பொருளாதார அறிஞர் பால் சாமுவேல்சன். நிறும சமூக பொறுப்பு என்பது சமூகத்திற்கு பல்வேறு வகையில் திருப்பி அளிப்பது. பல நிறுவனங்கள் பல்வேறு வகைகளில் சமூகப் பொறுப்பை ஆற்றுகின்றன. நிறும சமூக பொறுப்பு மூலம் வணிக நெறிகளை மேம்படுத்த முடியும். அதனால் தான் மத்திய அரசு தனது ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூபாய் 200 கோடிக்கு அதிகமான விற்பனை உள்ள நிறுமங்கள் இரண்டு சதவீத நிதியை சமூகப் பொறுப்புக்காக செலவிட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

கீத் டேவிசு என்ற அறிஞரின் கூற்றுபடி *“நிறும சமூக பொறுப்பு என்பது நிறுவனத்தில் நேரடி பொருளாதாரம் அல்லது தொழில்நுட்ப ஆசைகளை தாண்டி நிறுவனம் எடுக்கும் முடிவுகள் மற்றும் செயல்கள் ஆகும்”.*




**படம் எண் 2.4.1 நிறும சமூக பொறுப்பு**

### நிறும சமூக பொறுப்பு பகுதிகள்

நிறும சமூக பொறுப்பு பகுதிகளாக நுகர்வோர், ஊழியர்கள், சுற்றுச்சூழல், வணிகர்கள், சமூகம், பங்குதாரர்கள் மற்றும் நிறுவனம் என ஏழு பிரிவுகளாக பிரிக்கலாம்.




**படம் எண் 2.4.2 நிறும சமூக பொறுப்பு பகுதிகள்**

### 1. நுகர்வோர்

(i) பொருட்கள் மற்றும் சேவைகள் தரமாக இருத்தல் வேண்டும்.

(ii) பொருட்கள் விலை நியாயமான அளவில் இருத்தல் வேண்டும்.

(iii) விளம்பரம் பொருட்களுக்கு சம்பந்தம் உள்ளதாகவும், தகுந்ததாகவும் இருத்தல் வேண்டும். உதாரணமாக பஜாஜ் ஆட்டோ விளம்பரம் பணத்திற்கு மதிப்பு, பல வருடங்களில்.

(iv) நுகர்வோரை ஒரே மாதிரி நடத்தல் வேண்டும். அவர்களை ஜாதி, மதம், மொழி, இனம்

போன்ற காரணிகளைக் கொண்டு வேறுபடுத்துதல் கூடாது.

(v) நுகர்வோருக்கு தேவையான எல்லா தகவல்களை கொடுத்தல் வேண்டும்.

(vi) நுகர்வோருக்கு அற்புதமான சேவைகளை எந்நேரமும் அளிக்க வேண்டும். பெரும்பாலான நிறுவனங்கள் 24x7 வாடிக்கையாளர் சேவைகளை இலக்காக கொண்டுள்ளது.

2. ஊழியர்கள்

(i) ஊழியர்கள் ஓர் சராசரியான வாழ்க்கை வாழ சிறப்பான ஊதியம் வழங்க வேண்டும்.

(ii) பணிச்சூழல் பாதுகாப்பானதும் மற்றும் உகந்ததாகவும் இருக்க வேண்டும்.

(iii) ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் கல்வி வாய்ப்பை வழங்க வழிவகை செய்ய வேண்டும். ஏராளமான நிறுவனங்கள் ஊழியர்களுக்கு விடுப்பு வழங்கி ஊழியர்களின் உயர்கல்விக்கு உதவ வேண்டும்.

(iv) நிறுவனங்கள் ஊழியர்களின் உடல்நலம் மற்றும் மன நலனை காக்க முயற்சி எடுக்க வேண்டும். ஊழியர்களின் உடல் திறனை மேம்படுத்த நிறுவனங்கள் உள்ளரங்கு மற்றும் வெளியரங்கு விளையாட்டுகளை ஊக்குவிக்க வேண்டும்.

(v) தொழிலாளர் நலன் சார்ந்த விஷயங்களை மேம்படுத்த வேண்டும்.

(vi) ஊழியர்கள் மகிழ்ச்சியாக பணியாற்றுவதற்கு நிறுவனங்கள் மேம்பட வேண்டும்.

(vii) குடும்ப நலன் ஊழியர்களின் குடும்பத்தில் சண்டை சச்சரவு இன்றி இருந்தால், நிறுவனத்தின் உற்பத்தி கூடும். டாட்டா குழுமம் ஊழியர்களின் குடும்பத்திற்காக கல்வி, சுகாதாரம், கட்டமைப்பு என நலன் சார்ந்த நடவடிக்கையால் யுனெஸ்கோ(UNESCO) உலக பொருளாதார பரிசை JRD டாட்டா குழுமத்திற்கு வழங்கியது.

3. சுற்றுச்சூழல்

(i) எல்லா விதமான மாசுகளை குறைக்க மற்றும் கட்டுப்படுத்த வேண்டும்.

(ii) குப்பைகளை மறுசுழற்சி செய்யும் வசதிகளை பெருக்க வேண்டும்.

(iii) ஒவ்வொரு நிறுவனமும் சிறந்த சுற்றுச்சூழல் மேலாண்மை நிகழ்ச்சியை கொண்டிருக்க வேண்டும்.

4. வணிகர்கள்

(i) வணிகர், சட்டத்தைப் பின்பற்றுதல் வேண்டும்.

(ii) அவர் தனது வரிகளையும், பிற நிலுவைத் தொகைகளையும் முழுமையாகவும் நேர்மையாகவும் செலுத்துதல் வேண்டும்.

(iii) நியாயமற்ற வழிகளில் அரசியல் ஆதரவு பெற அவர் முயற்சி செய்யக்கூடாது.

(iv) அவர் தனது சொந்த இலாபத்திற்காக பொது ஊழியர்களை இலஞ்சம், ஊழலில் ஈடுபடத் தூண்டக் கூடாது.

(v) தேசிய நலனுக்கு தேவையேற்படும் பட்சத்தில், நியாயமான தியாகங்களைச் செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை தீவிரமாக்க, நேர்மையாகவும் நியாயமான முறையிலும் முயற்சி செய்ய வேண்டும்.

(vi) பதுக்குதல், கருப்புச் சந்தையிடுகை போன்ற நியாயமற்ற, சுகாதாரமற்ற வணிக நடவடிக்கைகளில் வணிகர்கள் ஈடுபடக்கூடாது.

5. **சமூகம்**

(i) உள்ளூர் மேம்பாட்டு தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க வேண்டும் உதாரணமாக சிறுதுளி என்ற அமைப்பு கோவை மாவட்ட நீர் நிலைகளை பாதுகாத்து மேம்படுத்த முயற்சிகள் செய்துவருகிறது.

(ii) சமூகத்தில் மாறும் தேவைகளுக்கு ஏற்ப வணிக தரத்தை மேம்படுத்த வேண்டும்.

(iii) பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தி சமமான மண்டல மேம்பாட்டை காணலாம்.

(iv) எல்லா வணிக பகுதிகளும் ஆராய்ச்சியை மேம்படுத்த வேண்டும்.

(v) கல்வி, சுகாதாரம், மக்கள் தொகை கட்டுப்பாடு மற்றும் நீடித்த நிலைத்த மேம்பாட்டை பெருக்க வேண்டும்

6. **பங்குதாரர்கள்**

(i) பங்குதாரர்களின் வளத்தை அதிகரித்தல்.

(ii) பங்கு ஆதாயத்தை குறித்த நேரத்தில் கொடுத்தல்.

(iii) பங்குதாரர்களின் நலனை பாதுகாத்தல்.

(iv) பங்குதாரர்களை முடிவெடுக்கும் நடவடிக்கைகளில் இணைத்தல்.

இன்ஃபோசிஸ், விப்ரோ போன்ற கணினி நிறுவனங்கள் பங்குதாரர்களுக்கு நிறுமத்தின் உரிமையை (Employee Stock Option Plan) வழங்கி கௌரவிக்கிறது.

7. **நிறுவனம்**

(i) **அரிதான தேசிய வளங்களை குறைவாக பயன்படுத்துதல்:** நிறுவனங்கள் தற்பொழுது அரிதான தேசிய வளங்களை குறைவாக பயன்படுத்துகிறது. இந்திய புகையிலை நிறுவனம் தனது சில திட்டங்களுக்கு காற்று சக்தியை பயன்படுத்துகிறது. மஹிந்திரா மற்றும் மஹிந்திரா நிறுவனம் மாற்று எரிபொருளை கண்டுபிடிக்க முயற்சிக்கிறது.

(ii) ஊழியர்களுக்கு தரமான வாழ்க்கை மற்றும் தரமான பொருட்களை உற்பத்தி செய்தல்.

(iii) சுற்றுச்சூழல் பாதுகாப்பு.

(iv) **கிராமப்புற மேம்பாடு:** சில நிறுவனங்கள் ஆலைக்கு அருகிலுள்ள கிராமங்களை தத்தெடுத்து சாலை, கல்வி வசதி, சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதி செய்து தருகிறது. யுனிலீவர் நிறுவனம் தன்னுடைய சக்தி திட்டத்தின் மூலம் ஊரக பெண்கள் மேம்பாட்டை

பல மாநிலங்களில் உறுதி செய்கிறது. இந்திய புகையிலை நிறுவனம் இ-சாப்பல் திட்டத்தின் மூலம் கிராம வழங்கல் முறையில் புரட்சி செய்தது.

### சமூக பொறுப்புக்கு ஆதரவான வாதங்கள்

(i) **சமூக மதிப்புகளில் மாற்றம்:** நுகர்வோர் நலன், நலிவடைந்த மக்களை மேம்படுத்துதல், பயன்களை பகிர்தல் போன்ற சமூக மதிப்புகள் இப்பொழுது உருவாக்கப்படுகிறது.

(ii) **நீண்ட கால பலன்கள்:** இலாபத்தை அடைதல் என்பது குறுகிய கால பலன். ஆனால் சமூக பொறுப்பு தொடர்பான நிகழ்ச்சிகள் நீண்டகால பலன்களை தரக்கூடியது.

(iii) **நிறுமத்தின் அடையாளம்:** நிறும சமூக பொறுப்பு என்பது நிறுமத்தின் அடையாளத்தை பல்வேறு வழிகளில் உயர்த்துகிறது.

(iv) **சமூகத்திற்கு நன்மை:** மேலாண்மை மற்றும் நிதி வசதிகளை கொண்டு சமூகத்திற்கு எண்ணற்ற நன்மைகளை செய்ய முடியும்

(v) நலன் சார்ந்த மாநிலம்: நிறுவ சமூக பொறுப்பினால் அரசாங்கத்தின் நலன் சார்ந்த திட்டத்திற்கு பேருதவி செய்கிறது.

(vi) **சமூகத்திற்கு திருப்பிக் கொடுத்தல்:** சமுதாயத்தின் பல்வேறு அங்கங்களை நுகர்வோர், ஊழியர்கள், முதலீட்டாளர்கள் போன்றோரின் பங்களிப்பால் வணிகம் வளர்கிறது. எனவே நிறுவனமானது சமூகத்திற்கு ஓரளவு அது பெற்ற பயணிகளை திருப்பிக் கொடுக்க வேண்டும்.

(vii) **முதலீட்டாளர்கள் மகிழ்ச்சி:** நிறுவனம் சமூக பொறுப்பான காரியங்களில் ஈடுபட்டால் முதலீட்டாளர்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைவர்.

(viii) **சமுதாயப் பிரச்சினைக்கு தீர்வு:** சமுதாயத்தில் நிலவக்கூடிய வறுமை , வேலைவாய்ப்பின்மை, கல்வியறிவின்மை போன்ற பிரச்சனைகளை நிறுவ சமூக பொறுப்பை கொண்டு தீர்வு காணலாம்

(ix) **முழுமையான வளர்ச்சி:** ஒட்டுமொத்தமாக நிறும சமூக பொறுப்பு என்பது முழுமையான வளர்ச்சியை நோக்கி செல்கிறது.

### சமூக பொறுப்புக்கு எதிரான வாதங்கள்

(i) **அளப்பதற்கு கடினம்:** சில வகையான சமூக பயன்களை அளப்பது என்பது கடினமான காரியம்.

(ii) **இலாப அதிகமாக்கல் கொள்கைக்கு எதிரானது:** வணிகத்தின் பொதுவான நோக்கம் என்பது லாபத்தை ஈட்டுவது மற்றும் உரிமையாளர்களின் நலனை பாதுகாப்பதாகவும். ஆனால் நிறும சமூக பொறுப்பு என்பது இலாபம் ஈட்டுவதற்கு எதிரானது.

(iii) **அதிக செலவு:** மக்கட்தொகை வளர்ச்சி மற்றும் பணவீக்கத்தினால், நிறும சமூக பொறுப்பு அதிக செலவுக்கு வழி செய்யும்.

(iv) **பொதுமக்கள் ஆதரவு குறைவு:** இந்தியாவில் பொதுமக்களிடையே நிறும சமூக பொறுப்புக்கு ஆதரவு மிக குறைவு.

(v) **இயக்குனர்களின் ஆதரவின்மை:** பல நிறுவனங்களில் இயக்குனர்களே சமூக பொறுப்புக்கு ஆதரவான மனநிலை இல்லை. ஏனென்றால் பொருளாதார மந்த நிலையின் போது சமூக பொறுப்புக்கு செலவு செய்வது என்பது ஏற்புடையதாக இருக்காது.

(vi) **சமூக திறன் குறைவு:** வணிகர்களிடம் வணிக திறன் அதிகமாக உள்ளது. சமூகத்தை பற்றி சிந்திக்கும் திறன் குறைவு.

**மாணவர் செயல்முறை**
நிறும சமூக பொருப்புகளின் கடைமைகளை நீவிர் ஒரு குழுவாக இணைந்து பட்டியலிடவும்.

## 2.5 நீடித்த நிலையான வளர்ச்சி

உலகில் 2030-ம் ஆண்டிற்குள் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய வேண்டும் என்று ஐக்கிய நாட்டுச் சபை முடிவு செய்துள்ளது. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் செப்டம்பர் மாதம் 2015 உருவாக்கப்பட்டது. இதன் நோக்கம் 17 நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவது மற்றும் 169 அதற்குரிய இலக்குகளை அடைவதாகும். இந்த இலக்குகளின் நோக்கம் பட்டினியை எல்லா வடிவத்திலும் ஒழிப்பதாகும். இந்தியாவில் நிதி ஆயோக் என்ற நிறுவனம் இந்த நீடித்த நிலையான இலக்குகளை அடைய உதவி புரிகிறது. நிதி ஆயோக் இந்த இலக்குகள் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் மாநில அளவில் தேசிய அளவிலும் செய்கிறது.




**படம் எண் 2.5.1 நீடித்த நிலையான வளர்ச்சி**

**நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்**

1. வறுமை ஒழிப்பு (No Poverty)
2. பட்டினி இன்மை (Zero Hunger)
3. நல்ல உடல்நலம் மற்றும் ஆரோக்கியம் (Good Health and well being)
4. தரமான கல்வி (Quality Education)
5. ஆண்/பெண் சமத்துவம் (Gender Equality)
6. தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம் (Clean Water and Sanitations)
7. பெறக்கூடிய மற்றும் தூய்மையான சக்தி (Affordable and Clean Energy)
8. நியாயமான பணி மற்றும் பொருளாதார வளர்ச்சி (Decent Work and Economic Growth)
9. தொழில் புத்தாக்கம் மற்றும் கட்டமைப்பு (Industry, Innovation and Infrastructure)
10. சமத்துவமின்மையை குறைத்தல் (Reduced Inequalities)
11. நீடித்த நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் (Sustainable cities and communities)
12. பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி (Responsible consumption and production)
13. காலநிலை மாற்றம் (Climate Change)
14. தண்ணீருக்குக் கீழே வாழ்க்கை (Life below water)
15. நிலத்தின் மேல் வாழ்க்கை (Life on Land)
16. அமைதி, நீதி மற்றும் வலிமையான நிறுவனங்கள் (Peace, justice and Strong Institutions)
17. நோக்கங்களுக்காக கூட்டாண்மை (Partnership for the goals)

**நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை பற்றி சுருக்கமாக காண்போம்**

1. **வறுமை ஒழிப்பு:** நீடித்த நிலையான வளர்ச்சியின் முதன்மை இலக்கே நாட்டின் வறுமையை ஒளிப்பதாகும். இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளோர் 2011-12 ஆம் ஆண்டில் 23.5 சதவீதமாக குறைந்துள்ளது.
2. **பட்டினியின்மை:** இந்த நோக்கத்தின் இலக்கு எல்லா விதமான சத்து குறைபாடுகளை நீக்கி, பாதுகாப்பான, சத்தான, போதுமான உணவு அனைவருக்கும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். மேலும் சிறிய அளவில் வேளாண்மை தொழில் புரிவோர்களை ஆதரிக்க வேண்டும். இந்தியா உலகில் உள்ள 117 நாடுகளில், 102 தரவரிசையில் உலக பசி குறியீட்டெண்ணில் (Global Hunger Index) உள்ளது. பசி என்பது குறைவான கலோரி மற்றும் புரதச்சத்து உணவு வகை கொள்வதாகும். 2015 ஆண்டு புள்ளிவிவரப்படி இந்தியாவில் சத்துக் குறைபாடு 40 சதவீதமாக குறைந்துள்ளது. 25 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நல்ல மழை வளத்தால், இந்தியா 2019ஆம் ஆண்டு 102.19 மெட்ரிக் டன்

கோதுமை உற்பத்தி செய்துள்ளது.

3. **நல்ல உடல் நலம் மற்றும் ஆரோக்கியம்:** இதன் இலக்கானது தொற்று நோய்களை ஒழித்து, மரணத்தை தடுத்து உலகளாவிய ஆரோக்கியத்தை நோக்கி நடை போடுதல், அனைவருக்கும் தரமான மருத்துவ சேவைகள், மருந்துகள், தடுப்பூசிகளை வழங்குதல் போன்றதாகும். 2018 புள்ளிவிவரப்படி இந்தியாவில் 479 மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் மருத்துவ சேவைகளை மக்களுக்கு வழங்குகிறது. 2017 எடுக்கப்பட்ட ஆய்வின்படி இந்தியாவில் ஏழில் ஒருவர் மனநலம் சம்பந்தப்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐந்துக்கும் குறைவான வயதில் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆயிரத்திற்கு 49 ஆக 2013 குறைந்துள்ளது.
4. **தரமான கல்வி:** இந்த நோக்கத்தின் இலக்கானது அனைத்து ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்கு தரமான, சமமான, இலவச தொடக்க மற்றும் இடைநிலை கல்வியை வழங்குவதாகும். மத்திய அரசின் கேந்திர வித்யாலயா மற்றும் நவோதயா பள்ளிகள் மூலம் தரமான கல்வியை வழங்குகிறது. தரமான கல்வி என்பது வேலைவாய்ப்புக்கு உகந்த தொழில்நுட்ப மற்றும் தொழில் திறனை மேம்படுத்துதல் ஆகும். இதன் மூலம் நாட்டில் தொழில் முனைவோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம். ஆரம்பப்பள்ளியில் 2013 ஆம் ஆண்டில் மாணவர்கள் சேர்க்கை 88 சதவீதமாகும்.
5. **ஆண்/பெண் சமத்துவம்:** ஆண்/பெண் சமத்துவம் என்பது இருவருக்கும் சமமான உரிமைகள் வழங்குவதாகும். அதாவது சொத்துரிமை, நிலவுரிமை, இயற்கை வளங்கள் உரிமை சமத்துவமாகும். இந்தியாவில் உள்ளாட்சி பதவிகளில் 50 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் மட்டும் எண்ணிக்கை மிகக்குறைவாக உள்ளது.
6. **தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம்:** இந்த நோக்கத்தில் இலக்கு அனைவருக்கும் உலகத்தரமிக்க பாதுகாப்பான மற்றும் சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் வழங்குவதாகும். பிரதமர் மோடி அவர்களின் தூய்மை இந்தியா திட்டம் மூலம் கழிப்பறைகள் கட்டப்பட்டு திறந்த வெளியில் மலம், ஜலம் கழிப்பது ஒழிக்கப்பட்டது. 2012 ஆண்டு புள்ளிவிவரப்படி இந்திய ஊரக பகுதிகளில் 59 சதவீதம் மக்கள் சுகாதார வசதிகளை கிடைப்பது கடினமாக உள்ளது. பல நாடுகளில் நிலத்தடி நீருக்கு ஆதாரமாக இருந்த நீர்பிடிப்பு பகுதிகள் அளிக்கப்பட்டுள்ளன. உலகெங்கும் 170 கோடி மக்கள் இந்த நீர் ஆதாரத்தின் மீது தான் குடியிருக்கிறார்கள். 1998க்கு 20 ஆண்டுகள் கழித்து 2019ல் அதிக மழை (110 சதவீதம்) பெய்துள்ளது. சமீபத்தில் தண்ணீர் சக்தி அமைச்சகம் லோக்சபாவில் வெளியிட்ட புள்ளிவிவரப்படி மூன்று லட்சம் குடும்பங்கள் ஊரக இந்தியாவில் நாளுக்கு 40 லிட்டருக்கு குறைவாக குடிநீர் பெறுகிறார்கள்.
7. **பெறக்கூடிய மற்றும் தூய்மையான சக்தி:** இந்த இலக்கின் நோக்கமானது நவீன, நம்பகத்தன்மையுள்ள பெறக்கூடிய சக்தி சேவைகளை வழங்குவதாகும். 2013-14 ஆண்டு புள்ளிவிவரப்படி இந்தியாவில் புதுப்பிக்கக்கூடிய சக்தி 12 சதவீதமாகும். மத்திய அரசின் நிறுவனமான NTPC, 2022 ஆண்டுக்குள் 50,000 கோடி மதிப்பீட்டில் பத்து கிகா வாட் சூரியசக்தியை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. பிரதம மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டத்தின் மூலம் இயற்கை எரிவாயு பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 94.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.

**அட்டவணை 2.8 – இயற்கை எரிவாயு பயனாளிகள்**

| ஆண்டு | பயனாளிகள் (சதவீதத்தில்) |
|---|---|
| **01-04-2014** | 55.9 |
| **01-04-2015** | 56.2 |
| **01-04-2016** | 61.9 |
| **01-04-2017** | 72.8 |
| **01-04-2018** | 80.9 |
| **01-04-2019** | 94.3 |

**ஆதாரம்**: 2019 பிரதம மந்திரி, உஜ்வாலா யோஜனா, செயல் தணிக்கை அறிக்கை எண் 14, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம்.

8. **நியாயமான பணி மற்றும் பொருளாதார வளர்ச்சி**: இந்த இலக்கின் நோக்கமானது வளர்ச்சி சார்ந்த கொள்கைகளை ஊக்குவித்தலாகும். இதன் மூலம் உற்பத்தி பணிகளை ஊக்குவித்தல், நல்ல வேலை வாய்ப்பை உருவாக்குதல், தொழில்முனைதலை மேம்படுத்துதல் மற்றும் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் நிதி சேவைகளை பெறுதலாகும். 2013-14 ஆண்டு புள்ளிவிவரப்படி இந்திய அளவில் வேலைவாய்ப்பின்மை 5 சதவீதமாக இருக்கிறது.

9. **தொழில், புத்தாக்கம் மற்றும் கட்டமைப்பு**: எல்லாவிதமான நீர்நிலைகளை தாங்கக்கூடிய சாலை வசதிகள் இல்லாத குடியிருப்புகளுக்கு சாலை வசதிகள் தரவேண்டும் என்பது ஒரு இலக்காகும். ஏற்கனவே பாரத்நெட் திட்டத்தின் மூலம் மத்திய அரசு 1.3 லட்சம் கிராம பஞ்சாயத்துகளுக்கு இணைய சேவைகளை வழங்கியுள்ளது. அடுத்த சில மாதங்களில் 2.5 லட்சம் கிராம பஞ்சாயத்துகளுக்கு மத்திய அரசு இணைய சேவையை வழங்கயுள்ளது.

10. **சமத்துவமின்மை குறைத்தல்**: மத்திய அரசு நிதி, ஊதியம் மற்றும் சமூக பாதுகாப்பு கொள்கைகளை பின்பற்றி இந்திய மக்கள் தொகையில் அடித்தட்டில் உள்ள 40 சதவீத மக்களின் சராசரி ஊதியத்தை உயர்த்தி, சமத்துவத்தை உறுதி செய்ய இந்திய அரசு முயற்சிக்கிறது. பிரசவத்தின்போது தாய் மற்றும் சேய் இறப்பு விகிதம் குறைந்திருக்கிறது. ஐக்கிய நாடுகளின் 2018ல், 5 வயதுக்குக்கீழ் குழந்தை இறப்பு சம்பந்தமாக ஒரு அறிக்கை வெளியிட்டது அதில் பெண் குழந்தைகளின் பிறப்பு சதவீதம் ஆண் குழந்தைகளை விட அதிகமாக இருக்கிறது. கேரள மாநிலத்தின் தான் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைவாக உள்ளது.

**அட்டவணை 2.9 – குழந்தைகள் இறப்பு விகிதம்**

| மாநிலம் | ஐந்து வயதுக்குக்கீழ் பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் | ஐந்து வயதுக்குக்கீழ் ஆண் குழந்தைகளின் இறப்பு விகிதம் | வித்தியாசம் |
|---|---|---|---|
| ஜார்க்கண்ட் | 38 | 30 | 8 |
| அஸ்ஸாம் | 51 | 45 | 6 |
| ஹரியானா | 38 | 32 | 6 |
| உதிர பிரதேசம் | 48 | 43 | 5 |
| ராஜஸ்தான் | 45 | 41 | 4 |
| பீகார் | 43 | 39 | 4 |

**ஆதாரம்:** ஐக்கிய நாடுகள் 2019 குழந்தைகளின் இறப்பு சம்பந்தமான அறிக்கை

11. **நீடித்த நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள்:** ஏழை மக்களுக்கு தேவையான, போதுமான, பாதுகாப்பான இருப்பிடம், அடிப்படைத் தேவைகளை வழங்குதல், சேரிகளை மேம்படுத்துதல், மரண எண்ணிக்கையை குறைத்தல், மக்களை பல்வேறு இயற்கை பேரிடரிலிருந்து காத்தல் ஆகியவை இவ்விலக்கின் நோக்கமாகும்.

12. **பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி:** உலக சுகாதார நிறுவனம் அறிக்கையின்படி 2050 உலக மக்கள் தொகை 9.6 மில்லியன் ஆக இருக்கும். ஒரு பில்லியன் மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டால் அவதிப்படுவர்.

13. **காலநிலை மாற்றம்:** சுற்றுச்சூழல் மாசுபாட்டால் உலக காலநிலை ஆண்டுக்கு சராசரியாக 2 டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகரிக்கும். இந்தியா பசுமை வாயுக்கள் வெளியிடுவதில் நான்காவது இடத்தில் உள்ளது.

14. **தண்ணீருக்கு கீழே வாழ்க்கை:** 97 சதவீதம் பூமி நீரால் சூழப்பட்டுள்ளது. இந்தியாவை சுற்றி கிழக்கிலும் மேற்கிலும் நீண்ட கடற்கரை உள்ளது. 10 லட்சம் மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

15. **நிலத்தின் மேல் வாழ்க்கை:** தேவையான வளங்களை எல்லா ஆதாரங்களும் மற்றும் நிலைகளில் பெறுதல், இயற்கை அமைப்பை தேசிய மற்றும் உள்ளூர் திட்டங்களுடன் இணைத்தல், வறுமை ஒழிப்பு யுக்திகளை உருவாக்கல் போன்றவை இலக்காகும்.

16. **அமைதி, நீதி மற்றும் வலிமையான நிறுவனங்கள்:** திறமையான, பொறுப்பான மற்றும் வெளிப்படையான நிறுவனங்களை எல்லா நிலையிலும் உருவாக்குவதே இந்த இலக்கின் நோக்கமாகும்.

17. **நோக்கங்களுக்கான கூட்டாண்மை:** நீடித்த நிலையான வளர்ச்சியை அடைவதற்கு

சர்வதேச வல்லுனர்களுடன் கூட்டாண்மை அமைக்க வேண்டும். உதாரணமாக மத்திய இடைநிலை கல்வி வாரியம் (CBSE) தனது கல்வித் திட்டத்தில் மைக்ரோசாப்ட் நிறுவனதுடன் சேர்ந்து செயற்கை நுண்ணறிவை (Artificial Intelligence) அறிமுகப்படுத்தியது.

### முன்மாதிரி கிராமத் திட்டம்

ஊரக வளர்ச்சி துறை மூலம் கிராமங்களில் அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் இந்திய அரசால் 2014ஆம் ஆண்டு முன்மாதிரி கிராமத் திட்டம் (Saansad Adarsh Gram Yojana) தொடங்கப்பட்டது. இத்திட்டம் தொடர்பாக பிரதமர் மோடி அவர்கள் 18 அம்ச வழிகாட்டுதல்களை வெளியிட்டார். அவை பின்வருமாறு.

1) காந்தியின் சுயராஜ்யக் கொள்கையை கடைபிடித்தல்.
2) ஏழை, நலிவடைந்தோருக்கு பயன் கிடைத்தல்.
3) கிராமத்தை தேர்வு செய்ய ஒரு மாத கால அவகாசம்.
4) சமவெளியில் 3000-5000, பழங்குடியினர் பகுதியில் 1000-3000 மக்கள் தொகை உள்ள கிராமத்தை தேர்வு செய்தல்.
5) பஞ்சாயத்து தலைவர், மாவட்ட ஆட்சியருடன் ஆலோசித்து திட்ட அறிக்கை தயாரித்தல்.
6) நாடாளுமன்ற தொகுதி நிதி செலவினம் தொடர்பாக, மத்திய கிராமப்புற வளர்ச்சித்துறை குழுவுடன் ஆலோசனை நடத்துதல்.
7) மக்கள் பங்களிப்புடன் வெளிப்படையாக செயல்படுத்தல்.
8) கிராம பஞ்சாயத்துகள், மக்கள் ஆதரவுடன் அமலாக்கம்.
9) உள்ளூர், சமூக கலாச்சாரங்களுக்கு மதிப்பளித்தல்.
10) தன்னார்வ ஆராய்ச்சி நிறுவனங்களின் பங்களிப்பை பெறுதல்.
11) சுகாதாரம், பொருளாதாரம், சுற்றுச்சூழல், அடிப்படை வசதிகள், நல்லுலகத் திட்டங்களை வகுத்தல்.
12) சாலை, குடிநீர், சுகாதாரம் அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்க யுக்தி வகுத்தல்.
13) நவீன தொலைத்தொடர்பு, தொழில்நுட்ப வசதிகள், வேளாண் தொழில்நுட்ப வாய்ப்புகளை உருவாக்குதல்.
14) தனியார் தன்னார்வ அமைப்புகள் கூட்டுறவுத் துறைகளின் ஒத்துழைப்பை பெறுதல்.
15) திட்டச் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்தல்.
16) திட்டத்தின் நன்மைகளை பற்றி பிரச்சாரம் செய்தல்.
17) திட்ட அமலாக்கத்துக்கு பிந்தைய தேவைகளை ஆராய்தல்.
18) திட்ட முடிவில் மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தல்.

**மாணவர் செயல்முறை**
இந்தியாவின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்து ஒரு குழுவாக விவாதிக்கவும்.

## தொகுப்புரை

பொதுக் கொள்கை திட்டங்கள் முடிவெடுத்தலுக்கு பேருதவி புரிகிறது. சூழ்நிலையில் இச்செயல் வழியை மேற்கொள்ள வேண்டும் என்பதை பொதுக் கொள்கைத் திட்டம் தெளிவாக்குகிறது. பண மதிப்பிழப்பு, மின்னனு பரிவர்த்தனை மற்றும் பொருட்கள் மற்றும் சேவை வரி போன்ற பொதுக் கொள்கை திட்டங்கள் இப்பாடத்தில் விளக்கப் பட்டுள்ளது. நவம்பர் 8, 2016இல் பணமதிப்பிழப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும், அது 2017 முழுவதும் தன் பாதிப்புகளை உணர செய்தது. செல்லாததாக்கப்பட்ட நோட்டுகளில் ரூ.15,28,000 கோடி மதிப்புடைய பணம் (அதாவது மொத்த மதிப்பான ரூ.15,44,000 கோடியில் 99 சதவிகிதம்) ஆர்.பி.ஐ திரும்ப வந்துவிட்டது. நிதிக் கொள்கை மற்றும் பணக்கொள்கையின் நோக்கங்கள் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. நிறும சமூக பொறுப்பு பகுதிகளாக நுகர்வோர், ஊழியர்கள், சுற்றுச்சூழல், வணிகர்கள், சமூகம், பங்குதாரர்கள் மற்றும் நிறுவனம் என ஏழு பிரிவுகளாக பிரிக்கலாம். 17 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை விவரித்துள்ளோம்.

## மாதிரி வினா

1. பொதுக் கொள்கைகள் சிலவற்றை விவரிக்கவும்
2. பணக்கொள்கைகளின் நோக்கங்கள் யாவை?
3. நிதிக்கொள்கை என்றால் என்ன?
4. சமூக நிறும பொருப்புகளின் நன்மைகள் மற்றும் தீமைகள் யாவை?
5. நிலையான நீடித்த வளர்ச்சியின் இலக்குகளை விவரிக்கவும்.

## வாசிப்பு பொருள்

- இந்திய ரிசர்வ் வங்கி
- சேவை மற்றும் சரக்கு துறை வெளியீடு
- இந்திய ரிசர்வ் வங்கி புள்ளியியல் விபரம்.
- இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய பொருளாதாரத்தின் புள்ளியியல் கையேடு, 2008-09 (மும்பை, 2009) அட்டவணை 243, பக்கம் 464
- மத்திய வரவுசெலவு திட்டம் 2012-13 Business std March 17, 2012 page 7
- பிரதம மந்திரி, உஜ்வாலா யோஜனா, செயல் தணிக்கை அறிக்கை எண் 14, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம்.
- ஐக்கிய நாடுகள் 2019 குழந்தைகளின் இறப்பு சம்பந்தமான அறிக்கை

குறிப்புரை


- Ahmed. F. and Alam, A. (2014). Business Environment: Indian and Global Perspective. Prentice Hall: New Delhi.
- Francis Cherunilam (2017). Business Environment Text & Cases. Himalaya Publishing House. New Delhi
- Dr. Radha (2013). Business Environment. Prasanna Publications, Chennai
- Ramaswamy V. S. and Namakumari S (2010): Marketing Management: Tata McGraw Hill, New Delhi

# அலகு 3- இந்தியாவில் திட்டமிடல் மற்றும் சீர்திருத்தங்கள்

## அத்தியாய அறிமுகம்

சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியா வேகமான வளர்ச்சியைப் பெறவும், நாட்டில் உள்ள ஒவ்வொரு மக்களுக்கும் வளர்ச்சியின் பலன் சென்றடைவதற்காகவும் ஜனநாயக சமதர்மக் கொள்கையை பின்பற்றுவது என முடிவு செய்தது. ஜனநாயக சமதர்ம நாட்டை உருவாக்க வேண்டுமானால் எல்லாத் துறைகளும் ஒருங்கே வளர்ச்சி பெற்றால் தான் அது சாத்தியமாகும். இதற்காக இந்தியா பொருளாதாரத் திட்டமிடலை கருவியாகத் தேர்ந்தெடுத்து துரிதமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் பெற முனைந்தது. மத்திய திட்டக் குழு 1951 ஆம் ஆண்டு அமைக்கப் பட்டதிலிருந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் மூன்று ஓராண்டுத் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்கள் பல நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் அமைந்திருந்தன. ஆனாலும் நோக்கங்களின் முக்கியத்துவம் காலத்திற்குக்காலம் மாற்றியமைக்கப் பட்டன. ஆரம்ப ஐந்தாண்டு காலத்திட்டங்கள் பொருளாதார வளர்ச்சிக்கும். சமீப ஐந்தாண்டு காலத் திட்டங்கள் நவீனமயமாக்குதலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இந்தியா வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடு, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், வேலை வாய்ப்புகளை உயர்த்தவும், வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் உள்ள தாழ்வுகளைக் குறைக்கவும், வலியவர்கள் எளியவர்களைச் சுரண்டும் நிலையை நீக்கவும், நீதியை நிலை நாட்டவும், பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டவும் சீர்திருத்தங்கள் உதவுகிறது. பல நூற்றாண்டுகளாக இந்திய வேளாண்மை விரைவான வளர்ச்சியைப் பெறாமல் தேக்க நிலையிலேயே இருந்து வந்தது. தனி ஒருவருக்கான சாகுபடி நில அளவு 1901-ஆம் ஆண்டிலிருந்தே குறைந்து வருகிறது. விரைவான மக்கள் பெருக்கத்தால் நிலவுடைமைகள் சிறு அளவுகளில் துண்டாக்கப்பட்டன. குத்தகையாளர்கள் அதிக வாரத்தைத் தர வேண்டியிருந்தது. நிலதின் மீதான அவர்களின் உரிமை உறுதியற்றதாக இருந்தது.

ஜமீன்தாரி முறை வழக்கில் இருந்தபோது நிலக்கிழார்கள் வாரத்தைப் பெறுபவர்களாக மட்டுமே திகழ்ந்தனர். நிலத்தில் நிரந்தர முன்னேற்றங்களைச் செய்து உற்பத்தித் திறனை உயர்த்த உதவவில்லை. நிலக்கிழார்களும் இடைநிலையாளர்களும் செல்வ நிலையில் திளைத்தபோது நிலத்தை உழுபவர்கள் வறுமையின் கொடிய பிடியில் சிக்கித் தவித்தனர். வறுமைக்கும் இந்திய வேளாண்மைக்கும் இடையேயான தொடர்பு தொடர்ந்து பல ஆண்டுகளாக நீடித்து வருகிற அவ்வறுமையைக் குறைக்க நிலச்சீர்திருத்தங்களின் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

## அத்தியாய நோக்கங்கள்

இப்ப பாடத்தை படித்த பின்னர் நீங்கள்

- ஐந்தாண்டு திட்டங்களை பற்றி விவரிக்க முடியும்.
- நிலச்சீர்த்திருத்தங்களின் முக்கியத்துவத்தை விளக்க முடியும்.
- பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கலை விளக்க முடியும்.
- பசுமைப் புரட்சியின் முக்கியத்துவத்தை விவரிக்க முடியும்.
- பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டினை விளக்க முடியும்.

அத்தியாய அமைப்பு

3.1 ஐந்தாண்டு திட்டங்கள்

3.2 நிலசீர்திருத்தங்கள்

3.3 பொருளாதார  தாராளமயமாக்கள் மற்றும் உலகமயமாக்கல்

3.4 பசுமை புரட்சி

3.5 பொதுத்துறை நிறுவங்களின் செயல்பாடு

## 3.1 ஐந்தாண்டு திட்டங்கள்

இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்கள் பல நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் அமைந்திருந்தன. ஆனாலும் நோக்கங்களின் முக்கியத்துவம் காலத்திற்குக்காலம் மாற்றியமைக்கப் பட்டன. ஆரம்ப ஐந்தாண்டு காலத்திட்டங்கள் பொருளாதார வளர்ச்சிக்கும். சமீப ஐந்தாண்டு காலத் திட்டங்கள் நவீனமயமாக்குதலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.




படம் எண் 3.1.1 ஐந்தாண்டு திட்டங்கள்

**ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம்**




**படம் எண் 3.1.2 ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம்**

**1) பொருளாதார வளர்ச்சி**

பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதுதான் ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. முதலில் பொருளாதார வளர்ச்சியை பெற்று விட்டாலோ திட்டமிடலில் உள்ள அனைத்து நோக்கங்களும் தானாகவே நிறைவேற்றப்பட்டு விடும் என்று நம்பப்படுகிறது. மற்ற நாடுகளில் பொருளாதார வளர்ச்சி பணக்காரவர்க்கத்தினருக்கு சாதகமாகவும் ஏழைகளைச் சுரண்டுவதுமாகவே இருந்து வருகிறது.

பொருளாதார வளர்ச்சியானது தேசிய வருமான உயர்வு விகிதம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு இருக்கிறது என்பதை வைத்து அளவிடப்படுகிறது இந்திய முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 11% வளர்ச்சியை தேசிய வருமானத்தில் பெறவேண்டும் என இலக்கு நிர்ணயித்தது. இந்த இலக்கினை இந்தியா அடைந்ததோடு மட்டுமில்லாமல் 18% தேசிய வருமான வளர்ச்சி பெற்றுள்ளது.

**2) தன்னிறைவு பெறுதல்**

முதல் மற்றும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தன்னிறைவடைதல் என்பதனை குறிக்கோள்களில் ஒன்றாக குறிப்பிடப் பட்டிருந்தாலும் அவைபற்றி தெளிவாக வரையறுக்க முடியவில்லை. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்துதான் தன்னிறைவடைதல் என்ற கொள்கை சரியாக புரிந்து கொள்ளப்பட்டு வரையறுக்கப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து உணவு தானிய இறக்குமதியை குறைத்தால் தான் அந்நியச் செலாவணி பற்றாக்குறையை நீக்கி

தேவையானவற்றிற்கு மட்டும் அதைப் பயன்படுத்தலாம் என நான்காவது திட்டத்தில் தெளிவாகக் காட்டப்பட்டது. பருவமழை பொய்த்துப் போனதால் அந்த காலத்தில் இறக்குமதி செய்யப்பட்டது. 1978ல் தானிய இறக்குமதியை குறைத்து அதே சமயத்தில் இரும்பு எஃகு இயற்றிரச் சாதனங்கள், கனரக பொறியியல் சாதனங்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து புதிய தொழில் நுட்பத்தினை பெற்றது.

### 3) முழுவேலைவாய்ப்பு

இந்தியாவில் பொதுவாக அனைத்து ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கமே முழு வேலை வாய்ப்பு ஆகும். முழு வேலை வாய்ப்பு என்பது குறிப்பிட்டுச் சொல்லும் படியாக எப்போதுமே இருந்ததில்லை. இதற்கு காரணம் திட்டமிடுபவர்கள் வேலை வாய்ப்பினையும் முதலீட்டினையும் ஒன்றிணைத்தார்கள். மேலும் மக்கள் தொகை எப்போதுமே உயர்ந்து கொண்டிருப்பதால் வேலை தேடும் மக்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே சென்றது. திட்டங்களின் மூலமாக வேலை வாய்ப்பைப் பெருக்க எதுவும் அதிசயத்தக்கதாக வகையில் அமையவில்லை. கிராமப்புற வேலைவாய்ப்பு, சுயவேலை வாய்ப்புத் திட்டங்களும் வேலையின்மைப் பிரச்சனையை தீர்த்து வைப்பதாக இல்லை. ஒவ்வொரு ஆண்டும் வேலையின்மையின் அளவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஏதாவது தீவிர முயற்சி எடுக்கால் ஒழிய முழுவேலைவாய்ப்பு என்பது நம்கைகளுக்கு கிடைக்கும் வாய்ப்பே இல்லை.

### 4) நவீனமயமாக்குதல்

நவீனமயமாக்குதல் என்பது ஆறாவது ஐந்தாண்டுத்திட்டங்களிலிருந்து தான் மிக முக்கிய நோக்கங்களில் ஒன்றாக தெளிவாகக் குறிப்பிடப்பட்டது. தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதுதான் நவீனமயமாக்கல் என கொள்ளப்பட்டது.

ஆனால் நவீனமயமாக்குதல் என்பது பலதரப்பட்ட அமைப்பு மற்றும் ஸ்தாபன ரீதியில் பொருளாதாரக் கூட்டமைப்பில் ஏற்படும் மாறுதல்கள் ஆகும். உற்பத்தி முறையில் மாற்றம் தொழில் நுட்ப முன்னேற்றத்தில் பலதரப்பட்ட யுக்திகள் மற்றும் ஸ்தாபனங்களில் புதுமையை புகுத்துதல் எல்லாம் பிரபுத்துவ மற்றும் காலனிப் பொருளாதாரத்தை நவீனப் படுத்துவதும் தனித்தன்மையோடு விளங்குவதுமே ஆகும். விவசாயத் துறையில் தொழில் நுட்ப முன்னேற்றம் அதிக அளவில் இருந்ததில்லை. அதிக விளைச்சல் தரும் இனங்கள், இராசயன உரங்களின் நுகர்வு அதிகரித்தல் நீர்ப்பாசனப் பகுதியை அதிகரித்தல் போன்றவைகள் தான் சற்று அதிகரித்தன. கால்வாய் நீர்ப்பாசன முறைகளை நவீனப் படுத்துதலில், நீர்ப்பாசனம் மற்றும் நீர்மேலாண்மை, புதிய எரி சக்தி உபயோகம் போன்றவைகள் இன்னும் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் காணவில்லை. தொழில் துறையைப் பொறுத்தமட்டில், நவீனப் படுத்துதல் அதிக அளவில் மேற்கொண்டாலும் உற்பத்தி குறைந்த அளவே இருக்கிறது. 1991 ஜுலையில் அறிவிக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையில் நமது தொழில் நுட்பத்தை முன்னேற்றி நிகழ்காலத்திற்கு தகுந்தவாறு மாற்றியமைக்க தேவையான சூழ்நிலை உருவாகலாம் என நம்பிக்கை இருந்தது.

### 5) சமூகநிதி

#### அ) வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைப்பது

திட்டத்தின் தொடக்க நிலைகளில் பொருளாதார வளர்ச்சியின் பயன் பொருளாதாரத்தில் தாழ்ந்த மக்களின் பிரச்சனைகளைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இருந்தாலும்

பிரச்சனைகளை குறைக்கவில்லை. கிராமப்புறங்களில் நீடிக்கும் பிரபுத்துவ முறையாலும், நகர்ப்புறத்தில் தொழில் மயமாதலாலும் வருமான ஏற்றத் தாழ்வுகள் அதிக அளவில் இருந்தது. இந்தியாவில் வருமான ஏற்றத்தாழ்வுகள் முதலீட்டிலிருந்து கிடைக்கும் வரவுகள், தொழில் முனைவு மற்றும் ஊக இலாபம், அதிக சம்பளம் மற்றும் தொழில் முற்றுரிமை இவையெல்லாம் மூலகாரணங்களாக அமைந்தன. திட்டக்குழுவே வருமான ஏற்றத் தாழ்வுகளின் ஆபத்தை குறிப்பிட்டுக் காட்டி இதை நிதிக் கொள்கை மூலம் தான் சரி செய்ய முடியும். வருமான ஏற்றத்தாழ்வுகளின் அளவு சம்பந்தமாக நம்பகமான புள்ளி விவரங்கள் கிடைக்காதது காரணமாகும் பணக்காரர்களும் பெரும் பணக்காரர்களும் வரி விதிப்பால் பாதிக்கப்படாமல் நடுத்தர வர்க்கத்தினரே பாதிக்கப்படுகின்றனர் எனவே ஓர் புதிய பார்வை இந்தப் பிரச்சனையில் அவசரமாக தேவைப் படுகிறது. அப்போதுதான் சமூக நிதி என்பது எல்லாருக்கும் உறுதியளிக்கப்படும்.

**ஆ) ஏழ்மையை போக்குவது**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு தான் ஏழ்மையைப் போக்குவது என்ற நோக்கம் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது ஆறாவது திட்டத்திற்கு முன்பு வரைபொருளாதார வளர்ச்சி ஏழை மற்றும் பின்தங்கிய மக்களுக்கு பலன் தருவதாக அமையவில்லை. எனவே ஆறாவது திட்டத்தில் ஏழ்மையை போக்குவது என தீர்மானிக்கப்பட்டது. இந்த நோக்கத்திற்காக திட்டக்குழு சில குறிப்பிடும் படியான திட்டங்களை ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காக நடைமுறைப்படுத்துவது என முடிவுசெய்தது. இத்திட்டங்களின் நோக்கம் ஏழை மக்களுக்கு தேவையாக அத்தியாவசிய தேவையை பூர்த்தி செய்வதற்காகவே ஆகும்.

இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு இவ்வகையான ஐந்தாண்டுத் திட்டங்கள் சரியான யுக்திகளாக உள்ளன. தொடக்க காலத்தில் இந்தியத்திட்டங்கள் தோல்வியடைந்தாலும் நான்காவது திட்டத்திலிருந்து திட்டங்கள் திறம்பட இருப்பதற்கு திட்டத்தில் நவீன தொழில் நுட்பம் புகுத்தப் பட்டது தான் காரணமாகும்.

## ஐந்தாண்டுத் திட்டம்

### 1. முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951-56)

முதல் ஐந்தாண்டுத்திட்டம் இரட்டை நோக்கங்களை உடையதாக உள்ளது. அவை

அ) நாட்டின் பிரிவினை மற்றும் இரண்டாம் உலகப்போர் ஆகியவற்றினால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டபிரச்சினையை சரிப்படுத்துதல்.

ஆ) நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை தூண்டுதல் 1951ஆம் ஆண்டில் அதிக அளவில் உணவு தானியங்கள் இறக்குமதி செய்யப் பட்டதாலும் நாட்டில் பணவீக்க அழுத்தம் அதிகமாக இருந்ததாலும், இத்திட்டம் விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்தது. பொதுத்துறையிலிருந்து பெற்ற மொத்த வருமானத்தில் சுமார் 44.6% இத்துறையின் வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்டது.

### 2. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் (1956-61)

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கங்கள்

அ) நாட்டு வருமானத்தில் 25% அதிகரிப்பை ஏற்படுத்துதல்.

ஆ) வேலை வாய்ப்புகளை பேரளவில் பெருக்குதல்

இ) வருமானம் மற்றும் செல்வத்திலுள்ள ஏற்ற தாழ்வுகளைக் குறைத்தல்.

இத்திட்டம் முதலீட்டு வீதத்தை நாட்டு வருமானத்தில் 7% லிருந்து 11% மாக இத்திட்ட இறுதியில் உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. மேலும் தொழில் மயமாக்கலும் முக்கியமாக கருதப்பட்டது. இத்திட்ட காலத்தில் இருப்பு மற்றும் எஃகு, கனரக ரசாயன மற்றும் கனரக பொறியியல் மற்றும் இயந்திர கட்டுமானத் தொழில் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

3. **மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டம் (1961-66)**

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள்

அ) ஆண்டிற்கு 5%க்கு மேல் தேசிய வருமானத்தில் அதிகரிப்பைப் பெறுதல்

ஆ) தொடர்ந்து அடுத்த திட்ட காலங்களிலும் இதே வளர்ச்சி வீதத்தைப் பெறும் விதத்திலான முதலீட்டின் வீதத்தை உறுதி செய்தல்.

இ) தொழில் மற்றும் ஏற்றுமதியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில், உணவு தானியங்களில் தன்னிறைவையும் விவசாயம் சார்ந்த உற்பத்தியில் அதிகரிப்பையும் பெறுதல்.

ஈ) அடிப்படைத் தொழில்களைப் பெருக்குதல். இதன்நோக்கம் தன்னுடைய சொந்தவள ஆதாரங்களில் இருந்தே 10 ஆண்டு காலத்திற்குள் தொழில் மயமாக்கலை மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையானவற்றைப் பெறுதல் ஆகும்.

உ) நாட்டின் மனித சக்தி வள ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்புகளை பெருக்குதல்.

ஊ) அனைவருக்கும் சமவாய்ப்பை அளித்து வருமானம் மற்றும் செல்வத்தின் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் பொருளாதார சக்தியின் சம பகிர்ந்தளிப்பை உறுதி செய்தல் இத்திட்டம் நாட்டின் வருமானத்தை 30% உயர்த்த திட்டமிட்டது. தனிநபர் வருமானத்தையும் சுமார் 17% உயர்த்த எண்ணியது.

4. **நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (1969-74)**

அபிவிருத்தியின் வேகத்தை தீவிரப்படுத்துவதும் விவசாய உற்பத்தியின் ஏற்ற இறக்கங்களை குறைப்பதுமே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்தன. சமவாய்ப்பு, சமூகநீதி ஆகியவற்றை அபிவிருத்தி செய்ய வடிவமைக்கப்பட்ட திட்டங்களின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இத்திட்டம் முனைந்தது. வேலை வாய்ப்பு மற்றும் கல்வி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் பலவீனமான பிரிவினரின் நிலையை உயர்த்துவதற்கு இத்திட்டம் முக்கியத்துவம் கொடுத்தது. பொருளாதார சக்தி, செல்வம், வருமானம் போன்றவற்றையும் அவற்றில் உள்ள ஏற்றத்தாழ்வுகளையும் குறைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டது.

5. **ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்டம் (1974 - 79)**

ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்டமானது நாட்டிலுள்ள பண அழுத்தத்தினை குறைக்க

சுற்றுத்திட்டமாக அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது (1) வறுமையினை ஒழிப்பது (2) தன்னம்பிக்கை அளித்தல் ஆகும்.

இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் பண அழுத்தத்தினை குறைப்பதோடு மட்டுமல்லாமல் கட்டுப்படுத்துவதும் ஆகும். இத்திட்டத்தின் மூலமாக நாட்டினுடைய தேசிய வருமானமானது 55% வளர்ச்சியடைந்தது.

6. **ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் (1980- 85)**

இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டமானது ஜனதா ஆட்சியின் திட்டக் குழுவினரால் வடிவமைக்கப்பட்டது. காலம் 1980 முதல் 1985 வரை.

இத்திட்டத்தின் நோக்கமானது

அ) வேலையில்லாத் திண்டாட்டத்தினை நீக்குவது.

ஆ) ஏழைமக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது.

இ) ஏழை மக்களின் அடிப்படைத் தேவையினை பூர்த்தி செய்வது (குடிநீர், படிப்பு, உடல், நலம், சாலைகள், வீட்டுவசதி)

ஈ) வருமானம் மற்றும் செல்வத்துக் கிடையேயான வேறுபாட்டினை நீக்குவது.

உ) மக்களுக்கு தன்னம்பிக்கையினை வளர்க்க வழிவகை செய்தல். இத்திட்டத்தின் மூலம் வளர்ச்சியானது 4.7% ஆகும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே வறுமை மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தினை ஒழிப்பதாகும்.

7. **ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் (1985 – 90)**

ஏழாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் முக்கிய நோக்கமே உணவு தானியங்களின் உற்பத்தி, வேலை வாய்ப்பு மற்றும் உற்பத்தித் தன்மை ஆகியவற்றில் தீவிர அபிவிருத்தி பெறுதலேயாகும். அக்கால கட்டத்தில் அரசு, விவசாயிகள் ஆகியோர்களின் முயற்சியோடு தட்பவெப்பநிலையும் சாதகமாக இருந்ததால் நாட்டினுடைய உணவு உற்பத்தி 3.23% அதிகரித்தது. வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அதன்விளைவால் ஏற்படும் வறுமையினையும் குறைக்க ஏற்கனவே உள்ள திட்டத்துடன் ஜவஹர் ரோஜ்ஹர் யோஜ்னா போன்ற திட்டங்களும் தொடங்கப்பட்டன. நாட்டின் தகுதியை அதிகரிக்கவும் இந்திய பொருளாதாரத்தின் பன்னாடு சார்ந்த போட்டியை அதிகரிக்கச் செய்யும் வகையில் பல கொள்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக இத்திட்ட காலத்திற்கு செய்யப்பட்ட செலவு ரூ. 218 கோடியாகும்.

இத்திட்டகாலத்தில் முழு மொத்த உள்நாட்டுப் பொருளின் சராசரி வளர்ச்சி வீதம் ஆண்டிற்கு 5.6% ஆக இருந்தது.

8. எட்டாவது ஐந்தாண்டுத்திட்டம் (1992-97)

இத்திட்டத்தின் மைய நோக்கமே மனித வளத்தை மேம்படுத்துதல் அல்லது மனித மூலதனத்தை உருவாக்குதல் ஆகும் இத்திட்டத்தின் நோக்கங்களாவன.

1. இந்நூற்றாண்டுக்குள் அனைவருக்கும் வேலை வாய்ப்பினை அளித்தல்.
2. வளர்ந்து வரும் மக்கள் தொகையினை குறைத்தல்.
3. கல்லாமையை முழுவதுமாக இல்லாது ஆக்குதல்.
4. கிராமப்புறப்பகுதியில் உள்ள மக்களுக்கு தேவையான அடிப்படை வசதியினை அளித்தல்.
5. தேவைக்கு மற்றும் தானியங்களை உற்பத்தி செய்யாமல் ஏற்றுமதிக்கும் தேவையான அளவு உற்பத்தி செய்தல்.
6. நாட்டினுடைய தகவல் தொடர்பு, போக்குவரத்து ஆகியவற்றின் மேம்பாட்டின் மூலமாக பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்தல்.
7. பிற துறைகளையும் வளர்ச்சியடையச் செய்தல் (தொழிற்சாலை மற்றும் தனியார் துறை நிறுவனங்கள்). இத்திட்டக்காலத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சராசரி வளர்ச்சி வீதம் 5.6% ஆகும். மொத்தச் செலவுகள் ரூ. 3,61,000 கோடிகளாகும்.

### 9. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் (1997-2002)

இத்திட்டமானது முதலீட்டினை போக்குவரத்து தகவல் தொடர்பில் மட்டுமல்லாது எண்ணெய் சுத்தம் செய்தல், ஸ்டீல் மற்றும் பிற தொழிலகளில் அதிக அளவில் முதலீடு செய்து கொண்டிருக்கிறது. இத்திட்டத்தின் படி இந்திய மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை பல்வகையான நடவடிக்கையில் தங்களது பணத்தினை முதலீடு செய்யக் கூறுகிறது.

இத்திட்டக்காலத்தில் பொருளாதாரம் சராசரியாக ஆண்டிற்கு 6.5% வளரும் எனவும் உள் நாட்டு சேமிப்பு வீதம் 26.1% ஆகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வளர்ச்சி வீதமானது 5.4% மாகவே உள்ளது. இத்திட்டகாலத்தில் மொத்தச் செலவுகள் ரூ. 8,59,000 கோடிகள் ஒதுக்கப்பட்டது. முந்தைய அரசின் செலவு திட்டமானது ரூ. 8,75,000 கோடியாகும்.

### 10. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (2002-2007 )

இத்திட்டத்தின் நோக்கம் இந்திய அரசு சமூக துறை மற்றும் கட்டமைபபு மேம்பாட்டில் முதலீடு செய்ய வேண்டும். மாநிலங்களுக்கு தனித்தனியாக வளர்ச்சி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மொத்த வளர்ச்சி இலக்கு 8 சதவீதம்.

### 11. பதினோராம் ஐந்தாண்டுத் திட்டம் (2007-2012)

வளர்ச்சி வீதம் 9  சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது. சுகாதாரம் மற்றும் கல்வி ஏழைகளுக்கு அளிப்பது, கல்வி மற்றும் திறன் மேம்பாடு மூலமாக மக்களை உயர்வடைய செய்வது, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி போன்றவை பிற  நோக்கங்களாகும்.

### 12. பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (2012 -2017)

விரைவான, நிலையான நீடித்த மற்றும் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கி வளர்ச்சியை நோக்கமாக இத்திட்டம் கொண்டுள்ளது.

## நிதி ஆயோக்

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு மாநிலங்களில் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவது தொடர்பாக 1950 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி மத்திய திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிலையில் 2014 ஆம் ஆண்டு சுதந்திர தின உரையின்போது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசு மத்திய திட்டக் குழுவை கலைத்துவிட்டு, மாநிலங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் புதிய குழு அமைக்கப்படும் என அறிவித்தார். இதன்படி 2015, ஜனவரி 1 ஆம் தேதி திட்டக் குழுவுக்குப் பதிலாக நிதி ஆயோக் என்ற புதிய அமைப்பு மத்திய அரசால் உருவாக்கப்பட்டது.

மாணவர் செயல்முறை
இந்து ஆண்டு திட்டங்களின் சாதக, பாதக அம்சங்களை அலசி ஆராய்க.

## 3.2 நிலச் சீர்திருத்தங்கள்

இந்தியா வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடு, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், வேலை வாய்ப்புகளை உயர்த்தவும், வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் உள்ள தாழ்வுகளைக் குறைக்கவும், வலியவர்கள் எளியவர்களைச் சுரண்டும் நிலையை நீக்கவும், நீதியை நிலை நாட்டவும், பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டவும் சீர்திருத்தங்கள் உதவுகிறது.




**படம் எண் 3.2.1 நில சீர்திருத்தங்கள்**

### நிலச்சீர்த்திருத்தங்களின் நோக்கங்கள்

கிராம புனரமைப்புக்கு வேளாண்மை வளர்ச்சியும், நிலச் சிர்திருத்தங்களும் இன்றியமையாதவை. நிலச்சீர்திருத்தங்களில் முக்கிய நோக்கங்களாவன. 1) சமுதாய நீதியை நிலை நாட்டுவது 2) பொருளாதார ரீதியில் உற்பத்தித் திறனை உயர்த்துவது, கடந்தகால வேளாண்மை அமைப்பு முறையின் மூலம் வேளாண்மை உற்பத்தி உயர்வுக்கு எதிராக ஏற்படும் தடைகளை நீக்குவதும், வேளாண்மை உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குத் தேவையான சமூகச் சூழ்நிலைகளை உருவாக்குவதும் நிலச்சீர்திருத்தங்களின் நோக்கங்கள் எனத் திட்டக் குழு குறிப்பிட்டது. இச்சீர்த்திருத்தங்களின் மூலம் வேளாண்மை அமைப்பு முறையிலுள்ள சுரண்டல் நிலையைத் தவிர்த்து நிலத்தை உழுபவருக்கு பாதுகாப்பளிப்பதும், கிராம மக்களின் நிலத்தை உழுபவருக்கு பாதுகாப்பளிப்பதும், கிராம மக்களின் அனைத்துப் பிரிவினருக்கும் சம வாய்ப்பளிப்பதும் அவசியமென உணரப்பட்டது.

இந்நோக்கங்கள் நிறைவேற, நிலச் சீர்திருத்தங்கள் வாயிலாக பின்வரும் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன

1. **இடைநிலையாளர்களை ஒழிப்பது**

2. **நிலக்கிழாருக்கும் குத்தகையாளர்களுக்கும் இடையேயான தொடர்பை ஒழுங்குபடுத்துவது**

   நியாய வாரங்களை நிர்ணயிப்பது. குத்தகையாளருக்கான குத்தகைக் காலத்திற்குப் பாதுகாப்பளிப்பது, நிலக்கிழார், நிலத்தின் ஒரு பகுதியைச் சொந்தக் சாகுபடிக்கு எடுத்துக் கொள்வதை அனுமதிப்பது. படிப்படியாகக் குத்தகையாளர் நிலவுடைமையாளராக மாறுவதற்கான உரிமைகளை வழங்குவது, குத்தகையாளருக்கும் அரசுக்கும் இடையே நேரடித் தொடர்பை ஏற்படுத்துவது போன்றவை வாயிலாக இவ்விரு பிரிவினருக்கும் இடையேயான தொடர்பை ஒழுங்குபடுத்துவது போன்றவைகளாகும்.

3. **நில மறுபகிர்வு**

   நிலவுடைமைகளின் மீது உச்சவரம்பு விதிப்பதன் மூலம் கிடைக்கும் உபரி நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்குத் தருவது முக்கிய நோக்கமாக இருந்தது. புதிதாக நிலத்தை வாங்குபவர்களுக்குத் தருவது முக்கிய நோக்கமாக இருந்தது. புதிதாக நிலத்தை வாங்குபவர்களும், ஒரு குறிப்பிட்ட அளவுவரை தான் வாங்கும் உரிமையைப் பெறுவார். நில உச்சவரம்பு விதிப்பினால் பெறப்பட்ட உபரி நிலம் வேளாண்மை உழைப்பாளர்களுக்கும், சிறு விவசாயிகளுக்கும், இறுதிநிலை விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டது. 1994-95 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 51.30 லட்சம் ஏக்கர் நிலங்கள் 40.69 லட்சம் நிலமில்லாத ஏழைகட்கு மறுபகிர்வு செய்வதன் மூலம் அளிக்கப்பட்டது.

4. **சிதறிக் கிடக்கும் சிறிய துண்டு துண்டு நிலங்களை இணைப்பது**

   விரைவான மக்கள் பெருக்கத்தால் விளை நிலங்களைத் துண்டுபோடும் நிலை உருவாகியுள்ளது. துண்டு நிலங்களை இணைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். சாகுபடிக்குகந்த இலட்சிய அளவுகள் நிலவுடைமைகள் அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

5. **கூட்டுறவுச் சாகுபடி முறையை வளர்ப்பது**

   சிறிய நிலவுடைமைகளை இணைத்துக் கூட்டாகச் சாகுபடி செய்வதற்கான ஊக்க உதவிகள் வழங்கப்பெறும். இதன் மூலம் பேரளவுச் சாகுபடியின் எல்லா நன்மைகளையும் பெறலாம். இறுதியாக, கூட்டுறவுக் கிராம நிர்வாக அடிப்படையில் கூட்டுறவுச் சாகுபடி முறை அமைய முயற்சிகள் செய்யப்படும்.

   இந்நோக்கங்களை வெற்றி கொள்வதால் நேரடி நன்மையைப் பெறுவர். கிராம மக்களாக இருப்பினும் மறைமுக நன்மையை நகர மக்களும் அடைவர். இதன் மூலம் சமூக பொருளாதார நீதி காக்கப்பட்டு, அனைவருக்கும் சமவாய்ப்பு கிட்டும்.

## நிலவுடைமை முறை

இந்தியாவின் நிலவுடைமை முறைகள் வெவ்வேறு காலங்களில் வேறுபட்டவையாக இருந்தன. நிலவுடைமையாளர்கள் யார், நிலச் சாகுபடியாளர்கள் யார், அரசுக்கு நிலவரி செலுத்துபவர் யார் என்ற நிலைமைகளுக்கேற்ற நிலவுடைமை முறைகள் அமைகின்றன. இவ்வடிப்படையிலான மூன்று நிலவுடைமை முறைகளைப் பின்வருமாறு விளக்கலாம்.




**படம் எண் 3.2.2 நிலவுடைமை முறை**

### 1. ஜமீன்தாரி முறை அல்லது நிலக்கிழார் - குத்தகையாளர் முறை

இம்முறையில் நில உரிமை ஒருவரிடமும் நிலச்சாகுபடி வேறொருவரிடமும் அமைந்திருக்கும். நிலக்கிழார் நிலவுடைமையாளராகவும், குத்தகையாளர் நிலத்தை நிர்வகித்து சாகுபடி செய்பவராகவும் அமைகின்றனர். முன்னமேயே தீர்மானிக்கப்பட்ட உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட பங்கை நிலக்கிழார் பெறுகின்றனர். நிலக்கிழார் அரசுக்கு நிலவரி செலுத்துபவர் சாகுபடியாளருக்கும் அரசிற்கும் நடுவே இடை நிலையாளராகத் திகழ்கின்றனர். ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டு விட்டாலும் அதன் இயல்புகளைக் கொண்ட நிலக்கிழார் - குத்தகையாளர் முறை இன்றும் நீடிக்கிறது. இம்முறை வேளாண்மை ஆக்கத் திறனைக் குறைத்து வளர்ச்சியைத் தடை செய்கிறது.

இந்தியா விடுதலையடைவதற்கு முன் மொத்தச் சாகுபடி நிலத்தில் சுமார் 43 சதவீதம் ஜமீன்தாரி முறையின் கீழ் இருந்தது. நிலவுடைமையாளர் தானே சாகுபடி செய்யாமல் குத்தகையாளர்களிடம் நிலத்தை ஒப்புவிக்கும்முறை இதனால் பெரிதும் வளர்ந்தது. குத்தகை காலத்திலும் உறுதியின்மை அமைந்திருந்தது. நாடு விடுதலையடைந்த பிறகு ஜமீன்தாரி முறை வேளாண்மை வளர்ச்சிக்கு உகந்ததல்ல என்பது உணரப்பட்டது. அதன் விளைவாக 1954 இல் எல்லா மாநிலங்களிலும் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இச்சட்டங்கள் செயல்படுத்தப்பட்டமையால் சுமார் 20 மில்லியன் குத்தகையாளர்கள் நிலவுடைமையாளர்களாக மாறினர். சுமார் 25 இலட்சம் ஹெக்டர் நிலம் குத்தகையாளர்களுக்கும், பிற விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. நிலவுடைமைகளைச் சொந்தமாகப் பெற்ற விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கத்தைப் பெற்றனர்.

நிலவுடைமை உரிமையை சாகுபடியாளரிடமே வழங்குவது கீழ்க்காணும் நன்மையை விளக்குகின்றது.

1) சாகுபடி நில அளவு பெருக்கம்
2) வேளாண்மை உற்பத்தி உயர்வு
3) நீர்ப்பாசன வசதிகள் பெருக்கம்
4) புதிய சாகுபடி முறைகளின் ஏற்பு

5) சாகுபடி வருவாய் அதிகரிப்பு

6) அரசின் வரி வருவாய்

7) சிறிய நிலவுடைமைகளின் இணைப்புக்கான வாய்ப்பு

எனவே, ஜமீன்தார் முறை ஒழிக்கப்பட்டதாலும், நமது நிலவுடைமையில் இருந்த பெரிய குறைபாடுகள் களையப்பட்டன.

2. **மஹல்வாரி முறை (Mahalwari System) அல்லது சமூக முறைச் சாகுபடி (Communal System of Farming)**

இம்முறையின் கீழ் நிலவுடைமை உரிமை கூட்டமைப்பினால் பெறப்படும். பெரும்பாலும் கிராம அளவில் நிர்வகிக்கும் அலகு அமையும். நிலமானது தனிப்பட்ட விவசாயிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டு, வரிகளும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். மொத்தமாக வரியை அரசிடம் செலுத்துவது கிராம அமைப்பின் பொறுப்பு. இம்முறை பஞ்சாப், மத்தியப் பிரதேசம், உத்திரப்பிரதேசம் (ஆக்ரா பகுதி) ஆகிய மாநிலங்களில் வழக்கில் இருந்தது. இம்முறை உற்பத்தித் திறனை ஊக்குவிப்பதாகவும் நிலத்தில் நிரந்த முன்னேற்றங்கள் செய்வதைத் தூண்டுவதாகவும் அமைந்தது.

3. **ரயத்துவாரி முறை (Ryotwari System) அல்லது சொந்தச் சாகுபடி முறை (Owner Cultivator System)**

இம்முறையில் ஒவ்வொரு பதிவுச் செய்யப்பட்ட நிலவுடைமையாளரும் அரசுக்கு நிலவரி செலுத்த வேண்டியவராவர். அரசுக்கு அவர் வரி செலுத்தி வரும் வரை அவரே நிலவுடைமையாளர். அவர் தனது நிலத்தைப் பிறரிடம் விற்கலாம் அல்லது பிறருக்கு உரிமையை மாற்றித் தரலாம். ரயத்துவாரிகள் பலரும் தங்கள் நிலவுடைமைகளை குத்தகையாளரிடம் உயர்வாரத்திற்குத் தரும் வழக்கம் பெருகியது. இம்முறையின் கீழ் அமைந்துள்ள நிலவுடைமைகள் அளவில் சிறியனவாக இருப்பதால் முன்னேற்றச் சாகுபடி முறைகளைக் கைக்கொள்வது கடினமாகிறது.

நிலச் சீர்திருத்தங்களின் மூலம் பொருளாதார முன்னேற்றத்தையும் சமுதாய மாற்றத்தையும் பெற இயலும். வேளாண்மைத் துறையில் நீடிக்கும் சுரண்டலைத் தவிர்க்கவும், சமூக நீதியை நிலை நிறுத்தவும் நிலச் சீர்திருத்தங்கள் உதவும். இதன் காரணமாக மாநில அரசுகள் நிலச்சீர்திருத்த சட்டங்களை நிறைவேற்றி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இவற்றின் வாயிலாக வேளாண்மையில் முதலீடு கூடி, உற்பத்தித் திறன் பெருகி, வருவாய் பெருகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நிலச்சீர்திருத்தங்களின் வளர்ச்சி

கடந்த 55 ஆண்டுக் காலத்தில் இந்தியாவின் நிலச்சீர்த்திருத்தங்கள் மூன்று வேறுபாடான முறைகளின் அடிப்படையில் வளர்ந்துள்ளன. அ) அரசு அளிக்கும் ஊக்கங்களைப் பயன்படுத்தி மக்கள் தாங்களாகவே நிலச்சீர்திருத்தங்களை ஏற்றல், சிறிய நிலவுடைமைகளை இணைத்தல், கூட்டுறவுச் சாகுபடி முறை ஆகியவற்றை இம்முறையில் சேர்க்கலாம் ஆ) மாநில அரசுகள் இயற்றும் சட்டங்களுக்குட்பட்டு விவசாயிகள் தாங்களாகவே நிலச்சீர்த்திருத்தங்களைச் செயல்படுத்துதல் சிறிய நிலவுடைமைகளின் இணைப்பு இம்முறையால் சாத்தியமானது இ) இடை நிலையாளர்களை ஒழிப்பது, குத்தகைச் சீர்த்திருத்தங்களை, நிலவுடைமை மீதான உச்சவரம்புகள்

ஆகியவை குறித்த சட்டங்களை மக்கள் கட்டாயமாக ஏற்குமாறு செய்தல்.

### குத்தகைச் சாகுபடி முறை

நிலத்தை உழுபவருக்கே உடைமையாக்க நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் வகை செய்கின்றன. அதன் மூலம் சமத்துவ சமுதாயத்தைப் பெற்று, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி குத்தகையாளர்கள் சுரண்டப்படும் நிலை தவிர்க்கப்படுகிறது.

### 1. விளை பொருள்களைப் பங்கிட்டுக் கொள்ளுதல்

இம்முறையின் கீழ், முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையில் நிலவுடைமையாளரும் குத்தகையாளரும் விளை பொருளைப் பங்கிட்டுக் கொள்வர். பங்கீட்டளவு மாநிலங்களுக்கிடையே வேறுபடுகிறது. ஒரு மாநிலத்திற்குள்ளாகவே பெறப்படும் நீர்ப்பாசன வசதிக்கேற்பவும் இது மாறுபடும். மொத்த உற்பத்தியில் இரண்டில் ஒரு பங்கு அல்லது மூன்றில் ஒரு பங்கு வாரமாகக் குத்தகையாளரால் நிலவுடைமையாளருக்குக் தரப்படுகிறது. இரண்டில் ஒரு பங்கு வராமாகத் தரப்படும் இடங்களில் விதைகள், உரங்கள், நீர்பாசனம் போன்ற உள்ளீடுகளுக்கான தொகையை இரு சாராரும் சமமாக ஏற்கின்றனர். உழைப்பாளர்கள் மற்றும் கால்நடைகளுக்கான செலவுகளைக் குத்தகையாளர் ஏற்கும்போது நிலவரிச் செலுத்துவது நிலவுடைமையாளர் ஆவார்.

### 2. பண அடிப்படையிலான குத்தகை

இம்முறையில் குத்தகையாளர் நிலவுடைமையாளருக்கு பணக் குத்தகையைத் தருகின்றனர். நிலத்தின் வளம், நிலத்திற்கான தேவை மற்றும் அளிப்பு நீர்ப்பாசன வசதி, சாகுபடிப் பணி ஆகியவற்றிற்கேற்ப குத்தகைப் பண அளவு வேறுபடும். வேளாண்மை செழித்துள்ள இடங்களில் பணக்குத்தகை அதிகமாகவும் வேளாண்மை பின்தங்கிய இடங்களில் பணக்குத்தகை குறைவாகவும் அமைகின்றன. விளைபொருள்களைப் பங்கிட்டு கொள்வதைவிட பணம் குத்தகையையே நிலவுடைமையாளர்களும் குத்தகையாளர்களும் விரும்புகின்றனர். இம்முறையில் குத்தகையாளர்கள் பயிர் நாசமாகிவிட்டதென்றோ, ஆக்கச் செலவு அதிகரித்து விட்டது என்று சொல்லியோ, உற்பத்திக் குறைத்து விட்டதென்றோ தவறான விவரங்களைத் தந்து நிலவுடைமையாளர்களை ஏமாற்ற முடியாது. இதைப் போன்றே நிலவுடைமையாளர்கள் உற்பத்தி உயரும்போது அதிகக் குத்தகைப் பணத்தைக் கேட்க இயலாது. எந்தெந்தப் பயிர்களைச் சாகுபடி செய்வது, எந்த உள்ளீடுகளை பயன்படுத்துவது, எந்தச் சாகுபடி முறையைப் பின்பற்றுவது போன்றவற்றைத் தீர்மானிப்பதில் குத்தகையாளர்கள் முழுச் சுதந்திரத்தைக் கொண்டுள்ளனர். கிராமங்களில் வசிக்கும் நிலவுடைமையாளர்கள் விளை பொருள்களைக் குத்தகையாகப் பெற விரும்பும் போது, பிற தொழில்களில் ஈடுபட்டுப் பணியாற்றும் நகர்ப்புற வாசிகளான நிலவுடைமையாளர்கள் பணக் குத்தகைகளைளே பெரிதும் விரும்புகின்றனர்.

### 3. குத்தகைச் சாகுபடி முறை

சுய சாகுபடி முறையை ஊக்குவிப்பது நமது நிலச்சீர்த்திருத்தங்களின் இலக்காக இருப்பினும் குத்தகை முறையின் கீழ் அமைந்துள்ள நில அளவு பெரிதும் குறைந்து விடவில்லை. நில அளவு, நிலச்சீர்திருத்தங்களின் விளைவாக சுமார் 3 மில்லியன் குத்தகையாளர்கள் நிலவுடைமையாளர்களாக்கப்பட்டுள்ளனர். விரைவான மக்கள் பெருக்கம், வேலைவாய்ப்புகள் பெருகாமை, கிராம மக்களின் வறுமை, வேளாண்மை தொழில்கள் மற்றும் கிராமத் தொழில்கள்

வளறமை ஆகியவற்றால் மொத்தச் சாகுபடி நிலவுடைமைகளில் சமார் 23.6 சதவீதம் குத்தகைச் சாகுபடி முறையின் கீழ் அமைந்துள்ளன. பீஹார், ஹரியானா, பஞ்சாப், கர்னாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் குத்தகை முறை பெருமளவு காணப்படுகிறது.

தற்பொழுது குத்தகை முறையானது நடைமுறையில் இருந்து வந்தாலும் நிலவுடைமையாளர்களும் குத்தகையாளர்களும் அதனை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. எனவே நிலவுடைமையாளர் குத்தகையாளரைச் சாகுபடியினின்றும் வெளியேற்றுவது எளிது. நில முன்னேற்றத்திற்கான முதலீட்டைச் செய்ய நிலவுடைமையாளர்கள் விரும்புவதில்லை. இதனால் தரமான உள்ளீடுகளைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவது சாத்தியமில்லாமல் போய் விடுகிறது. புதிய தொழில் நுட்பங்கள் வேளாண்மையில் பெருமளவில் பின்பற்றப்படாமைக்கு இது ஒரு காரணம். நிலவுடைமையாளர்களுக்கும் குத்தகையாளர்களுக்கும் இடையே சண்டை சச்சரவுகளும் தோன்றுகின்றன. எனவே இப்போதுள்ள சூழ்நிலைகளில் குத்தகைக் காலத்தில் உறுதித்தன்மையை ஏற்படுத்துவதும், நியாய வார அளவை நிர்ணயிப்பதும் மாநில அரசுகளின் கடமையாகும்.

## குத்தகைச் சாகுபடி முறையின் குறைபாடுகள்

குத்தகை முறையிலுள்ள முக்கிய குறைபாடுகளைக் கீழ்க் காணுமாறு விளக்கலாம்.

**1. குறைந்த உற்பத்தித் திறன்**

குத்தகை முறையின் கீழ் அமைந்துள்ள நிலவுடைமைகளில் உற்பத்திக் திறன் சொந்தச் சாகுபடியில் இருப்பதை விடக் குறைவாக உள்ளது. இக்குறைந்த உற்பத்திக்கான காரணங்களாவன (அ) மூலதனப் பற்றாக்குறை, (ஆ) குறைவான அளவுக்கே தரமான உள்ளீடுகளைப் பயன்படுத்துதல், (இ) குறைவான நீர்ப்பாசன வசதிகள், (ஈ) குறைந்த உரமிடல், நவீனச் சாகுபடி முறைகளை முழுமையாக அறிந்தில்லாத நிலை, குறைந்த வேளாண்மை உற்பத்தி குறைந்த வருவாயையும், குறைந்த சேமிப்பையும், குறைந்த மூலதனத் திரட்சிமையும் விளைவிக்கின்றது. இதனால் குத்தகைச் சாகுபடி முறையின் கீழ் வேளாண்மை உற்பத்தித் திறன் குறைவாகவே உள்ளது.

**2. குத்தகைக் காலத்தின் உறுதியற்ற நிலை**

ஓரிரு சாகுபடிகளைச் செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டு நிலவுடைமையாளர் திடீரென குத்தகை உரிமையைப் பறித்து விடலாம். குத்தகை நிலம் சட்ட ரீதியாகத் தரப்படுவதில்லை. எனவே குத்தகையாளரின் குத்தகை உரிமை பறிக்கப்படும்போது எவரும் தடுக்க இயலாது. நிலையான உறதியான கால வரையறையுள்ள குத்தகை உரிமை வழங்கப்படாத காரணத்தால் நிலத்தில் நிரந்தர முன்னேற்றங்களைச் செய்ய குத்தகையாளர்கள் தயாராக இருப்பதில்லை. நிலவளம் முழுமையாகப் பயன்படுத்தப்படாமைக்கு இது முக்கிய காரணமாகிறது.

**3. குத்தகையாளர்களைச் சுரண்டும் நிலை**

சமூக நீதிக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது குத்தகையாளர்களிடமிருந்து உயர்ந்த வாரத்தை நிலக்கிழார்கள் பெறுவது நல்லதல்ல. நிலத்தைச் சார்ந்துள்ள மக்களின் எண்ணிக்கை பெருகி வருவதாலும், பிற வேலை வாய்ப்புகள் விரைவாகப் பெருகாமையாலும் நிலவுடைமையாளர்கள் உயர் வாரத்தைப் பெறுவது எளிதாகிறது. அவர்கள் சொல்லும் நிபந்தனைகளுக்குக் குத்தகையாளர்கள் கட்டுப்பட்டேயாக வேண்டியுள்ளது . பெறக் கூடிய

வருவாயைக் கொண்டு அத்தியாவசியத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்து கொள்ள இயலாத குத்தகையாளர்கள் இவ்வாறு நிலவுடைமையாளர்களால் சுரண்டப்படுகின்றனர்.

**4. தலத்திலில்லா நிலக்கிழார் முறை**

குத்தகைச் சாகுபடி முறையின் குறைபாடு தலத்திலில்லா நிலக்கிழலார் முறையின் மூலம் வெளிப்படுகிறது. நிலக்கிழார் நில முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளாமல் உயர் வாரத்தைத் தவறாமல் பெறுவதிலேயே ஆர்வம் கொண்டிருக்கிறார். வேளாண்மை ஆக்கத்திறன் பெருக்கத்திற்கு இது தடையாக அமைகிறது. எனவே குத்தகைச் சாகுபடி முறையை நீக்கியோ அல்லது நெறிப்படுத்தியோ உற்பத்திப் பெருக்கத்திற்கான தீர்வுகளைக் காண்பது மாநில அரசுகளின் நோக்கமாக இருக்க வேண்டும்.

**5. குத்தகையாளர்களின் ஆர்வமின்மை**

எளிதில் குத்தகையாளரை நிலத்தினின்றும் வெளியேற்றச் சாத்தியமுள்ளதால், நிரந்தர முன்னேற்றங்கள் செய்வதில் குத்தகையாளர் ஆர்வம் காட்டுவதில்லை. வடிகால் வசதி, வரப்புக் கட்டுதல், உரமிடுதல், நீர்ப்பாய்ச்சுதல் போன்றவை குத்தகை நிலங்களில் சிறப்பாக, அமைந்திருப்பதில்லை. இவற்றால் விளையும் குறைந்த உற்பத்தியால் நிலவுடைமையாளர்களும் குத்தகையாளர்களும் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், நாட்டிற்கே அது பேரிழப்பாக அமைகிறது.

**6. சமூக அமைதியின்மை**

நிலக்கிழார்களுக்கும், குத்தகையாளர்களுக்குமிடையே சச்சரவுகள் தோன்றி கிராமச் சமுதாயத்தில் அமைதியின்மை ஏற்படுகின்றது, நாட்டின் பல மாநிலங்களிலுள்ள வெவ்வேறு பகுதிகளிலும், கலவரங்கள் நிலவுவதற்கு குத்தகைச் சாகுபடி முறையும் காரணமாகிறது.

**7. முடிவுகள் எடுப்பதில் கடின நிலை**

சாகுபடி செய்யும் குத்தகையாளர்கள் உற்பத்திப் பணிகளில் சுயமான முடிவுகளை எடுப்பது நிலக்கிழார்களின் குறுக்கீட்டால் உரிய நேரத்தில் சரியான முடிவுகளை அவர்களால் எடுக்க முடியாது. இதனால் கிடைக்கும் குறைந்தளவு வசதிகளைக்கூட நிலையாகப் பயன்படுத்த இயலாமல் உற்பத்தியை குறைவாகவே பெறமுடிகிறது.

**8. குத்தகையாளர்களின் குறைந்த வருமானம்**

உயர்ந்த வாரத்தாலும், குத்தகைக் காலத்தின் உறுதியற்ற தன்மையாலும் குத்தகையாளர்கள் குறைந்த உற்பத்தியையே பெறுகின்றனர். நிலத்தை அடமானம் வைத்து அவர்கள் சாகுபடிக்குத் தேவையான கடனைப் பெறுவதும் சாத்தியமில்லை, குறைந்த முதலீட்டைச் செய்யும் குத்தய்கையாளர்கள் குறைந்த உற்பத்தியையும் தாழ்ந்த வருமானத்தையும் விளைவாகப் பெறுகின்றனர்.

## திட்டக்காலத்தில் குத்தகைச் சீர்திருத்தங்கள்

நட்டில் குத்தகைச் சாகுபடி முறை மிகுதியாக இருப்பதால் வேளாண்மை உற்பத்தி குறைவாக அமைவதோடு குத்தகையாளர்களும் வறுமையில் வாடுகின்றனர். இந்நிலை அரசால் உணரப்பட்டு, குத்தகையாளர்களை நிலவுடைமையாளர்களாவதற்கான நடவடிக்கைகள்

குத்தகைச் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றுவதன் மூலம் எடுக்கப்பட்டன. எல்லா மாநில அரசுகளும், வேளாண்மை முதலீட்டையும், உற்பத்தி திறனையும் உயர்த்தக் கருதின. திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று பின்வரும் நோக்கங்களுடன் அவை குத்தகைச் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றின.

**1. வாரத்தை ஒழுங்குபடுத்துவது**

அனைத்து மாநில அரசுகளும் நிலவுடைமையாளருக்குக் குத்தகையாளர் எவ்வளவு வாரம் வேண்டுமென்பது குறித்துச் சட்டங்கள் நிறைவேற்றின. ஆந்திரப் பிரதேசம், பஞ்சாப், தவிர்த்தப் பிற மாநிலகளில் உயரளவு வாரமானது மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு அல்லது ஐந்தில் ஒரு பங்கு என்ற அளவுக்கிடையே அமைந்தது.

வாரங்களைச் சீரமைக்க இவற்றை விளை பொருளாகத் தருவது தவிர்க்கப்பட்டு பணமாகத் தரப்படுவது நன்மை பயக்கும். இதனால் குத்தகையாளர் உற்பத்தியைப் பெருக்க அமைப்பு ஏற்பட்டு பணக் குத்தகையின் முழு நன்மையையும் அவரால் பெற இயலும் எனத் திட்டக்குழு பரிந்துரை செய்தது.

**2. குத்தகைப் பாதுகாப்பு**

குத்தகைப் பாதுகாப்புக்கான சட்டங்களும் மாநில அரசுகளால் இயற்றப்பட்டன. குத்தகையாளரின் சாகுபடி உரிமை திடீரென பறிக்கப்படுவது தவிர்க்கப்பட்டது. இப்போது பாதுகாப்பால் நிலத்தில் நிரந்தர முன்னேற்றங்களைச் செய்யவும் புதிய சாகுபடி முறைகளைக் கைக்கொள்ளவும் குத்தகையாளர்கள் ஊக்கம் பெற்றனர். வாரம் தராமை, உற்பத்திக் திறனை பாதிக்கும் வகையில் நிலத்தைப் பயன்படுத்துவது போன்ற காரணங்களுக்காக மட்டுமே குத்தகையாளர்களைச் சாகுபடி செய்யும் நிலத்தினின்றும் வெளியேற்றலாம். உச்ச வரம்புக்கு அதிகமாகவும் குத்தகையாளர்கள் நிலவுடைமையைப் பெற்றிருக்கக் கூடாது. நிலவுடைமையாளர்கள் சொந்தச் சாகுபடிக்காகக் குத்தகையாளர்களிடமிருந்து குறிப்பிட்ட அளவு நிலத்தைப் பெறலாம். அஸ்ஸாம், பீஹார், பஞ்சாப், ஹரியானா ஆகிய இடங்களில் இன்றும் நிலவுடைமையாளர்கள் சுய சாகுபடிக்காகக் குத்தகையாளர்களிடமிருந்து குறிப்பிட்ட அளவு நிலத்தைப் பெற வாய்ப்பு உள்ளது. கேரளத்தில் குத்தகையாளரிடம் சாகுபடி உரிமையை அளித்த பிறகு நிலவுடைமையாளர் நிலத்தைத் திரும்பப் பெற முடியாது.

**3. குத்தகையாளருக்கு நிலவுடைமையை வழங்குவதற்கான உரிமை**

மாநில அரசுகள் நிர்ணயிக்கும் இழப்பீட்டுத் தொகையை அளித்துக் குத்தகையாளர்கள் சாகுபடி நிலத்தின் மீது முழு உரிமையையும் நிலவுடைமைகளிமிருந்து பெறலாம். ஈட்டுத் தொகையளவு குத்தகையாளரின் அளிக்கும் திறனை குறிப்பிட்டே நிர்ணயிக்கப்பட்டது.

பஞ்சாபில் ஆறு ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாகச் சாகுபடி செய்த குத்தகையாளர் நிலத்தில் ஒரு பகுதியை இழப்பீடு கொடுத்து வாங்கலாம். இவ்வாறு அதிக பட்சம் 30 ஏக்கர் மட்டுமே பெறமுடியும். முந்திய 10 ஆண்டுகளில் நிலவிய நிலத்தின் சராசரிச் சந்தை விலை மதிப்பில் 75 சதவீதம் இழப்பீட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்டது.

**4. நிரந்தர முன்னேற்றங்களுக்கான ஈட்டுத் தொகை**

குத்தகையாளர்கள் உற்பத்தியைப் பெருக்க வரப்பு கட்டுதல், குழாய்க் கிணறுகள் அமைத்து நிலத்தை வளப்படுத்துதல், மரங்களை நடுதல், கட்டடங்கள் கட்டுதல் போன்ற நிரந்த முன்னேற்றங்களைச் செய்திருக்கக் கூடும். சொந்தச் சாகுபடிக்காக நிலவுடமையாளர் நிலத்தின்

ஒரு பகுதியைத் திரும்பப் பெறும்போது நிரந்தர முன்னேற்றங்கள் செய்ததற்கான செலவினை குத்தகையாளருக்குத் தந்துவிட வேண்டும்

**5. நிலவரித் தள்ளுபடி**

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றங்கள் வெளிப்படும்போது மாநில அரசு நிலவுரிமையாளர்கள் செலுத்த வேண்டிய நிலவரியை ரத்து செய்வதுண்டு. ஏனெனில் இவற்றால் வேளாண்மை உற்பத்தி பெரிதும்பாதிக்கப்படும். இது போன்ற உற்பத்தி பெரிதும் குறைவடையும் காலங்களில் நிலவுடைமையாளர்களும் குத்தகையாளர்களுக்கு வாரமளிப்பதினின்று விலக்களிக்க வேண்டும்.

**6. நில உச்ச வரம்பை நிர்ணயித்தல் (Ceiling on land holdings)**

ஒருவர் அதிக பட்சமாக எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்பதை வரையறை செய்வது அவசியமானதாகும். இதன் காரணமாக அரசாங்கம் நில உச்சவரம்பு சட்டத்தை கொண்டுவந்தது. நில உச்சவரம்பின் அளவு மாநிலங்களுக்கிடையில் வேறுபட்டுள்ளது. பஞ்சாப், ஹரியானாவில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர், ராஜஸ்தானில் 22, கேரளாவிலும், தமிழ் நாட்டிலும் 15 ஏக்கர்கள் என நிர்ணயிக்கப்பட்டது. நில உச்சவரம்பு சட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்கள்

1. முன்னரே நிலத்தை வைத்திருப்பவர்களிடம் இருந்து அவற்றைப் பெறுவது சிக்கலான ஒன்றாகும்.
2. நில உச்சவரம்பு சட்டத்தை முன் கூட்டியே அறிந்துகொண்ட நிலக்கிழார்கள் தங்கள் உபரி நிலங்களை உறவினர்களின் பெயர்களில் மாற்றிவிடுகின்றனர்.
3. உச்சவரம்பை நிர்ணயிப்பதில் கருத்து வேறுபாடுகள் எழுகின்றன.
4. நில உச்சவரம்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்களை பெரிய நிலக்கிழார்கள் தவறாகப் பயன்படுத்துகின்றனர்.
5. உபரி நிலங்களை பெறும் போது எப்படி இழப்பீடுகளை வழங்குவதுயென்ற சிக்கல்கள் எழுகின்றன.

**ஏழாவது மற்றும் எட்டாவது ஐந்தாண்டு திட்டங்கள்**

ஏழாவது மற்றும் எட்டாவது ஐந்தாண்டு திட்டக்காலங்களில் நிலச் சீர்திருத்தத்திற்கான தீவிர நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பபட்டன. நிலச் சீர்திருத்த சட்ட திட்டங்களில் உள்ள நுழைவு கழிவு குறைபாடுகளை களைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**1990 ஆண்டின் மேற்கொள்ளப்பட்ட அரசியல் சட்ட திருத்த மசோதா**

இம்மசோதாவின் மூலம் கொண்டுவரப்பட்ட சட்டதிருத்தத்தின் மூலம், 9வது பிரிவின்படி சாகுபடி நில உச்சவரம்பு சட்டத்திற்கு எதிராக நீதி மன்றங்களில் முறையீடு செய்ய இயலாத நிலைமை கொண்டு வரப்பட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக நிலச்சீர்திருத்த தன்மைகளினால் பெறக்கூடிய நன்மைகள் தகுதியானவர்கட்கு போய்ச் சேருமாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**நிலச்சீர்திருத்தத்தின் எதிர்கால நம்பிக்கை**

நிலச் சீர்திருத்தங்கள் எதிப்பார்த்த அளவு வெற்றியை தரவில்லை. இதற்கு முக்கியக் காரணம்

நிலச்சீர்திருத்த நடவடிக்கைககளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் போக்கேயாகும். உபரி நிலங்கள் சரியாகப் பகிர்ந்து அளிக்கப்படவில்லை. நிலச்சீர்திருத்த சட்ட நிறைவுகளின் குறைகளும், அமைப்புகளும் தோல்விக்கு முக்கிய கராணமாக அமைந்தன.

இக்குறைகளைப் போக்க எதிர்காலத்தில் அரசு நிறைவேற்றும் நிலச்சீர்திருத்த சட்டங்கள் எல்லாம் இந்திய அரசியல் அமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் இணைக்கப்பட வேண்டும். அப்போதுதான் இச்சட்டங்களை எதிர்த்து நீதி மன்றங்களுக்கு செல்ல முடியாது, விரைவான நடவடிககைக்காக திறமை வாய்ந்த அதிகாரிகளை அமர்த்த வேண்டும்.

**மாணவர் செயல்முறை**
இந்தியாவில் நடந்த நிலச் சீர்திருத்தங்களின் நன்மை, தீம்மைகளை ஒரு குழுவாக விவாதிக்கவும்

## 3.3 பொருளாதார தாராளமயமாக்கள் மற்றும் உலகமயமாக்கல்

வணிகத்தில் மட்டுமல்லாமல் உலக மயமாக்கல் என்ற சொல் தொழிற்கொள்கை மற்றும் தேசிய பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றின் தற்போது ஆய்வுகளிலும் பயன்படுத்தப்படுகிறது. உலகளாவிய மயமாக்கல் என்றால் வணிகத்திற்கென உலகம் தழுவிய பார்வையை மேற்கொள்ளுதல் ஆகும். இந்நிறுமங்களில் மேலாண்மைக்கும், பணியாளர்களுக்கும் வணிகத்தை உலகம் முழுவதும் திட்டமிடுவதற்கு உரிய பயிற்சி அளிக்கப்படுகிறது. பணிகளுக்குத் தேவையான பயிற்சி உலகம் முழுவதும் அளிக்கப்படுகிறது. மேலும் மேலாண்மைப் பணியாளர்கள் குறைந்த சம்பளத்திற்கு ஆள் கிடைக்கும் நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப்படுகின்றனர்.




**படம் எண் 3.3.1 உலகமயமாக்கல்**

### உலகமயமாக்கலுக்கு தேவையான நிபந்தனைகள்

1. **வியாபார சுதந்திரம்**

   அரசானது தேவையற்ற நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை விதிக்கக் கூடாது.

2. **கட்டமைப்பு வசதிகள்**

   உலக அளவில் ஒரு வியாபாரம் ஆனது மேம்பாடு அடைய அதற்கு போதிய கட்டமைப்பு வசதிகள் அவசியமாகிறது.

3. **அரசின் உதவி**

   அரசின் உதவி உலகமயமாக்கலுக்கு உதவி புரிகிறது. உதவி என்பது ஆராய்ச்சி மற்றும்

மேம்பாட்டு உதவி, நிதிச் சந்தை உதவி ஆகியவை ஆகும்.

4. **வள ஆதாரங்கள்**

வள ஆதாரங்கள் என்பது நிதி, தொழில் நுட்பம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆற்றல்கள், வணிகக் குறியீடு மற்றும் ஆகியவற்றை கொண்ட நிறுவனங்களை உலகச் சந்தையை நோக்கி நகர ஆரம்பிக்கிறது.

5. **போட்டித்தன்மை**

உலக மயமாக்கலுக்கு வணிகத்தின் வெற்றியே காரணமாகும். வணிகத்தின் வெற்றியானது போட்டியைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது.

6. **உலகமயமாக்கல் நுட்பங்கள்**

உலகமயமாக்கலுக்கு தேவையான நுட்பங்கள் அதாவது (1) சந்தை (2) தொழில் (3) படி முறைகள் ஆகியவை இன்றியமையாததாகும்.

**உலகமயமாக்கலின் நன்மைகள்**

உலகின் பல்வேறு நாடுகளும் குறிப்பாக, சீனா, ஹாங்காங்க், ஜப்பான், மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் உலகளாவிய வணிகத்திற்கு அடிகோலின. 2005ஆம் ஆண்டிற்கு பிறகு நன்கு வளர்ச்சியுறும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதனுடைய வளர்ச்சி 300 பில்லியன் டாலர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆகவே இந்தியாவில் தனித்து நிற்க இயலாது.

போட்டி சார்ந்த நன்மையுடன் கூடிய பொருட்களை அடையாளம் காணுதல் உலகமயமாக்கலின் மற்றொரு தேவையாகும். தொழில் கொள்கை, தொழில் உரிமம் வழங்கும் கொள்கை, வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் அந்நியச் செலாவணி ஒழுங்கு முறைகள் போன்றவற்றை விளைவால் ஏற்பட்ட கட்டமைப்பு சார்ந்த முறைகேடுகளைக் குறைக்க உலகளாவிய மயமாக்கல் உதவும். உலகமயமாக்கல் என்பது அயல் நாட்டு நேரடி முதலீடு மற்றும் அயல் நாட்டு நிறுவனம் சார்ந்த முதலீடு ஆகியவற்றினை பெற வழிவகுக்கும். இதனால் தங்கள் கருவிகளையும், இயந்திரங்களையும் நவீன மயமாக்க பெரும் உதவிபுரிகிறது. நன்கு கல்வி தேர்ச்சி பெற்றவர்கள் வெளி நாடுகளுக்கு தேவை தேடிச்செல்வதை தவிர்க்கலாம்.

**உலகமயமாக்கலின் தீமைகள்**

1. பல அயல் நாட்டு நிறுவனங்கள் இந்தியச் சந்தைக்குள் நுழைவதால் இவை எதிர்காலத்தில் அவை செய்த முதலீட்டைவிட அதிக அளவில் இலாபங்களை தங்களுடைய நாட்டிற்கு எடுத்துச் செல்லும் வாய்ப்புகள் அதிகம்.
2. பன்னாட்டு நிறுவனங்கள் குறுகிய கால அணுகுமுறையையே கொண்டுள்ளன.
3. உலகமயமாக்கல் சொந்த நாட்டு தொழில் நுட்பத்தினையும் சிறிய தொழில்களையும் நசுக்கி விடுகிறது. இதனால் கிராமப்புறத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் வருமானத்தில் ஏற்றதாழ்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது.
4. நாட்டில் உணவு பற்றாக்குறை ஏற்படலாம்.
5. சுங்கவரிக் குறைப்புக்கு வழி வகுத்துவிடும்.

**பன்னாட்டுக் கழகங்கள்**

ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள உரிமையைக் கொண்ட ஒரு நிறுவனமே பன்னாட்டுக் கழகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. பொருட்கள் பல நாடுகளில் விற்கப் படுகின்றன. அல்லது தயாரிக்கப்படுகின்றன. பல நாடுகளிலிருந்து பணியாளர்கள் திறமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் அமர்த்தப்படுகின்றன. பல நாடுகளிலிருந்தும் முதலீடுகள் பெறப்படுகின்றன.

**பன்னாட்டுக் கழகங்களின் நன்மைகள்**

1. பேரளவில் வேலைவாய்ப்பு வசதிகள் உருவாக்கப்படுகின்றன.
2. நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
3. ஏற்றுமதியைப் பெருக்குகிறது.
4. பன்னாட்டுக் கழகங்கள் அமைக்கப்படுவதால் அவைகளுக்குகிடையே போட்டி உருவாகி அதன் மூலம் மக்களுக்கு பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கின்றது.
5. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பேரளவில் பணம் செலவிடத் தயாராய் இருக்கின்றன.
6. ஏற்றுமதியை அதிகரித்து இறக்குமதியைக் குறைக்கிறது.
7. உற்பத்திச் செலவு காரணிகளை சமப்படுத்துகிறது

**பன்னாட்டு கழகங்களின் தீமைகள்**

1. பன்னாட்டு கழகங்கள் இலாபத்தினையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
2. ஏகாதிபத்தியத்திற்கு அடிகோலுகிறது.
3. இயற்கை ஆதாரங்கள் விரைவில் தீர்ந்து விடும் வாய்ப்புகள் உருவாகின்றது.
4. இயற்கை வளங்கள் விரைவில் தீர்ந்து விடும் நிலை ஏற்படலாம்.

**தாராளமயமாக்கல்**

தனியார்மயமாக்கலுக்கு முன்தேவைப்படும் ஒரு முறையே தாராளமயமாக்கல் ஆகும். ஒரு குறிப்பிட்ட விதிகளும் நடைமுறைகளும் இல்லாத பட்சத்தில் பொதுத்துறை நிறுமங்கள் தனியார் துறை நிறுமங்களாக மாறுவதற்கு வாய்ப்புகள். தாராளமயமாக்கலுக்கு அடிகோலுகிறது.

### உலக மயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கள் விளைவுகள்

உலக மயமாக்கல் மற்றும் **தாராளமயமாக்களால்** பல நன்மைகள் இந்தியாவுக்கு கிடைத்துள்ளன. முதன் முதலாக நடப்பு கணக்கு உபரியாக (Current Account Surplus) 1977-78 ஆண்டில் இருந்து. அதன் பிறகு மூன்று ஆண்டுகளாக (2001-02, 2002-03, 2003-04) நடப்பு கணக்கு உபரியாக இருந்தது. 2004 ஆண்டுக்கு பிறகு மறுபடியும் நடப்பு கணக்கு பற்றாக்குறையானது. அன்னிய செலாவணி இருப்பு ஏறுமுகத்தில் உள்ளது.

அட்டவணை 3.1 - அன்னிய செலாவணி இருப்பு

| ஆண்டு | பில்லியன் டாலரில் |
|---|---|
| 1991 | 1 கீழ் |
| 1995 | 20 |
| 1997-98 | 3.9 |
| 1998-99 | 3.8 |
| 1999-2000 | 6.14 |
| 2000-2001 | 5.84 |
| 2001-02 | 11.76 |
| 2002-03 | 16.99 |
| 2003-04 | 31.42 |
| 2004-05 | 26 |
| 2005-06 | 15 |
| 2006-07 | 36.6 |
| 2007-08 | 92.2 |
| 2008-09 | 13.4 |
| 2009-10 | 13.1 |
| 2011 | 304.8 |

ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி (2012)

**மாணவர் செயல்முறை**

தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கலால் இந்தியாவில் ஏற்ப்பட்ட விளைவுகளை ஒரு குழுவாக விவாதிக்கவும்

## 3.4 பசுமை புரட்சி

வேளாண்மை விஞ்ஞானிகளின் வியத்தக சாதனையால் உலகின் பல நாடுகளிலும் சமீப காலத்தில் விளைந்துள்ளதே பசுமை புரட்சி. இதன் காரணமாக ஒரு ஏக்கருக்கான உற்பத்தித் திடீரென அதிகரித்து விவசாயிகள் நன்மையடைந்துள்ளனர். அறிவியல் அடிப்படையிலான நவீனச் முறைகள் கைக்கொள்ளப்பட்டுள்ளமையால் இந்திய வேளாண்மையிலும் பசுமைப்புரட்சி தோன்றியிருக்கிறது. நம்முடைய பொருளாதாரம் விரைவான வளர்ச்சிப் பெறுவதற்கான வலுவான அடிப்படை இதனால் எழுப்பப்பட்டுள்ளது. உயர் விளைச்சலைத் தரும் பயிர் விதைகளின் பயன்பாடு உற்பத்தி பெரிதும் உதவியுள்ளது. உரங்களின் உபயோகத்தையும், பயிர் நோய்களைத் தடுப்பதன் அவசியத்தையும் விவசாயிகள் உணர்ந்துள்ளனர். புதிய தொழில் நுட்பச் சாகுபடி முறைகளும் பின்பற்றப்படுகின்றன. இராசாயன உரங்களை இடுதலின் அளவு கூடிக்கொண்டே வருகிறது. நீர்ப்பாசன வசதிகள் பெருக்கப்பட்டால் வேளாண்மை உற்பத்தியை மேலும் அதிகரிப்பு எளிதாகிவிடும்.

### பசுமைப் புரட்சியின் தோற்றம்

புதிய கொள்கையின் முதல் நிலையோடு தொடர்பு கொண்டது செறிவு வேளாண்மை மாவட்டத் திட்டம், (Intensive Agricultural District Programme) 1960-61- இல் மூன்று மாவட்டங்களில் மட்டுமே துவங்கப் பெற்ற இத்திட்டம் படிப்படியாக 18 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தபட்டுள்ளது. இதே திட்டம் சீரமைக்கப்பட்டு செறிவு வேளாண்மைப் பகுதித் திட்டம் (Intensive Agricultural Area Programme) என்ற பெயரில் நாட்டின் பல பகுதிகளுக்கும் நீட்டிக்கப் பெற்றது. உயர் விளைச்சல் வகை விதைகள் புதிதாகப் பயன்படுத்தப்பட்டது. 1967-68-இல் 6.04 மில்லியன் ஹெக்டேர் நிலத்தில் உயர் விளைச்சலைத் தரும் புதிய விதைகள் உபயோக்கப்பட்டன. எனவே அந்த ஆண்டிலிருந்து புதிய வேளாண்மைக் கொள்கை துவக்கம் பெற்றது என்றும் கொள்ளப்படலாம்.

### புதிய வேளாண்மை நுட்ப முறை

வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டங்களின் துவக்கக் காலத்தில் பின்வரும் இயல்புகள் அமைந்திருந்தன.




**படம் எண் 3.4.1 புதிய வேளாண்மை நுட்ப முறை**

1. பரந்த முறைச் சாகுபடி

சாகுபடியின் கீழ் அதிக நிலத்தைக் கொண்டுவர வேண்டுமென்று அரசின் நோக்கமாக இருந்தது. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க அது உதவுமெனக் கருதப்பட்டது. எனவே சாகுபடியில் இல்லாத நிலங்கள் சாகுபடிக்கு ஏற்ற நிலங்களாக மாற்றப்பட்டன. 1950-51-இல் 100 ஆக இருந்த சாகுபடி நிலபரப்பின் குறியீட்டெண் 1968-69 இல் 122.8 ஆக உயர்ந்தது. அதன் பிறகு சாகுபடி நிலமாக மாற்றுவதற்கு உகந்த நிலம் கிடைக்கவில்லை. இதன் காரணமாக செறிவு முறைச் சாகுபடியைக் கைகொள்ளுவதன் அவசியம் உணரப்பட்டது. இப்போது உள்ள புதிய வேளாண்மைக் கொள்கையின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்வது செறிவு முறைச் சாகுபடி ஆகும்.

2. உள்ளீடுகளின் பெருக்கம்

பாரம்பரிய உள்ளீடுகளான விதைகள், உரங்கள், நீர்பாசன வசதிகள் ஆகியவற்றின் அளிப்பைக் கூட்ட அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது விவசாயிகள் எளிதில் விதைகளைப் பெறும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் உதவின. நாட்டின் நீர்ப்பாசன வசதியைப் பெருக்க முதல் ஐந்தாண்டுத் திட்டங்களின் பெரிய மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இவ்வகை உள்ளீடுகளின் அளிப்பைக் கூட்ட நிறுவனச் சீர்த்திருத்தங்கள் செய்யப் பெற்றன. தரமான விதைகளைப் பயன்படுத்துவதிலோ, உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான உள்ளீடுகளை விவசாயிகள் பயன்படுத்துமாறு தூண்டுவதிலோ கவனம்செலுத்தப்படவில்லை. 1965-ஆம் ஆண்டுக்கு பின்புதான் இந்நிலைக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.

3. நிறுவனச் சீர்த்திருத்தங்கள்

வளர்ச்சியின் தொடக்கக் காலத்தில் அரசு நிறுவனச் சீர்த்திருத்தங்களைப் பெறுவதையே நோக்கமாக பெற்றிருந்தது. தொழில் நுட்பச் சீர்த்திருத்தங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டன. உழுபவருக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதே அரசின் நிலக்கொள்கையாக இருந்தது. இதன் அடிப்படையிலேயே நிலச் சீர்த்திருத்தச் சட்டங்கள் உருப்பெற்றன.

4. சமுதாய வளர்ச்சித் திட்டமும் விரிவாக்கப் பணியும்

இந்தியக் கிராம மக்களின் வாழ்க்கைச் சீரமைக்க சமுதாய வளர்ச்சித் திட்டமே சிறப்பான வழி என்று அரசு கருதியது. கிராம வளங்களை செம்மையாகப் பயன்படுத்தி அரசின் முனைப்பு நடவடிக்கைகளுக்குப் பொது மக்களின் ஒத்துழைப்பு பெறுவது சமுதாய வளர்ச்சித் திட்ட நோக்கமாக அமைந்தது. இதனை அரச மற்றும் கிராம மக்களின் கூட்டு நடவடிக்கையாகக் கருதலாம். இதன் மூலமே கிராமச் சமுதாயத்தைச் சீர்திருத்த இயலுமென்று அரசு உறுதியாக நம்பியது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தைக் தேசிய அளவில் செயல்படுத்த நாடு 6,155 வளர்ச்சி வட்டரங்களாக (Development Blocks) பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வட்டாரத்திலும் வேளாண்மை வளர்ச்சிக்கு தேவையான அடிப்படை உள்ளமைப்பு வசதிகள் செய்து தரப்பட்டன. வட்டாரங்களின் அளவு பெரிதாக இருந்தமையால் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் எதிர்நோக்கிய வெற்றியை அளிக்கவில்லை.

இக்காரணங்களலால் மத்திய அரசு புதிய வேளாண்மைக் கொள்கையை அக்டோபர் 1965 இல் உருவாக்கியது.

## உயர் விளைச்சல் வகைத் திட்டம் (High Yielding Varieties Programme)

1963இல் மெக்ஸிகோவின் 'பன்னாட்டுக் கோதுமை ஆராய்ச்சி மையத்திலிருந்து' குட்டை ரக கோதுமை வகைகளைப் புதுடில்லியின் 'இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்' (Indian Agricultural Research Institute) பரீட்சார்த்த ரீதியில் இறக்குமதி செய்தது. பரிசோதனை முறையில் வேறு இடங்களில் பயிரிடப்பட்ட மெக்ஸிகன் வகைகளான (Lerma Roja) 'சோனரா – 64 (Sonara 64) சிறப்பான வெற்றியைத் தந்தன. 1960-ஆம் ஆண்டிலிருந்து உணவு வேளாண்மை அமைப்பு (Food and Agricultural Organisation) மற்றும் வேளாண்மை ஆராய்ச்சிக்கான இந்தியக் கவுன்சில் (I.C.A.R) ஆகிய இரண்டுமே இணைந்து புதிய பல நெல் வகைகளைப் பயிரிட வகை செய்தன. இதன் மூலம் தமிழ் நாட்டில் (ADT-27) வகை நெல் ஏராளமாகப் பயிரிடப்பட்டது. இவற்றைத் தவிர, டெய்ச்சங் (Taichung I) டெய்ச்சங் 64 (Taichung 64), டெய்னன் (Tainan 3) ஐ ஆர் 8 (I.R 8) போன்ற நெல் வகைகளும் உயர் விளைச்சலை தந்தன. விளைச்சலைக் கூட்ட வேறு நெல் விதைகளும் உபயோகப்படுத்தப்பட்டன. கோதுமை வகைகளில் பி.வி. 18 (P.V. 18) சோனாலிகா 308 (Sona Lika 308), கல்யாண் சோனா 227 (Kalyansona 227) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பருத்தியில் ஜே 34 (J 34) வகையில், கரும்பின் கோ 1148 (Co 1148), கோ 67 (67) மங்ஃபால் 145 (Mangfal 145) ஆகியவையும், மக்காச்சோளத்தில் 'விஜய்' ரகமும் பெருவாரியாக 50 சதவீதம் கூடியது. இத்தானிய வகைகள் நம் நாட்டில் பெருக்கமடைந்தமைக்கு வேளாண்மை பல்கலைக் கழகங்களும், வேளாண்மை ஆராய்ச்சிக்கான இந்தியக் கவுன்சிலும் காரணமாக இருந்தன. தமிழ் நாட்டின் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம், உத்திரபிரதேசத்தின் பந்த் நகர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவை இவ்வகையில் பெரும்பணியாற்றியுள்ளன.

உயர் விளைச்சல் வகைத்தானிய விதைகளோடு பசுமைப் புரட்சிக்குக் காரணமாக இருந்தவை உரங்கள், சிறப்பான நீர்ப்பாசன வசதி, தொழில் நுட்ப வளர்ச்சி, பல போகச் சாகுபடி அகியவையும் ஆகும்.

### பசுமைப் புரட்சியின் முக்கியத்துவம்

வேளாண்மைத் துறையில் ஏற்பட்டிருக்கும் பசுமைப் புரட்சியால் சாகுபடி முறையில் நீண்ட காலத்திலும் பயனளிக்கும் அடிப்படை மாற்றங்கள் தோன்றியுள்ளன. இதன் வாயிலாகக் குறுகிய காலத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்திய வேளாண்மை உற்பத்தி உயர்ந்து செல்வதற்குக் காரணமாக இருப்பது பசுமைப்புரட்சியே.

நம் நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்பட்டது 1965-ம் ஆண்டிலிருந்து என்பது கொள்ளலாம். அரசின் கொள்கைகள் வேளாண்மை உற்பத்தியைத் தூண்டுவதாக உள்ளது. அரசு அளிக்கும் சலுகைகளை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள விவசாயிகள் இதனால் நன்மையடைந்துள்ளனர். எனினும் அனைத்து விவசாயிகளும் பசுமைப் புரட்சியால் ஒரே மாதிரியான நன்மையை அடைந்துள்ளனர் என்று கருத இயலாது. பசுமைப் புரட்சியின் வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாத விவசாயிகளும் அதன் நன்மைகளைப் பெரும்பாலான விவசாயிகள் பெறுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

## பசுமைப் புரட்சியின் விளைவுகள்

பசுமைப் புரட்சியால் ஏற்பட்டுள்ள விளைவுகளைப் பின்வரும் இது தலைப்புகளின் கீழ் ஆய்வு செய்யலாம் 1) பொருளாதார விளைவுகள் 2) சமுதாய விளைவுகள்

### பொருளாதார விளைவுகள்

பசுமைப் புரட்சியின் காரணமாக, வேளாண்மை உற்பத்தியின் அளவு கூடியிருப்பதோடு, உற்பத்தித் திறனும் அதிகரித்துள்ளது. இவ்விரு நிலைகளையும் கீழ்க்காணும் வகையில் விளக்கலாம்.

### அ) வேளாண்மை உற்பத்தி உயர்வு

பசுமைப் புரட்சியால் தோன்றிய நேரடி விளைவு விவசாய உற்பத்தி அளவில் ஏற்பட்டுள்ள உயர்வாகும். புதிய வேளாண்மைக் கொள்கையை நிறைவேற்றியதன் காரணமாக பயிர்களின் உற்பத்தியில் விரைவான திடீர்ப் பெருக்கம் ஏற்பட்டு உள்ளது. குறுகிய காலத்தில் பயனளிக்கும் பயிர்களால் விவசாயிகள் கணிசமான நன்மையைப் பெற முடிந்தது. நான்காண்டுகளுக்குள்ளாக வேளாண்மை உற்பத்தி 36 சதவீதம் கூடியது. இது மிகவும் போற்றத்தக்கதாகும். ஆனால் அவ்வெற்றி தொடர்ந்து நீடிக்கவில்லை. 1975-76 வரையான அதைத் தொடர்ந்த ஆண்டுகளில் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தில் சிறப்பான மாற்றம் எழவில்லை. 1969-70ம் ஆண்டின் எல்லா பயிர்களுக்குமான உற்பத்திக் குறியீட்டெண் 110 ஆக மட்டுமே உயர்ந்தது. எனினும் 1975-76 இல் வேளாண்மை உற்பத்தி மிகச் சிறப்பாக அதிகரித்தது. அதைத் தொடர்ந்த ஆண்டுகளில் வேளாண்மை உற்பத்திக் குறியீட்டெண் உயரத் தலைப்பட்டு 1994-95ல் 164.1 ஆக உயர்ந்தது இந்த அளவு வேளாண்மை உற்பத்தியளவு உயர்வுக்குப் பசுமைப் புரட்சியே வழிவகுத்ததெனலாம்.

பசுமைப் புரட்சியின் துவக்கக் காலத்தில் எல்லாப் பயிர்களின் விளைச்சலும் ஒரே மாதிரியாக விரைந்து உயரவில்லை. கோதுமை உற்பத்திப் பெருக்கமே மிகச் சிறப்பாக இருந்தது. நெல் விளைச்சல் பெருக்கம் மெதுவான வேகத்திலே நிகழ்ந்தது. கோதுமை, நெல் ஆகிய இரு உணவுத் தானியங்களின் உற்பத்தி பெருகினாலும், உற்பத்திப் பெருக்க வீதம் கோதுமையில்தான் உயர்வாக அமைந்துள்ளது.

சமீப காலத்தில்தான் அரிசி உற்பத்தியளவு குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்து வருகிறது. புதிய வேளாண்மைக் கொள்கையால் வணிகப் பயிர்களான பருத்தியும் கரும்பும் உற்பத்தியில் வேகத்தைப் பெற்று வருகின்றன. பசுமைப் புரட்சியின் தொடக்கக் காலத்தில் ரசாயன உரங்களினால் உணவு உற்பத்தி பெருகியது. 1970-71ல் 1 கிலோ ரசாயன உரம் 16.8 கிலோ அளவு உற்பத்தியை பெருக்கியது. அனால் 1989-90ல் 1 கிலோ ரசாயன உரம் 6.6 கிலோ உணவு உற்பத்தியைத் தான் அதிகரித்தது.

### ஆ) வேளாண்மை உற்பத்தித் திறன் அதிகரிப்பு

முன்னேற்றமான செறிவு முறைச் சாகுபடியை மேற்கொண்டமையால்தான் வேளாண்மை உற்பத்தி கூடியது. இந்த அடிப்படையில் ஆய்வு செய்யும்போது, ஒரு ஏக்கருக்கான உற்பத்தியும் கூடியிருக்க வேண்டும். ஏனெனில், இக்காலத்தில் சாகுபடி நிலப்பரப்பு பெருகவில்லை. 1967-68, 1981-82 ஆகிய ஆண்டுகளிடையே வேளாண்மை உற்பத்தித் திறன் சுமார் 19 சதவீதம் அதிகரித்தது. 1970-79 காலத்தில் வேளாண்மை ஆக்கத் திறன் குறைந்த வேகத்தில் கூடியதெனலாம். உணவுத் தானியங்களின் ஒரு ஏக்கருக்கான உற்பத்தி பிற பயிர்களை சிறப்பாக

இருந்தது.

உற்பத்தியளவு, உற்பத்தித் திறன் ஆகியவற்றில் சிறப்பான முன்னேற்றத்தைப் பெற்றவை கோதுமை மற்றும் நெல் பயிர்களே. பிற வேளாண்மைப் பயிர்களில் உற்பத்தி உயர்ந்தாலும், சாகுபடி முறை வளர்ந்த தொழில் நுட்பத்தை உள்ளடக்கியதாக இல்லை. பிற பயிர்களுக்கான அ விலைக் கொள்கையும் உற்பத்தியைத் தூண்டுவதாக அமையவில்லை. அவற்றை நல்ல விளையில் விற்பனை செய்வதற்கான வசதிகள் பெருகவில்லை.

**இ) பிற பொருளாதார வசதிகள்**

1. வேலை வாய்ப்பு
2. வேளாண்மை, தொழில் துறைகளுக்கிடையேயான நெருங்கியச் சார்பு நிலை
3. சாகுபடி முறை
4. வேளாண்மை அமைப்பில் முன்னேற்றம் எதிர்கால வளர்ச்சிக்கான வாய்ப்பும்
5. நிலமற்ற வேளாண்மை உழைப்பாளர்கள்

**சமுதாய விளைவுகள்**

இந்தியக் கிராமப் பொருளாதாரத்தின் வருவாய் பசுமைப் புரட்சியால் சிறப்பாக உயர்ந்துள்ளது. வேளாண்மை விளை பொருள்களுக்குக் குறைந்த மட்ட விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாலும், உற்பத்தி உயர்ந்துள்ளதாலும் கிராம வருவாய் கூடியுள்ளது. பசுமைப் புரட்சியால் ஏற்பட்டுள்ள இத்தன்மையில் தீமையும் கலந்துள்ளது. கிராமப்புற வருவாயில் ஏற்றத் தாழ்வுகள் மிகுந்து காணப்படுகின்றன. பெரிய நிலவுடைமையாளர்கள் எளிதில் உற்பத்தியைப் பெருக்கி வருவாயைக் கூட்டும்போது சிறிய நிலவுடைமையாளர்களும் வேளாண்மை உழைப்பாளர்களும் நல்ல வாழ்க்கைத் தரத்தைப் பெறவில்லை. மேலும், பசுமைப் புரட்சி நாட்டின் சில மாநிலங்களில் நல்ல விளைவுகளைத் தோற்றுவித்திருக்கையில், பல மாநிலங்களில் வேளாண்மை வளர்ச்சி குறிப்பிடத் தக்க அளவில் இல்லை. இதனால் மாநிலங்களுக்கிடையேயும் வருமானத்தில் ஏற்றத்தாழ்வுகள் திகழ்கின்றன. ஒரு மாநிலத்தின் பல பகுதிகளிலும் கூட வேளாண்மை வளர்ச்சி ஒரே மாதிரியாக இல்லை. ஏற்றத்தாழ்வுகளை அவற்றின் இயல்புகளுக்கேற்ப பின்வருமாறு விளக்கலாம்.

**1. தனி மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வுகள்**

பசுமைப் புரட்சி தோன்றுவதற்கு முன்னே வறியவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையான இடைவெளி மிகுதியாக இருந்தது. பசுமைப் புரட்சிக்குப் பிறகு இந்த இடைவெளி மேலும் பெரிதானது. பசுமைப் புரட்சியால் நிலவுடைமையாளர்கள் பெருமளவு நன்மையடைந்தபோது, வேளாண்மை உழைப்பாளர்கள் வருவாயில் சிறப்பான மேம்பாட்டை அடைய முடியவில்லை. அதிக முதலீட்டை செய்யும் நிலவுடைமையாளர்கள் அதிக இலாபத்தை எளிதில் பெற முடிகிறது. உற்பத்திப் பெருக்கத்திற்கான முக்கியக் காரணம் புதிய வேளாண்மைச் சாகுபடி முறையே இவற்றால் நிலவுடைமையாளர்களுக்கும் வேளாண்மை உழைப்பாளர்களுக்கும் இடையேயானஏற்றத் தாழ்வுகள் மிகுந்து உள்ளன.

**2. வட்டார ஏற்றத் தாழ்வுகள்**

பசுமைப் புரட்சியால் ஏற்பட்ட பிரிதொரு தீய விளைவு நாட்டின் பல்வேறு பகுதிகிளிடையே தோன்றிய ஏற்றத்தாழ்வுகளாகும். மாநிலங்களிடையேயும் வேளாண்மை வளர்ச்சி விதம்

வேறுபட்டுள்ளது. பசுமைப் புரட்சியால் பெரிதும் நன்மையடைந்திருப்பவை வட மாநிலங்களாகிய பஞ்சாப், ஹரியானா, மஹாராஷ்டிரா, உத்திரப் பிரதேசத்தின் சில பகுதிகள் ஆகியவையே. நாட்டின் பிற பகுதிகளில் உண்மையான பசுமைப் புரட்சி ஏற்படவில்லை என்று சொல்லலாம். புரட்சி ஏற்பட்டிருந்தாலும், அது தொடக்க நிலையிலேயே உள்ளது. அரசின் உதவிகள் இப்பகுதிகளின் வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்குத் திருத்தப்பட வேண்டும். எனினும், பிரதேசங்களுக்கிடையேயான ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து நீடிக்கின்றன.

## 3.5 பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடு

நாட்டின் நலனை மனதில் கொண்டும் பொருளாதார மேம்பாடு கருதியும் அரசு ஒரு தொழில் நிறுவனத்தின் உரிமையாளராகவும், நிர்வாகியாகவும், கட்டுப் பாட்டாளராகவும் இருந்து அத்தொழிலை நடத்தி வந்தால், அத்தொழில் துறை பொதுத் துறை என அழைக்கப்படும். அரசு நிறுவனமானது அதன் உரிமையை புதிதாக ஒரு தொழில் நிறுவனத்தை தொடங்குவதன் மூலமாகவோ அல்லது முன்னரே தொடங்கி இயங்கி வரும் நிறுவனத்தை வாங்குவதன் மூலமாகவோ பெறுகின்றது. அவ்வாறு முன்னரே தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வரும் ஒரு நிறுவனத்தை வாங்கினால், அது அரசுடைமையாக்கம் (Nationalisation) என்று அழைக்கப்படும்.




**படம் எண் 3.5.1 பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடு**

### பொதுத் துறை அமைப்பின் நோக்கங்கள்

பொதுத் துறை அமைப்பின் நோக்கங்களை பின்வருமாறு காணலாம்

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியமான அடிப்படைத் தொழில்களை மேற்கொண்டு அதன் வளர்ச்சியை வேகப்படுத்துதல்.
2. பொதுமக்களின் அன்றாட வாழ்வுக்கு இன்றியமையாத தேவைகளான குடிதண்ணீர், மின்சக்தி போன்றவற்றை அனைவரும் பெறச் செய்தல்.
3. பொருளாதார சக்தி ஒரு சிலரின் கைகளில் மட்டும் குவிவதைத் தவிர்த்தல்.
4. பொதுத் துறை நிறுவனங்களை பின்தங்கிய வட்டாரங்களில் தொடங்குவதன் மூலம் சீரான வட்டார வளர்ச்சியைப் பெறச் செய்தல்.
5. இராணுவம் போன்ற அமைப்புகளை அதன் இரகசியம் வெளியிடப் படாதவாறு நடத்திச் செல்வது நாட்டின் பாதுகாப்பிற்கு மிக அவசிய மாகும். எனவே, இத்தகைய அமைப்புகளை தானே ஏற்று நடத்துவதும் பொதுத் துறை அமைப்பின் நோக்கங்களில் ஒன்றாகும்.

6. போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகள் போன்றவை ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவையாகும். எனவே, அத்தகைய உள்ளமைப்பு வசதிகள் (Infrastructural Facilities) கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்தல்.
7. மக்களின் நலன் கருதி சேவை நோக்கோடு பணி புரிதல்.
8. வேலை வாய்ப்பினை அதிகரிக்கச் செய்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முயற்சி செய்தல்.
9. தொழிலிலிருந்து பெறும் இலாபத்தின் மூலம் கல்வி, வீட்டு வசதி, போக்குவரத்து, நீர்ப்பாசன வசதி, மருத்துவ வசதி ஆகியவற்றை மக்களுக்கு கிடைக்கச் செய்தல்.
10. நாட்டின் இயற்கைச் செல்வங்களும் மற்ற வளங்களும் நல்ல முறையில் பயன்பெறச் செய்தல்.

### பொதுத் துறை அமைப்பின் நன்மைகள்

பொதுத் துறை அமைப்பு மிகவும் அவசியமான ஒன்று என்பதை நாம் பின்வரும் காரணங்களால் நிரூபிக்கலாம்.

1. **ஏகாதிபத்திய உரிமையை தவிர்த்தல்** (Elimination of Monopoly): பொதுத் துறை அமைப்பானது ஏகாதிபத்திய உரிமையை முழுமையாக தவிர்க்க இயலாவிட்டாலும் அதை ஓரளவு குறைப்பதற்கு உதவி செய்கின்றது. எனவே, பொருளாதார சக்தி (Economic Power) ஒரு சிலரின் கைகளில் மட்டுமே குவிவதைத் தவிர்க்க பொதுத் துறை அமைப்பானது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.
2. **சேவை நோக்கம்** (Service Motive) : இலாபம் ஒன்றே தனியார் துறையின் கீழ் நடத்தப்பட்டு வரும் தொழில் நிறுவனங்களின் முக்கிய நோக்கமாகும். தனியார் தொழில்முனைவோர் தங்களுடைய இலாபத்தை உச்சநிலைக்குக் கொண்டு போவதற்காக எல்லா வகையான விரும்பத்தகாத கருவிகளையும், உபாயங்களையும் கையாளுவர். எனவே, அடிப்படைத் தேவைகளுக்கான உற்பத்தியை தனியார் தொழில்முனைவோரை செய்ய அனுமதிக்கக் கூடாது. பொதுத் துறை அமைப்பின் நோக்கம் சேவை நோக்கம் என்பதால் அத்தகைய பொருட்களை உற்பத்தி செய்ய பொதுத் துறை அமைப்பே அனுமதிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் அப்பொருட்களை நியாயமான விலையில் பெறமுடியும்.
3. **சமநிலை உற்பத்தி** (Balanced Production): அதிக அளவு உற்பத்தி என்பது தனியார் துறை நிறுவனங்களின் ஒரு பொதுவான இயல்பாகி விட்டது. ஆனால், பொதுத் துறை அமைப்பானது மத்திய அதிகார வர்க்கத்தின் (Central Authority) கட்டுப்பாட்டிற்குள் இயங்கி வருவதால், இத்துறையால் சமநிலை உற்பத்தியை மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளை ஏதுவாகவும், சுலபமாகன் செய்ய இயலும்.
4. ***சீரான வட்டார வளர்ச்சி*** (Balanced Regional Development): தனி தொழில்முனைவோர் தங்களுடைய நிறுவனங்களை பின்தங்கிய வட்டாரங்களில்தான் தொடங்க வேண்டும் எனக் கட்டுப்படுத்தப்படுதல் இயலாத ஒரு சொல் ஆகும். மேலும், அவர்கள் வட்டார மற்றும் சமூக

வளர்ச்சியை மனதில் கொண்டு செயல்படாமல் அவர்களின் பொருளாதார நிலையை எண்ணியே செயல்படுகின்றனர். எனவே, பொதுத் துறை நிறுவனங்களை பின்தங்கிய வட்டாரங்களில் தொடங்குவதன் மூலம் சீரான வட்டார வளர்ச்சியை நாம் பெறலாம்.

5. **ஸ்திரத்தன்மை** (Stability) : பொதுத் துறை நிறுவனமானது மற்ற தனியார் துறை நிறுவனங்களை விட ஸ்திரத்தன்மை வாய்ந்ததாகும். இவை தங்களுடைய முதலீடுகளை நீண்டகாலத்திற்கு திட்டமிட இயலும். அவ்வாறு செய்வதன் மூலம் ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட முடியும்.

6. **பொருளாதார வளர்ச்சி** (Economic Development): பொதுத் துறை நிறுவனங்கள் ஈட்டும் இலாபமானது அரசாங்கத்தைப் போய் சேரும். இவ்வாது இவை அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்கச் செய்வதன் மூலம் பல பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள உதவுகின்றன.

7. **முழுமையான வேலை வாய்ப்பு** (Fullest Employment): முழுமையான வேலை வாய்ப்பு என்பது பொதுவுடைமை உற்பத்தி முறையின் கீழ்தான் சாத்தியமாகும். தனியார் துறை முழுவதுமாக இயங்கும் பட்சத்தில் வேலையின் பிரச்சனையை தீர்ப்பது இயலாத ஒரு காரியமேயாகும்.

8. **தொழிலாளர் சுரண்டலின்மை** (No Exploitation of Labour): பொது துறையில் மட்டும்தான் தொழிலாளர்களைச் சுரண்டுதல் முழுவதுமாக தவிர்க்க பட்டுள்ளது. இவ்வித அமைப்புகளில் தொழிலாளர்கள் நியாயமான முறையில் நடத்தப்படுகின்றார்கள்.

## பொதுத் துறை அமைப்பின் தீமைகள்

1. **பலவீனமான மேலாண்மை** (Poor Management): திறமையான மேலாண்மை என்பது பெரும்பாலான பொதுத் துறை நிறுவனங்களில் ஏறக் குறைய இல்லாத ஒன்றாகிவிட்டது. மேலிருந்து கீழாக அனைத்து அலுவலர்களும் திறமைக் குறைவாகவும் எந்தக் காரியத்தையும் தைரியமாக ஆரம்பிக்கத் துணிவில்லாமலும் இருக்கின்றனர். சிவப்பு நாடா ஒன்றே பொதுத் துறை நிறுவங்களின் முதன்மையான இயல்பாகி விட்டது.

2. **அரசியல் தலையீடு (Political Interference):** அரசியல்வாதிகள் அடிக்கடி பொதுத் துறை நிறுவனங்களின் நிர்வாகத்திலும் நடவடிக்கைகளிலும் தலையிடுகின்றனர். இவர்களது செல்வாக்கைப் பயன்படுத்தி உயர் அதிகாரிகள் தன்வசப்படுத்தி காரியங்களை தனக்கு சாதகமாக சாதித்துக் கொள்கின்றனர்

3. **திருப்தியற்ற கட்டுப்பாடு (Unsatisfactory Control):** திருப்தியற்ற கட்டுப்பாடு என்பது பொதுத் துறை நிறுவனங்களின் பொதுவான இயல்பாகி விட்டது. இதனால், பொருள் மற்றும் கச்சாப் பொருள்கள் வீணாக்கப்படுகின்றது.

4. **தவறான பணியமர்த்தும் முறை (Wrong Staffing Practice):** பாரபட்சம் (Favouritism), சுயநலம் (Nepotism) ஆகியவை அலுவலர்களை தேர்ந்து எடுப்பதில் முக்கியமானதொரு பங்கினை வகிக்கின்றன. எனவே, தகுதியில்லாதவர்களை உயர்ந்த பதவிகளுக்கு தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்புள்ளது. அத்தகையோர் நிறுவனத்திற்கு நட்டத்தைத் தவிர

வேறு எதையும் அளிக்க இயலாது.

5. **கடினமான கொள்கைகள் (Rigid Policies) :** அரசுத் துறை நிறுவனங்களின் கொள்கை மற்றும் செயற்திட்டமானது மிகவும் கடினமாக உள்ளது. இந்நிறுவனங்கள் ஒரே மாதிரியான நடைமுறைகளை (Standardised Procedures) பின்பற்றுகின்றன. அத்தகைய நடைமுறைகளில் பெரும்பாலானவை வழக்கத்தில் உபயோகப்படுத்தப் படாதவையாகக் கூட இருக்கும். ஆனால், பொதுத் துறை நிறுவனங்கள் காலத்திற்கு ஏற்றவாறு எந்த மாற்றமும் செய்யாமல் எப்பொழுதும் ஒரே மாதிரியான நடைமுறையையே பின்பற்றி வருகின்றன.

## இந்திய பொதுத்துறை நிறுவங்களின் செயல்பாடு

**அட்டவணை 3.2 - இந்திய பொதுத்துறை நிறுவங்களின் செயல்பாடு**

| | 1990-200 | 2006-207 | 2008-09 | 2009-10 | 2010-11 |
|---|---|---|---|---|---|
| நிறுவங்களின் எண்ணிக்கை | 232 | 217 | 213 | 217 | 220 |
| | (கோடிகளில் ) | | | | |
| முதலீடு | 3,02,947 | 6,61,338 | 7,93,096 | 9,09,285 | 9,50,449 |
| விற்பனை | 3,89,199 | 9,64,890 | 12,63,405 | 12,44,805 | 14,73,319 |
| ஈவுத்தொகை | 5,455 | 26,819 | 25,493 | 33,223 | 35,681 |
| வட்டி | 20,333 | 27,481 | 40,330 | 36,060 | 38,998 |
| வரிக்கான ஒதுக்கீடு | 7,706 | 34,352 | 33,700 | 38,133 | 43,396 |
| மொத்த லாபம் வட்டிக்கு பிறகு | 56,157 | 81,055 | 1,51,728 | 92,203 | 92,077 |
| மொத்த லாபம் வட்டிக்கு பிறகு / விற்பனை (%) | 3.7 | 8.4 | 6.7 | 7.4 | 6.2 |
| மொத்த லாபம் வட்டிக்கு பிறகு / முதல் (%) | 4.7 | 12.3 | 10.6 | 10.1 | 9.7 |

ஆதாரம்: 1. டாடா சேவைகள் நிறுவனம், இந்திய புள்ளியல் திட்டவரை 2009-10 (மும்பை 2010 )

2. இந்திய அரசு, பொருளாதார ஆய்வு, 2011-12 (புது தில்லி 2012) அட்டவணை 9.20, பக்கம் 223

**மாணவர் செயல்முறை**

இந்திய தொழிற்துறைக்கு பொதுத்துறை நிறுமங்கள் ஆற்றியுள்ள பணிகளை ஒரு குழுவாக ஆலோசிக்கவும்.

தொகுப்புரை

**ஐந்தாண்டுத்திட்டங்களின் நோக்கம்**

1) பொருளாதார வளர்ச்சி
2) தன்னிறைவு பெறுதல்
3) முழுவேலைவாய்ப்பு
4) நவீனமயமாக்குதல்
5) சமூகநிதி

மத்திய திட்டக்குழு ஐந்தாண்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்தின. இப்பொழுது அந்த பணியை நிதி ஆயோக் (NITI AYOG) செய்கிறது.

நிலச் சீர்திருத்தங்கள் எதிப்பார்த்த அளவு வெற்றியை தரவில்லை. இதற்கு முக்கியக் காரணம் நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் போக்கேயாகும். உபரி நிலங்கள் சரியாகப் பகிர்ந்து அளிக்கப்படவில்லை. நிலச்சீர்திருத்த சட்ட நிறைவுகளின் குறைகளும், அமைப்புகளும் தோல்விக்கு முக்கிய கராணமாக அமைந்தன.

இக்குறைகளைப் போக்க எதிர்காலத்தில் அரசு நிறைவேற்றும் நிலச்சீர்திருத்த சட்டங்கள் எல்லாம் இந்திய அரசியல் அமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் இணைக்கப்பட வேண்டும். அப்போதுதான் இச்சட்டங்களை எதிர்த்து நீதி மன்றங்களுக்கு செல்ல முடியாது, விரைவான நடவடிககைக்காக திறமை வாய்ந்த அதிகாரிகளை அமர்த்த வேண்டும்.

பொருட்கள் மற்றும் சேவைகள், தொழில் நுட்பம், நிதி மற்றும் உழைப்பு ஆகியவற்றிற்கான பன்னாட்டுச் சந்தைகளில் ஒருங்கிணைப்பே உலகமயமாக்கல் எனப்படும். உலகமயமாக்கல் என்பது ஒரு நாட்டின் சந்தையை உலகளாவிய சந்தையோடு இணைப்பதைக் குறிக்கிறது. தொழில் நுட்பம் உலகமயமாக்கல் நடைமுறையை எளிதாக்கும் முக்கிய காரணியாகும்.

வேளாண்மைத் துறையில் ஏற்பட்டிருக்கும் பசுமைப் புரட்சியால் சாகுபடி முறையில் நீண்ட காலத்திலும் பயனளிக்கும் அடிப்படை மாற்றங்கள் தோன்றியுள்ளன. இதன் வாயிலாகக் குறுகிய காலத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்திய வேளாண்மை உற்பத்தி உயர்ந்து செல்வதற்குக் காரணமாக இருப்பது பசுமைப்புரட்சியே.

நம் நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்பட்டது 1965-ம் ஆண்டிலிருந்து என்பது கொள்ளலாம். அரசின் கொள்கைகள் வேளாண்மை உற்பத்தியைத் தூண்டுவதாக உள்ளது. அரசு அளிக்கும் சலுகைகளை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள விவசாயிகள் இதனால் நன்மையடைந்துள்ளனர். எனினும் அனைத்து விவசாயிகளும் பசுமைப் புரட்சியால் ஒரே மாதிரியான நன்மையை அடைந்துள்ளனர் என்று கருத இயலாது. பசுமைப் புரட்சியின் வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாத விவசாயிகளும் அதன் நன்மைகளைப் பெரும்பாலான விவசாயிகள் பெறுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

செறிவு வேளாண்மை மாவட்டத் திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களின் வேளாண்மை உற்பத்தியைக் கூட்ட பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் உற்பத்தியில் சிறப்பான முன்னேற்றத்தைக் காண முடிந்தது. உள்ளீட்டு அளிப்பு முறையில் சிறப்பான மேம்பாடு ஏற்பட்டது. இம்மாவட்டங்களில் விவசாயிகள் பலவாறான நன்மைகளை அடைந்தனர். இம்முன்னோடித் திட்டம் 1960-61 இல் நாட்டில் 3 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. அந்நிலை உணவு தானியங்களின் பற்றாக்குறை இருந்ததும், ஆக்க அளவு

குறைவாக அமைந் குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின் முக்கிய இரு நோக்கங்களாவன (அ) பற்றாக்குறையைத் தவிர்க்க உணவு உற்பத்தியைப் பெருக்குவது. அதன் மூலம் விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்கான அடிப்படையை ஏற்படுத்துவது (ஆ) நீர்ப்பாசன வசதிகள் கொண்ட இடங்களில் செறிவு முறைச் சாகுபடியை விரிவுப்படுத்துவது; மனித வளத்தையும் பிற வளங்களையும் நன்கு பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழி முறைகளின் நன்மைகளைப் பரிசோதனை முறையில் நடத்திக் காட்டுவது.

நாட்டின் நலனை மனதில் கொண்டும் பொருளாதார மேம்பாடு கருதியும் அரசு ஒரு தொழில் நிறுவனத்தின் உரிமையாளராகவும், நிர்வாகியாகவும், கட்டுப் பாட்டாளராகவும் இருந்து அத்தொழிலை நடத்தி வந்தால், அத்தொழில் துறை பொதுத் துறை என அழைக்கப்படும். அரசு நிறுவனமானது அதன் உரிமையை புதிதாக ஒரு தொழில் நிறுவனத்தை தொடங்குவதன் மூலமாகவோ அல்லது முன்னரே தொடங்கி இயங்கி வரும் நிறுவனத்தை வாங்குவதன் மூலமாகவோ பெறுகின்றது. அவ்வாறு முன்னரே தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வரும் ஒரு நிறுவனத்தை வாங்கினால், அது அரசுடைமையாக்கம் (Nationalisation) என்று அழைக்கப்படும்.

### மாதிரி வினா

1. இந்திய ஐந்தாண்டு திட்டங்களின் நோக்கங்களை விவரிக்கவும்
2. நிலச்சீர்திருத்தங்களின் நோக்கங்கள் யாவை.
3. தாராளமயமாக்களின் நன்மைகள் மற்றும் தீமைகள் யாவை .
4. பசுமைச் புரட்சியின் விளைவுகள் யாவை.
5. பொதுத்துறை நிறுவங்களின் செயல்பாட்டை விளக்குக.

### வாசிப்பு பொருள்


- டாடா சேவைகள் நிறுவனம், இந்திய புள்ளியல் திட்டவரை 2009-10 (மும்பை 2010)
- இந்திய அரசு, பொருளாதார ஆய்வு, 2011-12 (புது தில்லி 2012) அட்டவணை 9.20, பக்கம் 223
- இந்திய ரிசர்வ் வங்கி வெளியீடு
- ஜி எஸ் பல்லா மற்றும் கூறமைல் சிங் “பொருளாதார தாராலமாயமாக்கள் மற்றும் இந்திய வேளாண் துறை : மாநில பகுப்பாய்வு”, பொருளாதார மற்றும் அரசியல் வார இதழ். டிசம்பர் 26, 2009


### குறிப்புரை


- Ahmed. F. and Alam, A. (2014). Business Environment: Indian and Global Perspective. Prentice Hall: New Delhi.
- Francis Cherunilam (2017). Business Environment Text & Cases. Himalaya Publishing House. New Delhi
- Dr. Radha (2013). Business Environment. Prasanna Publications, Chennai
- Ramaswamy V. S. and Namakumari S (2010): Marketing Management: Tata McGraw Hill, New Delhi

# அலகு 4 – பேரியல் பொருளாதார காரணிகள்

## அத்தியாய அறிமுகம்

மொத்த நுகர்வு, மொத்த முதலீடு, விலைகள், வேலை நிலை போன்ற பேரியல் பொருளாதார மொத்த மாறிகளைப் பற்றி பேரியல் விளக்குகிறது. எனவே, இவ்வியலில் நாட்டு வருமானம் அல்லது தேசிய வருமானம் என்ற மாறி, மிகவும் சிறப்பு வாய்ந்த இடத்தைப் பெறுகின்றது. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் முதலீடு என்பது வளத்தின் திறவுகோலாகும். எனவே முழு வேலை நிறைக்கு மிகவும் இன்றியமையாதது முதலீடு என்பதாகும். வாணிகச்சூழலின் காரணமாகவும் பணவீக்கம் உண்டாகும். பொருளாதார முன்னேற்றம் எப்போதும் ஒரே சீராக இருக்காது. அதிக ஏற்றத் தாழ்வுகள் காணப்படும். முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பூரிப்பும், மந்தமும் மாறி மாறி ஏற்படுகின்றன. பொருளாதாரம் மந்த நிலையிலிருந்து பூரிப்பு நிலையை நோக்கிச் செல்லும் போது பொருளாதார நடவடிக்கைகள் தூண்டப்படுகின்றன. சமூக பொருளாதார காரணிகள் இந்திய நாட்டின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கிறது. இந்த பகுதியில் வேலைவாய்ப்பு, பெண் குழந்தைகள் கல்வி, கல்விக்கான கடன், குழந்தைகளின் இறப்பு விகிதம் மற்றும் PMUY திட்டத்தை விளக்கம் உள்ளோம்.

## அத்தியாய நோக்கங்கள்

இப்ப பாடத்தை படித்த பின்னர் நீங்கள்

- தேசிய வருமானத்தை நிர்ணயிக்கும் காரணிகளை விளக்க முடியும்
- நுகர்வு மற்றும் முதலீட்டை பாதிக்கும் காரணிகளை விளக்க முடியும்
- பணவீக்கத்துக்கான காரணத்தை விளக்க முடியும்
- வணிக சூழல் நிலைகள் பற்றி விளக்க முடியும்
- சமூக பொருளாதார காரணிகளை விவரிக்க முடியும்

## அத்தியாய அமைப்பு

**4.1 தேசிய வருமானம்**

**4.2 நுகர்வு மற்றும் முதலீடு**

**4.3 பணவீக்கம்**

**4.4 வாணிப சுழற்சி**

**4.5 சமூக பொருளாதார காரணிகள்**

## 4.1 தேசிய வருமானம்

பேரியல் பொருளாதாரத்தில் நாட்டு வருமானம் அல்லது தேசிய வருமானம் என்ற மாறி, மிகவும் சிறப்பு வாய்ந்த இடத்தைப் பெறுகின்றது. ஓராண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பே தேசிய வருமானம் அல்லது நாட்டு வருமானம் ஆகும். பண்டங்களையும் உற்பத்தி செய்ததின் பிரதிபலனாக நாட்டில் உள்ள மக்கள் பெற்ற ஊதியம், நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் தாங்கள் பெற்ற வருமானத்தைக் கொண்டு நுகர்ந்த பண்டங்கள் பணிகள் ஆகியவற்றின் மதிப்பு உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள் என்ற அடிப்படையில் நாட்டு மக்கள் அனைவரும் அனுபவித்தவற்றின் நிகர மொத்தம் என்கிறோம்.




**படம் எண் 4.1.1 தேசிய வருமானம்**

### தேசிய வருவாயோடு தொடர்புடைய கருத்துக்கள்

நாட்டு வருவாயோடு தொடர்புடைய கருத்துக்களை மொத்தம் ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம். இவை ஒவ்வொன்றைப் பற்றியும் விளக்கமாகப் படிக்கலாம்.




**படம் எண் 4.1.2 தேசிய வருவாய்**

### 1. மொத்த தேசிய உற்பத்தி (Gross National Product - GNP)

குறிப்பிட்ட ஆண்டில் நாடொன்றிலாக்கப்படும் பண்டங்கள் பணிகளாகியவற்றின் மொத்த பணமதிப்பு தேசிய வருமானம் என்கிறோம். மொத்த நாட்டு உற்பத்தியைக் கணக்கிடும் பொழுது இரு கருத்துக்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக இது நாட்டில் உற்பத்தியான பொருட்கள் பணிகளின் பண மதிப்பையே குறிக்கின்றது. ஆதலால் வெவ்வேறு கால தேசிய வருவாயைக் கணக்கிடும்பொழுது விலை வேறுபாட்டைக் கவனிக்க வேண்டும். இரண்டாவதாக, மொத்த தேசிய வருவாயைக் கணிக்கும்போது, உற்பத்தியான பொருட்கள்,

பணிகளை ஒரு தடவை மட்டுமே கணக்கிடவேண்டும். எதுவும் இரண்டாம் முறை கணக்கில் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதாவது இறுதி நிலைப் பொருட்களின் மதிப்பை மட்டுமே கணக்கிட வேண்டும். பொதுவாக அங்காடி விலையில் மொத்த நாட்டு வருவாயைக் கீழ்க்கண்டவற்றைச் சுட்டிக் கணக்கிடலாம்.

(i) வாணிப நிறுவணங்கள் மாற்றுகின்ற, புத்தாக்கம் செய்கின்ற புதிய முதலீட்டுச் செலவுகள் அதாவது உள் நாட்டில் ஏற்படுகின்ற மொத்த தனியார் முதலீடு,

(ii) தனி மனிதர்களின் நுகர்வுச் செலவுகள்,

(iii) அரசு பொருட்களையும் பணிகளையும் வாங்கச் செலவிடும் தொகை,

(iv) ஏற்றுமதி எச்சமாக அல்லது நிகர வெளிநாட்டு முதலீடாக அமைவது.

2. நிகர தேசிய உற்பத்தி (Net National Product - NNP)

மொத்த தேசிய வருமானத்திலிருந்து கீழ்வரும் இனங்களைக் கழிப்பதின் மூலம் நிகர தேசிய வருமானத்தை கணக்கிடலாம்.

(i) மூலதனப்பொருட்களைப் பயன்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும், பழுது பார்ப்பதற்கான செலவுகள்.

(ii) ஓராண்டிற்கான மூலதனப்பொருட்களின் தேய்மானச் செலவுகள்.

(iii) சாதக அயல்நாட்டுச் செலுத்து நிலையின் பண மதிப்பு.

(iv) மறைமுக வரிகளின் மூலம் அரசுக்கு கிடைக்கும் வருமானம்.

(v) ஒரு நாட்டில் வெளிநாட்டு கடன்களில் ஏற்படும் நிகர உயர்வு அல்லது ஒரு நாடு வெளிநாடுகளுக்கு அளித்திருக்கும் கடன்களில் நிகரக்குறைவு.

(vi) ஓராண்டுக் காலத்தில் ஆக்க சடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பு.

3. தலா வருமானம் (Per Capital Income)

ஒரு நாட்டின் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் இருக்கும் நாட்டு வருமானத்தை அந்த ஆண்டில் அந்த நாட்டில் இருக்கும் மக்களின் எண்ணிக்கையால் வகுத்துப் பெறும் ஈவுத்தொகையைத் தலா வருமானம் எனலாம்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{மொத்த வருமானம்}}{\text{மொத்த மக்கள் தொகை}}$$

4. தனி நபர் வருவாய் (Personal Income)

தேசிய வருமானத்தின் ஒரு பகுதி தொழிற்சாலைகளுக்கான வருமான வரியாகவும், சமூக பாதுகாப்பு வரியாகவும், அரசுக்குச் செல்கிறது. மேலும் ஒரு பகுதி பங்குதாரர்களுக்குக் கொடுக்கப்படாதத் தொழிற்சாலை இலாபமாக(undistributed corporate profits) மூலதனச் சந்தைக்கு செல்கிறது.

5. செலவிடத்தக்க வருமானம் (Disposable Income)

நமக்கு கிடைக்கப்பெறும் வருமானத்தில் ஒரு பகுதியை வருமான வரியாகக் கட்டுகிறோம். வருமான வரியைக் கழித்து மீதி வரும் தொகையைத்தான் நாம் செலவிட இயலும். ஆகவே நம்முடைய வருமானத்தை முழுவதும் செலவிட இயன்ற வருமானமாகக் கருத இயலாது. வருமானவரி செலுத்திய பின் மீதி வரும் தொகையை செலவிடத்தக்க வருமானம் என்கிறோம்.

## தேசிய வருமானத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

ஒரு நாட்டின் தேசிய வருமானம் பின்வரும் காரணிகளுக்கு ஏற்ப அமையும்.

1. நிலவளம் வேளாண்மை உற்பத்தித் திறன்
2. வணிகத்துறை மேம்பாடு
3. தொழில் துறை
4. போக்குவரத்து – தகவல் தொடர்பு வசதிகளின் வளர்ச்சி நிலை
5. வங்கிகளின் முன்னேற்றம்
6. உழைக்கும் திறன், உழைக்க விருப்பம் கொண்ட மக்கள் வளம்
7. சமுதாய அரசியல் அமைப்புகள்
8. பொருளாதார முன்னேற்றத்திற்கான அரசின் நடவடிக்கைகள்
9. கனிவளம், வனவளம், மலைவளம்,நீர்வளம் போன்ற இயற்கை வளங்கள்
10. சுகாதார, மருத்துவ வசதிகள்
11. பொதுக்கல்வி, தொழில்நுட்பக் கல்வி மற்றும்
12. உற்பத்தி நடவடிக்கைகளில் இயந்திரங்களைப் பயன்படுத்துதல்.

மேற்கூறிய காரணிகள் தேசிய வருமானத்தை நிர்ணயிக்கும் காரணிகள் ஆகும்.

## தேசிய வருமான ஆய்வின் பயன்கள்

நாட்டுப்பொருளாதாரம் செயல்படுவதையும், அதன் பல்வேறு இனங்களையும் பற்றி அறியவும் உதவிசெய்கின்றன. கீன்ஸின் “வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றி பொதுக்கோட்பாடு (1936)” என்னும் நூல் வெளியாகி, பேரியல் பொருளாதார நோக்கு முக்கியத்துவம் பெற்ற பிற நாட்டு வருவாயைப் பற்றி எல்லோரும் எண்ணிப்பார்க்கத் தொடங்கினர். நாட்டு வருவாய் மதிப்பீடுகளின் பயன்களை இங்கு தொகுத்துக் கூறலாம்.

1. வருவாய் பங்கீடு

தேசிய வருமான மதிப்பீடுகள் நாட்டிலுள்ள பல்வேறு பிரிவு மக்களும் எந்த அளவுகளில் வருமானத்தைப் பெறுகின்றனர் என்பதை அறியச் செய்கின்றன. இதன் மூலம் அரசு வருமானத்திலும் செல்வப்பங்கீட்டிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

2. **பொருளாதாரக் கொள்கையை உருவாக்கல்**

பேரியல் நோக்கில் மொத்த பொருளாதார நடவடிக்கைகளை ஆராயவும் எதிர்காலப் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கவும் நாட்டு வருவாய் பற்றிய விவரங்கள் துணை செய்கின்றன.

3. **வரவு-செலவு திட்டங்கள்**

அரசு தனது வரவு-செலவு திட்டத்தை தீட்டி, நிதிக்கொள்கையைத் தீர்மானிக்க தேசிய வருமானக் கணக்கெடுப்பு உதவுகிறது. தேசிய வருமானம் அதிகம் பெற உள்ள நாடுகள் தனது வருவாயைப் பெருக்க அதிக வரிகளை விதிக்கலாம். குறைவான தேசிய வருமானத்தைப் பெற்றுள்ள நாட்டில் மக்கள் குறைந்தளவு வரி செலுத்தும் திறனையே கொண்டிருப்பார்கள். எனவே, அந்நாட்டில் அரசுவரி முறையை அதிகம் சார்ந்திராமல் பிற வழிகளில் நிதி வருவாயைப் பெருக்க முயல வேண்டும்.

4. **பல்வேறு துறைகள்**

நாட்டு வருவாய் விவரங்கள் நாட்டிலுள்ள பொருளாதாரத் துறைகளின் பங்கினை அறிய உதவுகிறது. எடுத்துக்காட்டாக, நமது நாட்டு வருவாயில் சுமார் 50% வேளாண்மை மூலம் கிடைக்கின்றது. இதிலிருந்து நமது பொருளாதாரத்தில் வேளாண்மைத் துறையின் முக்கியத்துவத்தை அறியலாம்.

5. **பணவீக்கத்தையும் பண வாட்டத்தையும் தடுத்தல்**

தேசிய வருமானக் கணக்கெடுப்புகள் பொருளாதாரத்தில் அமைந்துள்ள பண வீக்க நிலையையோ அல்லது பண வாட்ட நிலையையோ உணர்த்துகின்றன. அந்நிலைகளைத் தடுத்துப் பொருளாதார நிலை பெறுவதற்காக அரசின் நடவடிக்கைகளுக்கு அவை உதவுகின்றன.

6. **மானிய உதவி**

கூட்டாட்சியில் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அளிக்கும் மானிய அளவைத் தீர்மானிக்கும் காரணிகளில் முக்கியமானதாக வருவாய் உள்ளது.

7. **பன்னாட்டு நிதி நிறுவனங்களின் கடன் அளிப்பு**

ஐக்கிய நாடுகள் சங்கம், பன்னாட்டுப் பண நிதி, உலக வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புகள் வெவ்வேறு வளரும் நாடுகளின் பொருளாதார நிலையைத் தேசிய வருமான அளவுகளிலிருந்து அறிந்து, அதற்கேற்ப நிதி உதவிகளைச் செய்கின்றன.

8. **தேசிய செலவு**

நாட்டில் நுகர்வுச் செலவும் முதலீட்டுச் செலவும் எப்படி அமைகின்றதென்பதையும், எந்த அளவிற்கு மூலதனக் கழிவு இருக்க வேண்டுமென்பதையும் வருவாய் விவரங்களிலிருந்து கண்டு கொள்ளலாம்.

9. **நாடுகளின் வளர்ச்சி நிலைகளை ஒப்பிட்டுப் பார்த்தல்**

உலக நாடுகள் பலவற்றின் பொருளாதார வளர்ச்சி நிலைகளை ஒப்பிட்டு நோக்க தேசிய

வருமானக் கணக்கெடுப்புகள் வகை செய்கின்றன. அவற்றின் வாயிலாக அந்நாடுகளிலுள்ள மக்களின் வாழக்கைத் தரத்தை அறிய முடிகிறது.

**10. உற்பத்தி நிலையை அறிதல்**

நாட்டு வருவாய் மதிப்பீடு நாட்டின் உற்பத்தி அளவைக் காட்டுகின்றது. உற்பத்தியைச் சார்ந்தே மக்களின் நலன் அமைகின்றது. நாட்டு வருவாய் மதிப்பீட்டிலிருந்து உற்பத்தி நிலை, மக்கள் நலம் ஆகியவற்றை அறியலாம்.

மாணவர் செயல்முறை
இந்தியாவில் தேசிய வருமானதின் நன்மை,தீமைகளை ஒரு குழுவாக விவாதிக்கவும்.

## 4.2 நுகர்வு மற்றும் முதலீடு

பேரியல் பொருளாதாரத்தில் நுகர்வு மற்றும் முதலீடு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.




**படம் எண் 4.2.1 நுகர்வு மற்றும் முதலீடு**

**நுகர்வுச் சார்பைத் தீர்மானிக்கும் காரணிகள்**

குறுகிய காலத்தில் நுகர்வு நாட்டமும் ஓரளவுக்கு நிலையாக இருக்கிறது. ஆனால் அதுவும் அரசின் நிதிக் கொள்கை, வட்டி விகித மாறுதல் போன்ற பல காரணிகளால் மாறுகின்றது. இவ்வாறு நுகர்வுச் சார்பை பாதிக்கும் காரணிகளை இரு வகைகளாக கீன்ஸ் பிரித்துக் கூறியுள்ளார்.




**படம் எண் 4.2.2 நுகர்வுச் சார்பு காரணிகள்**

அகக் காரணிகள் என்பவை பொருளாதார அமைப்பில் உள்ளார்ந்தவைகளாக இருப்பவை. இவைகள் மனித இயல்பைச் சார்ந்த உளவியல் மரபுகள், பழக்க வழக்கங்கள், நிறுவன அமைப்புகள் போன்றவற்றின் தொடர்பானவைகளாக இருக்கும். இவைகள் குறுகிய காலத்தில் மாறாது. புறக் காரணிகள் பொருளாதார அமைப்புக்குப் புறம்பானவைகளாக பெரிய மாறுதல்களுக்கு உட்படுபவைகளாக இருக்கும்.

1. **அகக்காரணிகள்**

நுகர்வின் அளவினை அகக்காரணிகள் தீர்மானிக்கின்றன. இவைகள் உளவியல் அடிப்படையில் சூழ்நிலைகளைச் சார்ந்து கீழ்க்கண்டவைகளில் அமையும் என பேராசிரியர் கீன்ஸ் குறிப்பிட்டுள்ளார். தனி மனிதர்கள் நுகர்வைக் கட்டுப்படுத்துவதற்கான தொழில் நோக்கங்களை எட்டு வகைகளாகப் பிரித்துக் கூறியுள்ளார். அவையாவன:

(i) **முன்னெச்சரிக்கை நோக்கம்:** மக்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளை ஈடுகட்ட நுகர்வுச் செலவைக் குறைத்து சேமிப்புகளை அதிகரிக்க விரும்புவார்கள்.

(ii) **தீர்க்க தரிசன நோக்கம்:** சிலர் வாழ்க்கையில் நோய், ஓய்வுக் காலம் போன்ற எதிர்நோக்குகின்ற எதிர்காலத் தேவைகளுக்காக சேமிக்க விரும்பி அதனால் தங்களின் நுகர்வு செலவை குறைத்துக் கொள்வார்கள்.

(iii) **வருவாய் கணக்கீட்டு நோக்கம்:** வாழ்க்கையில் அதிகமாக சொத்துக்களை சேர்க்கவும் வட்டியின் மூலம் அதிக வருமானம் பெறவும், சமூகத்தில் பண சேகரிப்பினால் மதிப்பு பெறவும் பலர் விரும்புகின்றனர். அவர்கள் மேற்கூறிய நோக்கத்தினால் நுகர்வைக் குறைத்து சேமிப்பை அதிகமாக்க விரும்புவார்கள்.

(iv) **வாழ்க்கைத் தர முன்னேற்ற நோக்கம்:** ஒரு சிலர் தங்களின் வாழ்க்கைத்தரத்தைப் படிப்படியாக உயர்த்திக்கொள்ள விரும்புவதால் முதலில் அதிகம் சேமித்து, பின்னர் படிப்படியாக நுகர்வுச் செலவை அதிகரிக்க விரும்புவார்கள்.

(v) **சுதந்திர நோக்கம்:** சிலர் யாரையும் சார்ந்திராமல் தன்னிச்சையாக செயல்படுவதற்கும் சுதந்திரமாக வாழ்வதற்கும் சேமிப்புகளை முதலில் உருவாக்குவார்கள். இதனால் நுகர்வுச் செலவுகள் கட்டுப்படுத்தப்படும்.

(vi) **ஊக வாணிக நோக்கம்:** துணிவுடன் ஊக வாணிகத்தில் ஈடுபடவும் வேறுபல தொழில்களைத் தொடங்குவதிலும் ஆர்வமுள்ளவர்கள் நுகர்வை குறைத்து சேமிப்பை உருவாக்குவார்கள்.

(vii) **சொத்து பெருமை நோக்கம்:** சிலர் தங்களின் வாரிசுகளுக்குச் சொத்து சேர்த்து வைப்பதில் பெருமை அடைகின்றனர். எனவே அத்தகையோர் தங்களின் நுகர்வுச் செலவைக் குறைத்து சந்ததியினருக்கு சொத்து உருவாக்க சேமிப்பை அதிகமாக்குவார்கள்.

(viii) **கஞ்சத்தன நோக்கம்:** சிலர் இயல்பாகவே செலவழிக்காமல் வருமானத்தை மிச்சம் பிடிக்கும் கஞ்சத்தனமான குணமுடையவர்களாக இருப்பார்கள். இதனால் பேராசையால் அவர்கள் நுகர்வுச் செலவைக் குறைத்து சேமிப்பை அதிகமாக்குவார்கள்.

மேற்கூறிய எட்டு நோக்கங்களினால் மக்கள் நுகர்வைக் குறைத்துக் கொண்டு சேமிப்பை அதிகப்படுத்துவார்கள் என்பது புலனாகிறது. இதற்கு எதிர்மாறாக மக்களின் பொருள்களின்

மீதான ரசனை, குறுகிய கண்ணோட்டம், தாராளமனப்பான்மை, ஆடம்பரம், ஊதாரித்தனம், எதிர்காலக் கணக்கீட்டின்மை போன்ற குணங்களினால் மக்களின் நுகர்வுச் செலவு அதிகரித்து சேமிப்பு குறையும். இவைகளையும் நுகர்வை பாதிக்கும் காரணிகள் எனலாம்.

மேலும் பணத்தைச் சேர்க்கவும் நுகர்வைச் சுருக்கவும் கீன்ஸ் மேலும் நான்கு வகையான வாணிப நோக்கங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

**இவைகளும் நுகர்வைப் பாதிக்கும் காரணிகளாகும். அவையாவன:**

1. பெரிய அளவில் வாணிபம் செய்வதற்கான பெரு முயற்சி விருப்பம்.
2. அவசரத் தேவைகளை சமாளிக்க வேண்டிய பணத்தை ரொக்கமாக வைத்திருக்கும் விருப்பம்.
3. சிறந்த நிர்வாகத்தினால் அதிக வருமானம் பெறவும் ஏற்படும் வருமானப் பெருக்க நோக்கம்.
4. தேய்மான செலவுகள், புதுப்பித்தல், கடனைத்தீர்த்தல் ஆகியவற்றிற்காக நிதி வசதிகளை ஏற்படுத்தும் நிதி அறிவு நோக்கம்.

2. **புறக்காரணிகள்**

பொருளாதார அமைப்பில் பெரிய மாற்றங்களை விளைவிக்கக்கூடியவை புறக்காரணிகள் ஆகும். நுகர்விலும் குறிப்பிடத்தக்க மாறுதல்களை ஏற்படுத்துபவை புறக்காரணிகளாகும். அத்தகைய புறக்காரணிகள் பின்வருமாறு தொகுக்கப்படலாம்.

(i) **வருமானப்பங்கீடு:** நாட்டு வருமானப் பங்கீடு நுகர்வுச் சார்பைத் தீர்மானிக்கிறது. வருமானப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகக் காணப்பட்டால் நுகர்வுச் சார்பு குறைவாகக் காணப்படும். ஆனால் ஏற்றத்தாழ்வுகள் குறைவாகக் காணப்பட்டால் நுகர்வுச் சார்பு அதிகமாக காணப்படும். எனவே ஏழைகளிடம் நுகர்வு நாட்டம் அதிகமாகவும் செல்வரிடம் அது குறைவாகவும் காணப்படுகின்றது. நாட்டு வருமானம் சரிசமமாகப் பங்கிட்டால் ஏழைகளின் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.

(ii) **பண வருமானம்:** மக்களின் பண வருமானத்தைதப் பொறுத்து நுகர்வு அமைகின்றது. வருமானம் அதிகரிக்கும் போது நுகர்வும் அதிகரிக்கின்றது. வருமானம் குறையும் போது நுகர்வு குறைகிறது.

(iii) **அரசின் நிதிக் கொள்கை:** வரிவிதிப்பு, செலவு, பொதுக்கடன் போன்றவற்றைப் பற்றிய அரசின் நிதிக் கொள்கை நுகர்வு நாட்டத்தை பாதிக்கின்றது. வரிக்குறைப்பு நுகர்வை அதிகப்படுத்தும் ஆனால் வரிவிதிப்பு நுகர்வைக் குறைக்கும்.

(iv) **நிறுவனங்களின் நிதிக் கொள்கை:** வாணிப நிறுவனங்கள் தங்களின் லாபத்தில் அதிகமாக காப்பு நிதிக்கு ஒதுக்கிவிட்டு குறைவாக பங்குதாரர்களுக்கு பகிர்ந்து கொடுத்தால் நுகர்வு குறையும். மாறாக அதிகமாக லாபத்தை பகிர்ந்தளித்தால் நுகர்வு அதிகரிக்கும்.

(v) **எதிர்பார்ப்புகள்:** எதிர்காலத்தைப் பற்றிய மக்களின் கணிப்புகள் நுகர்வை பாதிக்கும். மக்கள் பொருளின் விலை கூடுமென்றோ அல்லது பற்றாக்குறை ஏற்படுமென்றோ எதிர்பார்த்தால் தற்போதைய தேவைக்கு மேல் பொருட்களை வாங்குவர். இதனால்

நுகர்வு அதிகரிக்கும். மாறாக பொருளின் விலை குறையுமென்றோ அல்லது அளிப்பு அதிகரிக்குமென்றோ எதிர்பார்த்தால் நுகர்வு குறையும். வருமானம் அதிகமாகும் என்ற எதிர்பார்ப்பிலும் நுகர்வு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

(vi) **எதிர்பாராத இலாபம் அல்லது நட்டம்:** திடீரென்று கிடைக்கும் லாபமோ அல்லது நட்டமோ நுகர்வை பாதிக்கும். இவ்வாறு அதிக லாபம் பெறுபவர்கள் மிகுதியாக நுகர்வுக்குச் செலவு செய்வார்கள். எதிர்பாராமல் அதிக நட்டம் அடைந்தவர்கள் தங்களின் நுகர்வைக் குறைத்துக்கொள்வார்கள்.

(vii) **வட்டி வீதம்:** வட்டி வீதத்தில் ஏற்படும் மாறுதல்கள் நுகர்வை பாதிக்கின்றன. வட்டி வீதம் அதிகரிக்கும்போது சேமிப்பு அதிகரித்து நுகர்வு குறையலாம். ஆனால் சிலர் குறைவான சேமிப்பு போதும் எனக் கருதி நிகழ்கால நுகர்வைக் கூட்டலாம். எனவே வட்டி வீதம் நுகர்வை எப்படிப் பாதிக்கும் என்பதை திட்டவட்டமாகக் கூற முடியாது.

(viii) **விற்பனை முயற்சி:** விளம்பரங்கள், விற்பனைத்திறன், பரிசுப் பொருட்கள், தவணை விற்பனை போன்றவைகள் நுகர்வை அதிகரிக்கின்றன.

(ix) **நுகர்வோரின் விருப்பம், நாகரிகம்:** நுகர்வோரின் விருப்பங்களிலும் நாகரிகத்திலும் ஏற்படும் மாறுதல்கள் நுகர்வு நாட்டத்தைப் பாதிக்கின்றன. இத்தகைய மாறுதல்கள் நீண்ட காலத்தில் காணப்படும். குறுகிய காலத்தில் காணப்படாது.

(x) **கூலியில் ஏற்படும் மாற்றம்:** கூலி விகிதங்கள் கூடும்போது நுகர்வு அதிகமாகும். அவைகள் குறையும் போது நுகர்வு குறையும். உழைப்பாளர்களின் நுகர்வு நாட்டம் மிகுதியாக இருப்பதால் அதிகமாகக் கிடைக்கும் கூலியின் பெரும் பகுதியினை நுகர்வுக்காகச் செலவிடுவார்கள்.

(xi) **மக்கள் தொகை:** மக்கள் தொகை பெருக்கம் நுகர்வுப் பெருக்கத்தை ஏற்படுத்தும். சிறிய குடும்பத்தை விட பெரிய குடும்பத்தினர் நுகர்வுக்காக அதிகம் செலவிடுகின்றனர். மக்கள் தொகை பெருகியுள்ள நாடுகளில் நுகர்வும் பெருகி வருகிறது.

(xii) **உறுதியான பொருட்களின் கையிருப்பு:** மக்களிடம் நீண்ட காலம் பயன்படக்கூடிய பொருட்களின் இருப்பு அதிகமாக இருந்தால் நிகழ்கால நுகர்வு குறைகின்றது.

(xiii) **சமுதாய பாதுகாப்பு:** ஓய்வு கால பென்சன் திட்டம், ஆயுள் காப்பீட்டு திட்டம் போன்ற சமுதாய பாதுகாப்புத் திட்டங்களை அரசு செயல்படுத்தும்போது மக்கள் அவைகளுக்கு பணம் செலுத்துவார்கள். இதனால் அவர்களின் நுகர்வு குறையும்.

(xiv) **நுகர்வோரின் கடன் அளவு:** நுகர்வோர் அதிகமாகக் கடன் வாங்கியிருந்தால் அவரது வருமானம் கடனைத் திருப்பி செலுத்தவே பயன்படுத்தப்படும். இதனால் நுகர்வு பாதிக்கப்படும்.

(xv) **டூசன்பரியில் எடுகோள்:** ஜேம்ஸ் டூசன்பரி என்பவர் நுகர்வைப் பாதிக்கும் காரணிகள் பற்றி இரு முக்கிய கருத்துக்களை கூறியுள்ளார். முதலாவதாக ஒருவரின் நுகர்வுச் செலவு வருமானத்தை மட்டும் அல்லாமல் கடந்த கால வாழ்க்கைத் தரத்தையும் சார்ந்திருக்கிறது. எனவே வருமானம் குறையும் போது நுகர்வு குறையும். ஆனால் வருமானம் குறையும் அளவுக்கு நுகர்வு குறையாது. டூசன்பரியின் இரண்டாவது கருத்து "நிருபண விளைவு அல்லது செயல்முறை விளைவு" எனப்படும். இதன்படி குறைந்த

வருமானம் உள்ளவர்களின் நுகர்வு அதிக வருமானம் உள்ளவர்களின் நுகர்வால் இயக்கப்படுகிறது என்பது தெரிய வருகிறது. அதாவது உயர்ந்த வருமானம் உள்ளவர்களின் நுகர்வைப் பார்த்து குறைந்த வருமானம் உள்ளவர்களும் அதே பொருட்களை நுகரச் செலவிடுதலாகும். இத்தகைய மனப்போக்கு நுகர்வை அதிகரிக்கும்.

(xvi) **பிகுவின் விளைவு:** பேராசிரியர் பிகு என்பவர் கூலியை குறைப்பதால் வேலை வாய்ப்பு கூடும் என்கிறார். கூலியைக் குறைப்பதால் உற்பத்தி செலவு குறைந்து பொருட்களின் விலையும் குறையும். இதன் விளைவாக மக்களின் கையிலுள்ள பணத்தின் வாங்கும் சக்தி அதிகரிக்கும். இதன் விளைவாக மக்களின் நுகர்வு அதிகரிக்கும் என பிகு கூறுகின்றார். இதுவே “பிகு” வின் விளைவு எனப்படுகிறது. எனவே நீர்மைச் சொத்தின் உண்மை மதிப்பிற்கும் நுகர்வு நாட்டத்திற்குமிடையே உள்ள தொடர்பு பிகுவின் விளைவு ஆகும்.

## முதலீடு

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் முதலீடு என்பது வளத்தின் திறவுகோலாகும். எனவே முழு வேலை நிறைக்கு மிகவும் இன்றியமையாதது முதலீடு என்பதாகும். ஒரு நாட்டில் உற்பத்தி, வேலை வாய்ப்பு, வருமானம் ஆகியவை பெருக முதலீடு அவசியமாகும். எனவே கீன்ஸ் முதலீட்டை மிக முக்கிய காரணியாக மதிப்பிடுகிறார்.




**படம் எண் 4.2.3 முதலீட்டின் வகைகள்**

1. **உண்மையான முதலீடும் பண முதலீடும்**

உண்மையான முதலீடு என்பது மூலதனக் கருவிகளில் செலவிடப்படுவதாகும். புதிய கருவிகள் எந்திரங்கள், அணைகள், சாலைகள், கட்டிடங்கள் போன்ற இனங்களின் செலவுகள் உண்மை முதலீடுகளாகும். இதனால் உற்பத்தியும் வாங்குதலும் அதிகரிக்கின்றன. பங்குகள், பத்திரங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் செலவுகளால் சொத்துக்கள் கைமாறுகிறதேயன்றி மொத்த முதலீடு மாறுவதில்லை. எனவே இத்தகையவற்றின் செலவுகள் நிதி முதலீடு அல்லது பண முதலீடு எனப்படுகிறது.

2. **தூண்டப்பட்ட முதலீடு, தன்னிச்சை முதலீடு**

பேராசிரியர் ஹிக்ஸ் முதலீட்டை தூண்டப்பட்ட முதலீடு என்றும் தன்னிச்சை முதலீடு என்றும் இரு வகைகளாகக் குறிப்பிட்டுள்ளார். விலைகள், கூலிகள், வட்டி ஆகிய மாற்றங்களினால் ஏற்படும் வருமானங்களினால் ஏற்படும் உயர்வு முதலீட்டைத் தூண்டுகின்றன. இவைகளினால் தூண்டப்படும் முதலீட்டைத் தூண்டப்பட்ட முதலீடு என்கிறோம். இது வருவாய்ச் சார்புடையது. மேலும் இம்முதலீடு உண்மை முதலீடாக இருக்கும். தூண்டப்பட்ட முதலீடு வருவாய் கூடினால் அதிகரிக்கும். வருவாய்குறைந்தால் இம்முதலீடு குறையும்.

3. **தன்னிச்சை முதலீடு**

உற்பத்திநிலைகள் வருமானம் ஆகியவற்றைச் சாராமல் தானாகவே ஆதாய நோக்கமின்றி செய்யப்படும் முதலீடுகள் தன்னிச்சை முதலீடுகள் எனப்படும். இத்தகைய முதலீடுகள் பெரும்பாலும் புதிய கண்டுபிடிப்புகளின் விளைவாகத் தோன்றும். மக்கள் தொகைப்பெருக்கம், ஆராய்ச்சிகள், பருவ கால மாற்றங்கள் போன்ற புறக்காரணிகளால் ஏற்படும் முதலீட்டுச் செலவுகள் தன்னிச்சை முதலீடுகள் எனப்படும். எடுத்துக்காட்டாக கட்டிடங்கள், சாலைகள், பள்ளிகள், கால்வாய்கள் போன்றவற்றில் செய்யப்படும் முதலீடுகள் தன்னிச்சை முதலீடுகளாகும். இவை பெரும்பாலும் பொதுத்துறை முதலீடாகவே இருக்கும்.

4. **பொதுத்துறை முதலீடும், தனியார் முதலீடும்**

ஒரு நாட்டின் அரசு பல்வேறு துறைகளில் செய்யும் முதலீடுகள் பொதுத்துறை முதலீடுகள் எனப்படும். நம் நாட்டில் மத்திய அரசு, மாநில அரசுகள் தொழில் போக்குவரத்து செய்தி துறைகளிலும், கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் மேற்கொள்ளும் முதலீடுகளும் பொதுத்துறை முதலீடுகளின் எடுத்துக்காட்டுகளாகும். தனிப்பட்ட மனிதர்களும், நிறுவனங்களும் லாப நோக்கத்தோடு செய்வது தனியார் முதலீடாகும். இது வருவாய் நெகிழ்ச்சி உடையதால் தூண்டப்பட்ட முதலீடாகும். தனியார் முதலீடு வட்டி வீதம், மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் ஆகியவற்றைச் சார்ந்திருக்கிறது. குறைந்த வட்டியும், அதிக இறுதி நிலை ஆக்கத்திறனும் தனியார் முதலீட்டை அதிகரிக்கச் செய்யும்.

5. **திட்டமிட்ட முதலீடும் திட்டமிடா முதலீடும்**

பொருட்களின் விற்பனை அல்லது விலைகளை அதிகரித்தால் தங்களின் கையிருப்புச் சரக்கின் இருப்பைப் பெருக்க செய்யப்படும் முதலீடு திட்டமிட்ட முதலீடு எனப்படும். உற்பத்தித் திறனை, அதிகரிப்பது உற்பத்திச் செலவை குறைப்பது போன்ற நோக்கங்களுக்காக

இத்தகைய முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வாணிபம் மற்றும் தொழிலில் தோன்றும் மாறுதல்களால் எவ்வித நோக்கமின்றி செய்யப்படும் முதலீட்டிற்கு திட்டமிடா முதலீடு என்று பெயர்.

6. **எதிர்பார்க்கும் முதலீடும் உண்மையான முதலீடும்**

முதலீட்டை திட்டமிட்ட விரும்பிய எதிர்பார்த்த முதலீடு என்றும் உண்மையான மேற்கொள்ளப்பட்ட முதலீடு என்றும் இரு வகையாகப் பிரிக்கப்படலாம். முதலீட்டாளர்கள் செய்ய விரும்பும் முதலீட்டின் அளவை எதிர்பார்க்கும் முதலீடு என்கிறோம். உண்மையில் மேற்கொள்ளப்படும் முதலீடு உண்மை முதலீடு எனப்படும். இது சேமிப்பைப் பொறுத்துள்ளது.

**மாணவர் செயல்முறை**
இந்திய பொருளாதாரத்தில் நுகர்வு மற்றும் முதலீட்டின் தாக்கத்தை ஒரு குழுவாக நீவிர் விவாதிக்கவும் .

## 4.3 பணவீக்கம்




**படம் எண் 4.3.1 பணவீக்கம்**

### பணவீக்கத்தின் காரணங்கள்

பணவீக்கம் கீழ்வரும் சூழ்நிலைகளில் தோன்றலாம். போரின் காரணமாக பணவீக்கம் தோன்றலாம். சில நாடுகளுக்கிடையில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நாடுகள் ஒன்றையொன்று வெற்றி பெறுவதற்கே முயலும். போரில் ஈடுபட்டுள்ள நாட்டின் செலவுகள் பலமடங்கு அதிகரிக்குமாதலின், செலவைச் சரிகட்ட பலவித வரிகளை விதிக்க வேண்டி நேரிடும். வருமானம் அதிகரிக்கப்படும். இதனால் விலைகள் உயரும். அரசாங்கம் வேண்டிய அளவு கடன்

வாங்கவும் முன்வரும். மைய வங்கிகளிடம் கடன் வாங்கும். காகிதப் பணமும் வெளியிடப்படும். இதனால் பணத்தின் அளவு அதிகரித்து விலைமட்டம் உயர்ந்து பணவீக்கம் ஏற்படும். போர் முடிந்த பிறகு மக்கள் பண்டங்களின் தேவையை நிறைவேற்றிக் கொள்ள விரும்புவதால், மேலும் விலைகள் அதிகரிக்கும். உலகப் பெரும் போருக்குப் பின் நாடுகளில் ஏற்பட்ட பணவீக்க நிலையே இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

திட்டமிட்டப் பொருளாதாரத்திலும் பண வீக்கம் ஏற்படும். இத்தகைய பொருளாதாரங்களில் குறிப்பிட்ட காலத்தில் இலக்குகளை அடையப் பெருமுயற்சி செய்யப்படுவதால், பல துறைகளில் முதலீட்டு பெருக்கம் ஏற்படும். இதனால் அரசின் செலவுகள் பல மடங்கு அதிகரிக்கும். அரசு தன் வருவாய்க்கு மேல் செலவு செய்ய ஆரம்பிக்கும். செலவை ஈடுகட்ட "பற்றாக்குறை நிதியாக்கம்" (Deficit Financing) செய்ய வேண்டிவரும். இதனால் விலைகள் உயருகின்றன. ஏனென்றால் பணப் பெருக்கம் ஏற்படும் அளவு உற்பத்திப் பெருக்கம் ஏற்படாது. முதலீடு செய்துள்ள சில துறைகளில் உற்பத்தி பெருகச் சில காலம் பிடிக்கும். இந்த இடைக்காலத்தில் பணவீக்கம் ஏற்படும்.

வாணிகச்சூழலின் காரணமாகவும் பணவீக்கம் உண்டாகும். பொருளாதார முன்னேற்றம் எப்போதும் ஒரே சீராக இருக்காது. அதிக ஏற்றத் தாழ்வுகள் காணப்படும். முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பூரிப்பும், மந்தமும் மாறி மாறி ஏற்படுகின்றன. பொருளாதாரம் மந்த நிலையிலிருந்து பூரிப்பு நிலையை நோக்கிச் செல்லும் போது பொருளாதார நடவடிக்கைகள் தூண்டப்படுகின்றன. முதலீடு, வேலைவாய்ப்பு, வருமானம் முதலியவை அதிகரிக்கின்றன. அதனால் பயனுள்ள தேவை அதிகரித்து விலைகள் உயர்ந்து பண வீக்கம் ஏற்படலாம். உற்பத்தித் திறன் குறைவதாலும், கூலி அதிகரிப்பதாலும், உற்பத்திச் செலவு பெருகுவதாலும் தேவை உயர்வதாலும், கடன் விரிவடைவதாலும், வருமானம் கூடுவதாலும் விலைகள் உயர்ந்து பணத்தின் மதிப்புக் குறைந்து பணவீக்கம் ஏற்படலாம்.

**பணவீக்கத்தின் வகைகள்**

பணவீக்கத்தின் வகைகள் சில வெவ்வேறு அடிப்படையில் பணவீக்கத்தை வகைப்படுத்தலாம். விலைகள் உயரும் வேகத்தை அடிப்படையாகக் கொண்டு (பணவீக்கத்தை) பிரிக்கலாம்.




**படம் எண் 4.3.2 பணவீக்கத்தின் வகைகள்**

விலைகள் மெதுவாக உயரும் நிலையே ஊரும் பணவீக்கமாகும். மெதுவாக உயர ஆரம்பித்த விலை விரைவாக உயர ஆரம்பித்தால் அது நடக்கும் பணவீக்கமாகும். இது ஊரும் பணவீக்கத்தை விட தீங்கு விளைவிப்பதாகும். ஏனென்றால் இது வெகு விரைவில் ஓடும் அல்லது தாவும் பணவீக்கமாக மாறிவிடும். இந்த நிலையில் விலைகள் பல மடங்காக எல்லையே இல்லாமல் உயரும். முதல் உலகப் போருக்குப்பின் ஜெர்மனியிலும், ஆஸ்திரியாவிலும் விலைகள் உயர்ந்ததையும், சமீப காலங்களில் ஹங்கேரியிலும், சீனாவிலும், விலைகள் உயர்ந்ததையும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

## பணவீக்கத்தின் விளைவுகள்

பணவீக்கம் உற்பத்தியையும், அதே நேரத்தில் நுகர்வையும் தூண்டுவதால் உற்பத்தியானதெல்லாம் விற்றுவிடக் காண்பார்கள். பேரளவு உற்பத்தியில் ஈடுபடுவார்கள். இதனால் பொருட்களின் தரம் குறையும். திறமை குறைந்த வணிகர்களும், தொழில் முயல்வோரும் கூட விலையேற்றத்தால் இலாபம் பெறுவர். இதனால் பொதுவாகத் திறமையும், தரமும் குறைந்து வரும். தொழிலாளர்கள் உயர்ந்துவரும் கூலியைவிட , பொருட்களின் விலை மிகுதியாக ஏறுவதை உணர்வார்கள். கூலியுயர்வுப் போராட்டங்களும், வேலை நிறுத்தங்களும் ஏற்படும்போது உற்பத்தி ஓரளவு பாதிக்கப்படும். கூலி உயரும், இலாபம் குறைந்து நட்டம் ஏற்படலாம். மொத்தத்தில் ஆடம்பரப் பொருட்களின் விலைகள் மிகுதியாகக் கூடுமாததால், அத்தகைய உற்பத்தியில் உற்பத்திச் சாதனங்கள் பெரிதும் ஈடுபடுத்தப் பெறும். இது நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்காது. பணவீக்கத்தால் அரசின் செலவு உயர அரசு வரி விகிதத்தைக் கூட்டும். இது உற்பத்தியாளர்களை இது பாதிக்கும்.

விலைகள் கூடுகின்ற வேகத்தில் கூலிகள் உயராது. தொழிற்சங்கங்கள் இருந்த போதிலும் படிப்படியாக வேலை, கூலி உயரும். இதனால் உண்மை வருவாய் குறைந்து தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். குறிப்பிட்ட மாதச் சம்பளம், மானியம், ஓய்வுகால ஊதியம் பெறுவோரின் நிலையும் இதுவே. பணவீக்கம் இவர்களுக்கு இலாபமாக இருக்காது.

பணவீக்கம் கடன்பட்டோருக்கு சாதகமாகவும் கடன் கொடுத்தோருக்குப் பாதகமாகவும் இருக்கும். கடன்காரர்கள் பணத்தின் மதிப்பு குறைந்து வரும் நிலையில் கடன் தீர்ப்பது எளிதாக இருப்பதை உணர்வார்கள். கடன் கொடுத்தோர் தாங்கள் கொடுத்த கடன் பணம் உண்மை மதிப்பில் குறைந்து திரும்புவதை அறிவார்கள். பணவீக்கம் கடன்காரர்களுக்கும் கடனைத் தீர்க்க ஏற்ற காலமாகும்.

விலையேற்றக் காலத்தில் பொதுப்பணிகள், பொதுத்துறை முதலீடு, அரசாங்க ஊழியர்கள், ஊதியம் ஆகியவற்றிற்கு வேண்டிய பணத்தின் அளவு கூடும். அரசு அதிகமாக வரிவிதிப்பது தேவையாகும்.

விலையேற்றம் வணிகர்களின் இலாபத்தைக் கூட்டும். வாங்கிய விலையை விட விற்கின்ற விலை கூடிக்கொண்டே செல்வதால் கையிருப்புப் பொருட்களினால் மிகுந்த இலாபம் எதிர்பாராத அளவு வந்து குவியக் காண்பார்கள்.

பணவீக்கம் விவசாயிகளுக்கு இலாபமாக இருக்கும். விலை பொருட்களை உயர்ந்த விலைக்கு விற்க முடியும். விலையேறுமளவிற்கு உற்பத்திச் செலவுகள் கூடாது. இதனாலும் இலாபம் பெறுவார்கள். கடன்பட்டிருக்கும் விவசாயிகளால் விலையேற்றக் காலத்தில் எளிதாகத் தங்கள்

கடனைத் தீர்க்க முடியும்.

### பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் முறைகள்

பணவீக்கத்தை கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகளின் நோக்கம் பொருள்களின் உற்பத்தியைவிட அதிகரித்துக் கொண்டுவரும் மொத்தச் செலவைக் குறைப்பதாகும். இத்தகைய நடவடிக்கைகளைப் பணவீக்கத்திற்கு எதிரான கொள்கைகள் என்றும் கூறுவதுண்டு. இவை மூன்று வகையாகும்.




**படம் எண் 4.3.3 பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் முறைகள்**

1. **பணத்துறை நடவடிக்கைகள்**

   பணவீக்கத்திற்கு எதிரான நடவடிக்கை பணத்தின் அளவைக் கட்டுப்படுத்த மையவங்கி பலவழிகளில் நடவடிக்கை எடுக்கலாம்.

   காகிதப்பண வெளியீட்டைக் கவனத்தோடு நெறிப்படுத்தலாம். மரபு வழியில் வங்கி வட்டி விகிதத்தை மாற்றி பணம் எளிதாகக் கிடைக்காமல் செய்யலாம். மைய வங்கி மற்றைய வங்கிகளுக்கு மாற்று உண்டியல் போன்றவற்றிற்கு கழிவு செய்து பணம் கொடுக்கையில் உயர்ந்த வட்டி விகிதத்தைக் கைக் கொண்டிட பண அங்காடியில் வட்டி விகிதம் உயரும். பணம் அருமையானதாக அழகிய அளவில் மாறும். மைய வங்கி,வெளி அங்காடி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மைய வங்கி பத்திரங்களை விற்பனை செய்யும். இதனைப் பொது மக்கள் வாங்குகின்றபோது, மக்களின் வாங்கும் சக்தி குறையும். வாணிக வங்கிகள் அவற்றிடமுள்ள வைப்பு நிதிக்கு ரொக்கம் வைத்துக் கொள்ள வேண்டிய விகிதத்தை

(Cash reserve) மைய வங்கிகள் உயர்த்தலாம். இதனால் வங்கிகளின் கடன் கொடுக்கும் சக்தி குறையும். வாணிக வங்கிகள் இத்தகைய பொருளாதாரப் பணிகளுக்கு மட்டும் (Selective Credit Control) கட்டுப்பாட்டைக் கொண்டு வரலாம். இதற்குரிய அதிகாரம் மையவங்கிக்கு உண்டு.

2. **அரசுதுறை நடவடிக்கைகள்**

அரசு தனது வரிவிதிக்கும் முறைகளின் மூலமாக மக்களிடமுள்ள வாங்கும் சக்தியைக் குறைக்கலாம். முன்பு விதித்த வரிகளைத் திறமையாக வசூலிப்பதோடு அவற்றின் விகிதத்தைக் கூட்டலாம். புதிய வரிகளை விதிக்கலாம். எத்தகைய வரிகளின் மூலம் மக்களின் செலவைக் கட்டுப்படுத்துமோ அத்தகைய வரிகளையே தெரிந்து, தேர்ந்து விதிக்க வேண்டும். மக்களின் சேமிப்பின் அளவு குறைந்தால், அது காலப் போக்கில் முதலீட்டைப் பாதிக்கும். கச்சாப் பொருள் இறக்குமதி வரி, சுங்கவரி போன்றவற்றைக் கூட்டுவதால், உற்பத்திச் செலவு உயரும். இது மறைமுகமாக உற்பத்தியைப் பாதிக்கலாம். ஆதலால் பாதகமான விளைவுகள் ஏற்படாத வகையில் அரசின் வரிக் கொள்கையை அமைத்துக் கொள்வது தேவையாகும்.

அரசு தனது பொதுச் செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் நடைமுறையில் பணவீக்க காலத்தில் அரசின் பொதுச் சலுகை குறைப்பது இயலாத செயலாக இருக்கின்றது. போர்க்காலத்தில் செலவைக் குறைக்க முடியாது. திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும்போது இடையில் திட்டங்களை நிறுத்துவது சிறந்த செயலாக இருக்காது. அரசின் நிர்வாகச் செலவுகளையும் எளிதாகக் குறைத்துவிட முடியாது.

பொது மக்களிடமிருக்கும் ரொக்கப் பணத்தின் அளவைக் குறைப்பதாக இருக்க வேண்டும். பொது மக்களிடம் வாங்கிய கடனைப் பணவீக்க காலத்தில் திரும்பக் கொடுக்காமல் மைய வங்கிகளிடம் பெற்ற கடனை முதலில் தீர்க்கலாம். வங்கிகள் விற்றிருக்கும் அரசாங்கப் பத்திரங்களைத் திரும்பப் பெறலாம்.

மக்களின் சேமிப்புகளைக் கூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். வட்டி விகிதத்தைக் கூட்டுவது தன் விருப்பச் சேமிப்பை தூண்டும், கட்டாயச் சேமிப்பித் திட்டங்களைக் கொண்டுவரலாம்.

3. **பிற நடவடிக்கைகள்**

நாட்டின் மொத்த உற்பத்தியைக் கூட்டும் வகையில் உற்பத்தித் திறன் உயர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தேவை. இதற்கு உற்பத்தியைப் பாதிக்கும் வகையில் அரசு வரிகளை விதிக்கக்கூடாது. கச்சாப் பொருட்கள் தடையின்றி இறக்குமதியாக வேண்டும். கூலி உயராமல் பார்த்துக்கொள்ளுதல் தேவை. தொழிற்சங்கங்களோடு பேசி கூலி உயராமல் இருக்க ஆவண செய்யலாம். விலைக் கட்டுப்பாடு, பங்கீடு ஆகியவற்றின் மூலமாக விலையேற்றத்தைத் தடுக்கலாம். மக்களுக்கும் தேவைப் பொருட்கள் ஓரளவு பரவலாகக் கிடைக்க இம்முறை துணை செய்யும். வெளிமாற்ற விகிதத்தில் மாறுதல்களைக் கொண்டு வரலாம்.

> மாணவர் செயல்முறை
> இந்திய பொருளாதாரத்தில் பணவீக்கத்தின் விளைவுகளை ஒரு குழுவாக விவாதிக்கவும்.

## 4.4 வாணிபச் சூழல்




**படம் எண் 4.4.1 வாணிபச் சூழல்**

### வாணிபச் சூழலுக்கான காரணங்கள்

பொருளியலாளர்கள் கூறும் வாணிபச் சூழலுக்கான காரணங்கள் பலவாறாகத் தொகுத்துக் கூறலாம். அவைகள்




**படம் எண் 4.4.2 வாணிபச் சூழலுக்கான காரணங்கள்**

### 1. அகக்காரணங்கள்

உள்நாட்டில், பொருளாதார சூழ்நிலையாலும், பொருளாதார அமைப்பு முறையாலும் வாணிபச் சுழல் தோன்றலாம். தேவை அளிப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் செல்வப் பகிர்வில் தோன்றும் சீர்கேடுகள், பொருளாதாரக்காரணிகளைச் சீராகப் பயன்படுத்தாமையால் தோன்றும், மிகை உற்பத்தி போன்றவை வாணிபச் சுழல்களை விளைவிக்கின்றன. முதலாளித்துவ அமைப்பில் திட்டமிட்டு உற்பத்தி நடைபெறவில்லை. பெருந்தொழில்கள் வளர்ந்துள்ள நிலையில் நுகர்வோர்கள் விரும்பிக் கேட்கும் பொருட்களை மட்டும் தேவையைப் பெற்று உற்பத்தி செய்ய முடிவதில்லை. இதனால் சிறு தொழில்களில் மிகுதியாகவும், சிலவற்றில் குறைவாகவும் உற்பத்தி நடைபெறுகின்றது. ஏதாவது ஒரு தொழில்உற்பத்தி பாதிக்கப்பட்டால் அதன் தொடர் விளைவுகள் பொருளாதாரத்தை பாதிக்கும்.

## 2. புறக்காரணங்கள்

அரசியல் போராட்டங்களும் புரட்சிகளும், போர்களும் நாட்டுப் பிரிவினை போன்றவைகளும், தொழில் நுணுக்க வளர்ச்சியும், பொருளாதாரச் சமன்பாட்டைக் கெடுக்கின்ற பொழுது வாணிபச் சூழல் தலைதூக்கும்.

## 3. பணக்காரணங்கள்

பண நிர்வாகத்திலும், அமைப்பிலும் ஏற்படுகின்ற குறைகள் வாணிபச் சூழலை தோற்றுவிக்கின்றன. வங்கிகள் வணிகர்களுக்குக் கொடுக்கும் கடன் பெருக்கமும், சுருக்கமும் சேமிப்பு முதலீட்டில் தோன்றும் ஏற்றத்தாழ்வும் வாணிபச் சூழலுக்கு காரணங்களாகின்றன.

## 4. பணம் தவிர பிறக் காரணங்கள்

சில பொருளியலாளர்கள் பொருளாதாரக் காரணங்கள் தவிர வேறு காரணங்களினால் வாணிபச் சுழல் தோன்றுவதைச் சுட்டிக் காட்டுகின்றனர். இயற்கையில் தோன்றும் மாற்றங்களினாலும் வாணிபத் தடைகளினாலும், வாணிபச் சுழல்கள் ஏற்படலாம்.

### வாணிபச் சுழற்சியின் நிலைகள்

ஒரு வாணிபச்சுழலில் நான்கு கட்டங்கள் இருக்கின்றன. அவை செழிப்பு (Prosperity), சுணக்கம் (Recession), மந்தம் (Depression), மீட்சி (Revival) என்பனவாகும்.




**படம் எண் 4.4.3 வாணிபச் சுழற்சியின் நிலைகள்**

1. செழிப்பு

பூரிப்பின் போது வாணிப நடவடிக்கையில் மாபெரும் பெருக்கம் நிகழ்கிறது. புதிய சாதனைகள் படைக்கப்படுகின்றன. பண்டங்களின் விலைகளில் பேரளவு ஏற்றங்கள் தோன்றி, இலாபங்கள் குவிகின்றன. எல்லை மீறிய வேலைவாய்ப்பு உண்டாகிறது. இதற்குப்பின்னர் முதலீடு அதிகரிக்கும்போது விலை வீக்கம் தோன்றுகிறது. இதனால் வர்த்தகர்கள் தொழிலதிபர்களிடையே ஏராளமானக் கூடுதலான முதலீடுகளை செய்கின்றனர். ஆகவே ஏற்கனவே முற்றும் ஆளப்பட்டுள்ள உற்பத்தி சாதனங்கள் வலியுறுத்தி ஆளப்படுகின்றன. இதனால் உற்பத்தி விலை ஏற்றமாகிறது. கவர்ச்சியான இலாபங்கள் வணிகர்களையும் தொழிலதிபர்களையும் முதலீட்டை மேலும் பெருக்குமாறு தூண்டுகிறது. இது விலை வீக்க ஏற்றங்களுக்கு தூபம் போடுகின்றது. விலைகள் மட்டுமின்றி உயருகின்றன. பூரிப்புப் புதுப்புது உச்சிகளுக்குத் தாவுகிறது, வாணிபத்தில் அபரிமித நம்பிக்கை பெருங்காற்றாய்ப் பரவுகிறது.

2. சுணக்கம்

பூரிப்பின்போது பரவி நின்ற அபரிமித நம்பிக்கை தற்போது மறைந்து, அதற்கு பதிலாக எல்லை மீறிய சோர்வு மனப்பான்மை தோன்றி வர்த்தகர்களிடையே அச்சமும், தயக்கமும் தலை தூக்குகின்றன. சில நிறுவனங்கள் முறிவு மீதிறை தோற்றுவிக்கிறது. பாங்குகளும் அச்சத்திற்கு உள்ளாகித் தொழிலகங்களுக்குக் கொடுத்து வந்த கடன்களைத் திரும்பப் பெறுவதில் முனைகின்றன. இதனாலும் நிறுவனங்கள் மென்மேலும் முறிகின்றன. முதலீடு குறைந்து விலைகள் சரிகின்றன. தொழில் நம்பிக்கை வேரோடு அசைக்கப்படுகிறது. வேலை வாய்ப்பின்மை முதலில் அடிப்படை முதற்பொருள் தொழில்களில் தொடங்கிப் பின்னர் மற்றத் தொழில்களுக்கும் பரவுகிறது. வேலை வாய்ப்பின்மையால் விலைகள், வருமானம், செலவீடு, இலாபங்கள் ஆகியவை குறைகின்றன. போகப் போக சுணக்கத்திற்கு சூடு பிடித்து இறுதியில் மந்தமாகச் சுழல்கிறது. உச்ச நிலையும் (Peak) பன்ன நிலையும் (Trough) ஒரு வாணிபச் சூழலின் முக்கியமான திருப்புமுனைகள் என்று பர்னசும், மிச்சலும் கருதுகின்றனர். இக்கொள்கையின்படி சுழலின் பெரும்பகுதி இருபாகங்களாகப் பிரிக்கப்படலாம். அவை (a) பெருக்கம் (Expansion) இது பன்ன நிலை முதல் உச்ச நிலை வரை நீடிக்கிறது. (b) (Contraction) இது உச்ச நிலை முதல் பள்ள நிலை வரை நீடிக்கிறது. சிறு காலத்தில் நிகழும் மேல்மட்ட கீழ்மட்டத் திருப்பு முனைகள் (Lower Turning Point) மீட்சியானது கருவாகி உருவாகிப் பெருக்கமாக மாறுகிறது. மேல்மட்டத் திருப்பு முனையில் (Upper Turning Point) சுணக்கமானது பொருளாதார நிலையைப் பிடித்துப் பாதித்து இறுதியில் சுருக்கமாக மாறுகிறது. இவ்வாறாக வாணிபச் சுழலில் மீட்சி பெருக்கம், சுணக்கம், சுருக்கம் என்ற நான்கு கட்டங்கள் இருக்கின்றன என்று இவ்வாசிரியர்கள் கருதுகின்றனர்.

3. மந்தம்

மந்தம் நிலவுகின்ற போது நாட்டின் வாணிப நடவடிக்கை மிகவும் மோசமான நிலையிலிருக்கிறது. உற்பத்தி பெரிதும் குறைவாயிருக்கிறது. வேலை வாய்ப்பின்மை பெருக்கமடைகிறது. விலைகள், இலாபங்கள், கூலிகள், ஆகியவை தாழ்ந்த

வண்ணமிருக்கின்றன. கடன் வசதிகள் குறுகுகின்றன. உற்பத்தி குறைவானதால் வேலை வாய்ப்பு குறைந்து போகிறது. கட்டுமானத் தொழில் எல்லாம் தேக்கமடைகின்றன. ஆனால் அடிப்படை முதற்பொருள் (Capital Goods) தொழில்களைப் போல் நுகர்ச்சிப் பண்ட தொழில்கள் வேலைவாய்ப்பின்மையால் பெருமளவில் பாதிக்கப்படுவதில்லை. பொறி செய்த தொழில் பண்டங்களின் விலைகள் மிகவும் தாழ்ந்து போகின்றன. விலைகள்குறையும்போது, செலவுகள் தாழ்வதில்லை. எனவே உற்பத்தியாளர்கள் கணிசமான இழப்புகளுக்கு உள்ளாகின்றனர். இழப்புகளின் விளைவாகப் பல நிறுவனங்கள் மூடப்படுகின்றன. விலைகள் தாழ்வானதால் விலை கட்டமைப்புத் தளர்கிறது.

4. *மீட்சி*

மந்த அடிமட்டம் சேர்ந்த பின்னர், வாணிப நடவடிக்கையில் தோன்றிடும் ஒரு திருப்பத்தை "மீட்சி" என்ற சொல் உணர்த்துகிறது. மீட்சித் தொடக்கத்தில் பொருளாதாரத்தில் ஓர் அபிவிருத்தி தென்படுகிறது. பொருளாதார நிலைமை தற்போது, மோசமில்லை என்ற எண்ணம் தொழில் முயல்வோரிடையே அரும்புகிறது. இந்த நம்பிக்கை காரணமாக வாணிப நடவடிக்கையில் மேலும் அபிவிருத்திகள் ஏற்படுகின்றன. உற்பத்தி சக்கரம் உறுதியுடன் சுழலத் தொடங்குகிறது. வேலைவாய்ப்பும் அதிகரிக்கிறது. விலைகளில் சிறு சிறு ஏற்றங்கள் தோன்றுகின்றன. இலாபங்களும், கூலிகளும் ஓரளவிற்குக் கூடுதலாகின்றன. இலாபங்கள் கூடுவதாயிருப்பதனால் முதற்பொருள் தொழில்களில் முதலீடுகள் செய்யப்படலாகின்றன. பாங்குகள் கடன் வசதிகளைப் பெருக்குகின்றன. முன்பு நிலவிய நம்பிக்கையின்மையும், மன முறிவும் மறைந்து, ஊக்கம் துளிர்விடுகின்றது. மந்தம் தொடங்குவதற்கு முன்னால் வாணிப நடவடிக்கை எந்த நிலையிலிருந்ததோ அந்த நிலை மறுபடியும் அடையும்வரை மீட்சி நீடிக்கிறது.

## வாணிபச் சூழலைக் கட்டுப்படுத்தும் வழிகள்

செழிப்புக் காலத்தில் வணிகர்களும், உற்பத்தியாளர்களும் மிகுந்த இலாபம் பெறுகின்றனர். ஆனால் குறிப்பிட்ட வருவாய் உள்ளவர்கள் அல்லற்படுகின்றனர். மந்தக் காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்க வறுமையின் பிடி இருகுகிறது, பொருளாதாரம் தேங்குகின்றது. ஏழைகளும், வணிகர்களும் பாதிக்கப்படுகின்றனர். ஆதலால் வாணிபச் சுழலில் பாதகமான விளைவுகளை நீக்கத்தக்க நடவடிக்கைகள் எடுப்பது தேவையாகின்றது.

### பணத்துறை நடவடிக்கைகள்

மைய வங்கி பணத்தின் அளவையும், வங்கிக் கடன் முறையையும் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தலாம். வங்கி வீதம், வங்கியிருப்பு, ரொக்க வீதம் புற அங்காடி நடவடிக்கைகள், கட்டுப்பாடுகள் ஆகிய கருவிகளின் மூலமாக மைய வங்கிகள் அளிக்கும் கடன் அளவைக் கூட்டவோ, குறைக்கவோ முடியும். எந்தெந்த துறைகளில் விரிவாக்கம் விழிப்பு நிலையிலிருந்கு பூரிப்பை நோக்கி செல்லுமோ அங்கெல்லாம் மைய வங்கிக் கடன் கட்டுப்பாடுகளைக் கொண்டு வரலாம். பொருளாதார நடவடிக்கைகள் சுருங்கி மந்த நிலை ஏற்படும் போலிருந்தால் மைய வங்கியின் கடன் அளவைக் கூட்டலாம். பூரிப்பைக் கட்டுப்படுத்த மைய வங்கிகளின் நடவடிக்கை பலன் தருகின்றன. இப்பொழுது பண வீதத்தைப் பணத்துறை நடவடிக்கைகளின் மூலம்

கட்டுப்படுத்த இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஓரளவு வெற்றியும் பெற்று வருகின்றன.

**நிதித்துறை நடவடிக்கைகள்**

கீன்சின் “பொதுக் கோட்பாடு” நூல் நிதித்துறை நடவடிக்கைகள் மூலம் நிறைவை அடைய முடியும் என்பதை உலகிற்கு விளக்கியது. நிதித்துறை நடவடிக்கைகள் செயல்படும் முறை வருமாறு:

மந்த காலத்தில் அரசு வரிகளைக் குறைத்து தனியார் செலவையும், முதலீட்டையும் ஊக்குவிக்க வேண்டும். இதனால் செயலாக்கத் தேவை கூடும். மந்தத்திலிருந்து மீட்டெழுச்சி பெற அரசின் பொதுப் பணிச் செலவுகள் பெரிதும் துணை செய்யும். சாலைகள் அமைத்தல், பள்ளிகள், மருத்துவமனைகள், அணைகள் கட்டுதல் போன்ற பொதுப்பணிகள் மூலம் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி அவர்களது சக்திகளை உயர்த்துவதால் பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு விரைவு தோன்றும். இதற்கு அரசு பற்றாக்குறை நிதியாக்கத்தை (Deficit Financing)மேற்கொள்ளலாம். அரசு தனது பொதுக்கடன் (Public debt) கொள்கையின் மூலமாகவும் இருப்பு மந்தம் ஆகியவற்றின் சீர்கேடுகளை மறைக்க முயலலாம்.

**விலைக்கட்டுப்பாடு**

பூரிப்பு நிலையில் விலை கட்டுக்கடங்காமல் உயர்வதைத் தடுக்க விலைகளுக்கு உச்ச வரம்பு கொண்டு வரலாமென்று கூறப்படுகிறது. போர்காலப் பணவீக்கத்தை கட்டுப்படுத்த விலைக்கட்டுப்பாடும், பங்கீட்டு முறையும் உதவுகின்றன.

**பிற திட்டங்கள்**

செழிப்பு காலத்தில் நுகர்வு தவணை முறை, விற்பனை ஆகியவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கலாம். மந்த காலத்தில் நுகர்ச்சியைக் கூட்டல், வரியைக் குறைத்தல், வேலையின்மைப்படி அளித்தல், தொழிலாளர்களுக்குக் கடன் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.
கார்ல் மார்க்ஸ், முதலாளித்துவத்தில் உள்ளடங்கிக் கிடக்கும் தீமையாக வாணிபச் சூழலைக் கருதுகின்றார். ஆதலால், சமதர்ம சமுதாயத்தை அமைப்பதன் மூலமாகவே வாணிபச்சூழலைத் தவிர்க்க முடியுமென்பது அவரது கருத்து.

**மாணவர் செயல்முறை**
இந்திய பொருளாதாரத்தில் வாணிப சுழற்சியின் தாக்கத்தை நீவிர் ஒரு குழுவாக விவாதிக்கவும் .

## 4.5 சமூக பொருளாதார காரணிகள்

சமூக பொருளாதார காரணிகள் இந்திய நாட்டின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கிறது. இந்த பகுதியில் வேலைவாய்ப்பு, பெண் குழந்தைகள் கல்வி, கல்விக்கான கடன், குழந்தைகளின் இறப்பு

விகிதம் மற்றும் PMUY திட்டத்தை விளக்கம் உள்ளோம்.




**படம் எண் 4.5.1 சமூக பொருளாதார காரணிகள்**

1. **வேலைவாய்ப்பு**

தற்போது நிலவும் பொருளாதார மந்தநிலை, நாட்டின் புதிய வேலைவாய்ப்புகளை கடுமையாக பாதித்துள்ளதாக ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா அறிக்கை தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் 15.8 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் மட்டுமே உருவாக்கப்படும் என எதிர்பார்க்கபடுகிறது. இதுவே கடந்த நிதியாண்டில் 89.17 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன. மேலும் 2019ம் ஆண்டு தேசிய புள்ளியியல் அலுவலகம் தகவல்படி வேலையில்லாதோர் சதவீதம் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.1 - 2019ம் வேலையில்லாதோர் சதவீதம்**

| மாதம் | சதவீதம் |
|---|---|
| ஜனவரி | 6.9 |
| பிப்ரவரி | 7.2 |
| மார்ச் | 6.7 |
| ஏப்ரல் | 7.4 |
| மே | 7.0 |
| ஜூன் | 7.9 |
| ஜூலை | 7.3 |
| ஆகஸ்ட் | 8.2 |
| செப்டெம்பர் | 7.2 |
| அக்டோபர் | 8.5 |
| நவம்பர் | 7.2 |
| டிசம்பர் | 7.6 |

**ஆதாரம்:** தேசிய புள்ளியியல் அலுவலகம், நிதி அமைச்சகம், இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (2019)

கடந்த 2019, மார்ச் 1 கணக்கின்படி, நாடு முழுவதும் 32,62,908 பேர் அரசு பணியில் உள்ளனர். வரும் 2021, மார்ச் 1 ஆண்டிற்குள் இந்த எண்ணிக்கை 35,25,388 ஆக உயர்த்தப்படும் என மத்திய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தமது பட்ஜெட் உரையில் அறிவித்துள்ளார். காவல்துறையில், அதிகபட்சமாக 79,353 பணியிடங்கள் நிறப்பபடும். அதையடுத்து ராணுவதில் படைப்பிரிவு இல்லாத மற்றப் பிரிவுகளில் 22,046 பேர் சேர்க்கப்படுவார்கள்.

## 2. பெண் குழந்தைகள் கல்வி

மத்திய அரசு பெண் குழந்தைகள் முன்னேற்றத்திற்கு பல்வேறு விதமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதில் ஒன்று பெண் குழந்தைகள் கல்வியை பேணும் திட்டம் (Beti Bachao Padhao). இத்திட்டத்தினால் பெண் குழந்தைகளின் கல்வி கற்போர் எண்ணிக்கை ஆண் குழந்தைகளைவிட எல்லா மட்டத்திலும் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 4.2 -** குழந்தைகளின் எண்ணிக்கை (சதவீதத்தில்)

| கல்வி நிலை | பெண்கள் | ஆண்கள் |
|---|---|---|
| **தொடக்கம்** | 94.32 | 89.28 |
| **இடைநிலை** | 81.32 | 78.00 |
| **மேல்நிலை** | 59.70 | 57.54 |

**ஆதாரம்**: நிதியமைச்சர் பட்ஜெட் 2020-21 பேச்சு

பள்ளிக் கல்வியை மேம்படுத்த இந்த ஆண்டு பட்ஜெட்டில் ரூபாய் 59,368 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் திட்டங்களான சமக்ரா சிக் ஷா அபியான்(Samagra Shiksha Abhiyan), கேந்திர வித்யாலயா சமீதி (Kendra Vidyalaya Samiti) மற்றும் நவோதயா வித்யாலயா சமிதி (Navodaya Vidyalaya Samiti) மூலம் அரசு அரசு முயற்சி செய்கிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு அமைச்சகம் அங்கன்வாடிகள் அல்லது பகல் நேர காப்பாகங்களை தொடங்கி பல்வேறு சேவைகளை அளித்து வருகிறது. இந்த சேவைகளின் நோக்கம் குழந்தைகளின் இறப்பு மற்றும் சத்து குறைபடுள்ள குழந்தைகலைன் எண்ணிக்கையை குறைத்தல் ஆகும். பயனாளிகள் ஆறு மாதத்திலிருந்து ஆறு வயது வரை உள்ள குழந்தைகள், கார்பினி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்.

செப்டெம்பர் 30, 2019 தேதியின்படி 7.95 கோடி பயனாளிகள் அங்கன்வாடி திட்டத்தால் பயனடைந்துள்ளனர். நாடு முழுவதும் 13.79 லட்சம் அங்கன்வாடிகள் இயக்கத்தில் உள்ளது. இதில் 9.31 லட்சம் அங்கன்வாடிகள் அரசாங்கத்தின் இணைய இணைப்பில் உள்ளது (ஊரகப் பகுதி 8.22 லட்சம், நகர்ப்பகுதி 1.09 லட்சம் அங்கன்வாடிகள்).

மேலும் குழந்தைகளின் ஊட்டச் சத்தை அதிகரிக்க இந்த பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.3 - பட்ஜெட் குழந்தைகளுக்கு நிதி ஒதுக்கீடு**

| திட்டம் | 2019 – 20 (கோடியில்) | 2020 – 21 (கோடியில்) | அதிகம் |
|---|---|---|---|
| அங்கன்வாடி திட்டம் | 17704 | 20532 | 15% |
| POSHAN அபியான் சட்டம் | 3400 | 3699 | 8.7% |

**ஆதாரம்:** மத்திய நிதி அமைச்சரின் 2020-21 பட்ஜெட் உரை

### 3. உயற்கல்விக்கான கடன்

மாணவர்கள் உயர் கல்வியை கற்றிட மத்திய அரசு வங்கிகள் ( Credit Guarantee Fund Scheme for Education Loans) மூலம் கடன் வழங்கி வருகிறது. 2016-17 ஆண்டு முதல் 2019-20 தகவல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.4 – உயற்கல்விக்கான கடன்**

| பிரிவு | பயனாளிகள் எண்ணிக்கை | சதவீதம் | CGFSEL திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு (கோடியில்) | சதவீதம் |
|---|---|---|---|---|
| பொது (OC) | 2,75,628 | 67.0 | 9730 | 70.5 |
| இதர பிற்படுத்தப்பட்டோர் (MBC) | 94,348 | 23.0 | 2750 | 19.9 |
| பட்டியல் இனம் (SC) | 28,614 | 7.0 | 926 | 6.7 |
| பழங்குடியினர் (ST) | 12,343 | 3.0 | 391 | 2.8 |
| மொத்தம் | 4,10,333 | 100.0 | 13,797 | 100.0 |

**ஆதாரம்:** மக்களவையில் மத்திய மனிதவள வேளாண்மை துறை அறிக்கை டிசம்பர் 2019

சராசரி கடன் பொதுப்பிரிவினர் ரூ.3.54 லட்சம், இதர பிற்பட்டோர் ரூ.2.91 லட்சம், பத்தியல் பிரிவினர் ரூ.3.24 லட்சம் மற்றும் பழங்குடியினர் ரூ.3.17 லட்சம்.

### 4. பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம்

இந்தியாவில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே வருகிறது.

**அட்டவணை: 4.5 - ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இறப்பு எண்ணிக்கை**

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1990 | 34000 |
| 2000 | 27000 |
| 2018 | 15000 |

**ஆதாரம்:** உலக சுகாதார நிறுவன ஆய்வு 2019, தி இந்து பக்கம் 7 ஜனவரி 13, 2020

இந்தியாவில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் 5 வயதுக்கு உட்பட்ட பெண்கள் இறப்பு வீதம் அதிகமாக உள்ளது. கேரளாவில் குறைவாக உள்ளது.

**அட்டவணை: 4.6 - இந்திய மாநிலங்களில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம்**

| மாநிலம் | ஐந்து வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகள் இறப்பு விகிதம் | ஐந்து வயதுக்கு உட்பட்ட ஆண் குழந்தைகள் இறப்பு விகிதம் | இடைவெளி | ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம் |
|---|---|---|---|---|
| **ஜார்க்கண்ட்** | 38 | 30 | 8 | 34 |
| **அஸ்ஸாம்** | 51 | 45 | 6 | 48 |
| **ஹரியானா** | 38 | 32 | 6 | 35 |
| **உத்தர பிரதாசம்** | 48 | 43 | 5 | 46 |
| **ராஜஸ்தான்** | 45 | 41 | 4 | 43 |
| **பீகார்** | 43 | 39 | 4 | 41 |

**ஆதாரம்:** உலக சுகாதார நிறுவன ஆய்வு 2019, தி இந்து, பக்கம் 7, ஜனவரி 13, 2020

## 5. PMUY திட்டம்

பிரதம மந்திரியின் உஜ்வாலா யோஜனா (PMUY) திட்டத்தின் மூலம் எரிவாய்வு பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

**அட்டவணை 4.7 - PMUY திட்டத்தின் மூலம் நுகர்வோர் எண்ணிக்கை**

| ஆண்டு | பயன்படுத்துவோர் எண்ணிக்கை (சதவீதத்தில்) |
|---|---|
| **ஏப்ரல் 2014** | 55.9 |
| **ஏப்ரல் 2015** | 56.2 |
| **ஏப்ரல் 2016** | 61.9 |
| **ஏப்ரல் 2017** | 72.8 |
| **ஏப்ரல் 2018** | 80.9 |
| **ஏப்ரல் 2019** | 94.3 |

**ஆதாரம்:** 2019 ஆம் ஆண்டின் செயல்திறன் எண் 14, செயல்திறன் PMUY, பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் தணிக்கை

டிசம்பர் 31 2018 அன்று 3.18 கோடி மக்கள் பிரதம மந்திரியின் உஜ்வாலா யோஜனா திட்டத்தின் மூலம் பயனடைந்தனர்

**அட்டவணை 4.8 - PMUY திட்டத்தில் மறுபடியும் சமயல் எரிவாய்வு வாங்கியோர்**

| மீண்டும் எரிவாயு பயன்பாடு எண்ணிக்கை | நுகர்வோர் எண்ணிக்கை |
|---|---|
| **முதலில்** | 55.44 லட்சம் |
| **1-3** | 1.05 கோடி |
| **>4** | 1.57 கோடி |

**ஆதாரம்:** 2019 ஆம் ஆண்டின் செயல்திறன் எண் 14, செயல்திறன் PMUY, பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் தணிக்கை

**செயல்பாடு செய்ய**
இந்தியாவில் சமூக பொருளாதார கரணிகளின் தாக்கத்தை நீவிர் ஒரு குழுவாக இணைந்து விவாதிக்கவும் .

## தொகுப்புரை

ஓராண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பே தேசிய வருமானம் அல்லது நாட்டு வருமானம் ஆகும். ஒரு நாட்டின் தேசிய வருமானம் பின்வரும் காரணிகளுக்கு ஏற்ப அமையும்.

1. நிலவளம் வேளாண்மை உற்பத்தித் திறன்
2. வணிகத்துறை மேம்பாடு
3. தொழில் துறை
4. போக்குவரத்து – தகவல் தொடர்பு வசதிகளின் வளர்ச்சி நிலை
5. வங்கிகளின் முன்னேற்றம்
6. உழைக்கும் திறன், உழைக்க விருப்பம் கொண்ட மக்கள் வளம்
7. சமுதாய அரசியல் அமைப்புகள்
8. பொருளாதார முன்னேற்றத்திற்கான அரசின் நடவடிக்கைகள்
9. கனிவளம், வனவளம், மலைவளம்,நீர்வளம் போன்ற இயற்கை வளங்கள்
10. சுகாதார, மருத்துவ வசதிகள்
11. பொதுக்கல்வி, தொழில்நுட்பக் கல்வி மற்றும்
12. உற்பத்தி நடவடிக்கைகளில் இயந்திரங்களைப் பயன்படுத்துதல்.

நுகர்வை இரு வகையான காரணிகள் பாதிக்கின்றன. அவை அகக்காரணி மற்றும் புறக்காரணி ஆகும். அகக்காரணிகள் என்பவை பொருளாதார அமைப்பில் உள்ளார்ந்தவைகளாக இருப்பவை. இவைகள் மனித இயல்பைச் சார்ந்த உளவியல் மரபுகள், பழக்க வழக்கங்கள், நிறுவன அமைப்புகள் போன்றவற்றின் தொடர்பானவைகளாக இருக்கும். இவைகள் குறுகிய காலத்தில் மாறாது. புறக் காரணிகள் பொருளாதார அமைப்புக்குப் புறம்பானவைகளாக பெரிய மாறுதல்களுக்கு உட்படுபவைகளாக இருக்கும். முதலாளித்துவப் பொருளாதாரத்தில் முதலீடு என்பது வளத்தின் திறவுகோலாகும். எனவே முழு வேலை நிறைக்கு மிகவும் இன்றியமையாதது முதலீடு என்பதாகும். ஒரு நாட்டில் உற்பத்தி, வேலை வாய்ப்பு, வருமானம் ஆகியவை பெருக முதலீடு அவசியமாகும்.

பணவீக்கம் உற்பத்தியையும், அதே நேரத்தில் நுகர்வையும் தூண்டுவதால் உற்பத்தியானதெல்லாம் விற்றுவிடக் காண்பார்கள். பேரளவு உற்பத்தியில் ஈடுபடுவார்கள். இதனால் பொருட்களின் தரம் குறையும். திறமை குறைந்த வணிகர்களும், தொழில் முயல்வோரும் கூட விலையேற்றத்தால் இலாபம் பெறுவர். இதனால் பொதுவாகத் திறமையும், தரமும் குறைந்து வரும். தொழிலாளர்கள் உயர்ந்துவரும் கூலியைவிட , பொருட்களின் விலை மிகுதியாக ஏறுவதை உணர்வார்கள். கூலியுயர்வுப் போராட்டங்களும், வேலை நிறுத்தங்களும் ஏற்படும்போது உற்பத்தி ஓரளவு பாதிக்கப்படும்.

ஒரு வாணிபச்சுழலில் நான்கு கட்டங்கள் இருக்கின்றன. அவை செழிப்பு (Prosperity), சுணக்கம் (Recession), மந்தம் (Depression), மீட்சி (Revival) என்பனவாகும்.

சமூக பொருளாதார காரணிகள் இந்திய நாட்டின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கிறது. இந்த பகுதியில் வேலைவாய்ப்பு, பெண் குழந்தைகள் கல்வி, கல்விக்கான கடன், குழந்தைகளின் இறப்பு

விகிதம் மற்றும் PMUY திட்டத்தை விளக்கம் உள்ளோம்.

**மாதிரி வினா**

1. தேசிய வருமானத்தை பாதிக்கும் காரணிகளை விளக்குக.
2. நுகர்வு மற்றும் முதலீட்டை பாதிக்கும் காரணிகளை விளக்குக.
3. பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் முறைகளை விளக்குக.
4. வணிக சூழலின் கட்டங்களை விளக்குக.
5. சமூக பொருளாதார காரணிகளின் முக்கியதுவத்தை விளக்குக.

## வாசிப்பு பொருள்

- தேசிய புள்ளியியல் அலுவலகம், நிதி அமைச்சகம், இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம்.
- மத்திய நிதி அமைச்சரின் 2020-21 பட்ஜெட் உரை
- மக்களவையில் மத்திய மனிதவள வேளாண்மை துறை அறிக்கை டிசம்பர் 2019
- உலக சுகாதார நிறுவன ஆய்வு 2019, தி இந்து பக்கம் 7 ஜனவரி 13, 2020
- உலக சுகாதார நிறுவன ஆய்வு 2019, தி இந்து, பக்கம் 7, ஜனவரி 13, 2020
- 2019 ஆம் ஆண்டின் செயல்திறன் எண் 14, செயல்திறன் PMUY, பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் தணிக்கை.

## குறிப்புரை


- Ahmed. F. and Alam, A. (2014). Business Environment: Indian and Global Perspective. Prentice Hall: New Delhi.
- Francis Cherunilam (2017). Business Environment Text & Cases. Himalaya Publishing House. New Delhi
- Dr. Radha (2013). Business Environment. Prasanna Publications, Chennai
- Ramaswamy V. S. and Namakumari S (2010): Marketing Management: Tata McGraw Hill, New Delhi

# அலகு 5 - சட்ட கட்டமைப்பு

## அத்தியாய அறிமுகம்

சட்டம் என்பது சில விதிமுறைகள் மற்றும் கொள்கைகள் நாட்டு மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ப வழி நடத்தி செல்லும் முறையாகும். விரிவாக குறிப்பிடுகையில் சட்டம் என்பது விதிகள் மற்றும் கொள்கைகள், அரசால் அல்லது ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டு அல்லது சமூகத்தில் உள்ள உன்னதமானவர்களால் உருவாக்கப்பட்டு, நாட்டு மக்களின் குணநலங்களை மதித்து, கட்டுப்படுத்தி, சமூகத்தில் நீதி, அமைதி, சமூகபாதுகாப்பு என பல்வேறு இயல்புகளை உள்ளடக்கிய விதிமுறைகளே சட்டம் எனப்படும். மேலும் இந்த சட்டம் மனித வாழ்வியல் நெறியின் ஒரு சிறு பகுதி ஆகும்.

சட்டம் குறித்து ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி குறிப்பிடுகையில் சட்டம் என்பது ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டு, முறையாக சமூகத்திற்கு சரியான வாழ்க்கையை வாழ வழி காட்டுவதாகும்.

இந்த பாடத்தில் சட்ட வரைமுறை, நிறும சட்டம் 2013, அந்நியச் செலாவணி மேலாண்மைச்சட்டம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் ஆகியவற்றை விரிவாக பார்க்கலாம்.

## அத்தியாய நோக்கங்கள்

இப் பாடத்தை படித்த பின்னர் நீங்கள்

- சட்ட நடைமுறைகளை பற்றி விளக்க முடியும்.
- நிறும சட்டம் 2013 சிறப்பியல்புகளை விவாதிக்க முடியும்.
- அந்நியச் செலாவணி மேலாண்மைச்சட்டத்தின் சிறப்புகளை விளக்க முடியும்.
- நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் உள்ள நுகர்வோர் உரிமைகளை விவரிக்க முடியும்.

## அத்தியாய அமைப்பு

**5.1 சட்ட நடைமுறைகள்**

**5.2 நிறும சட்டம், 2013**

**5.3 அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம்**

**5.4 நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்**

## 5.1 சட்ட நடைமுறைகள்

நோக்கங்களையும் கொள்கை திட்டங்களையும் வகுப்பதுடன் திட்டமானது ஒரு செய்முறையையும் குறிப்பிட வேண்டும் என்பதைத் தெளிவாகக்குவதே செய்முறை எனப்படுகிறது. மீண்டும் மீண்டும் செய்ய வேண்டிய செயல்களுக்கு மட்டுமே செய்முறைகள் வகுக்கப்படுகின்றன. அப்பொழுதுதான்

ஒவ்வொரு முறை அச்செயலைச் செய்யும் பொழுது அதே வழிகளை பின்பற்ற முடியும். செய்முறைக்கான சில எடுத்துக்காட்டுகள் யாரிடமிருந்து வாங்குவது என்பதை முடிவு செய்ய ஒப்பந்தப் புள்ளிகளை பெற்று, குறைந்த விலைக்கு பொருளளிப்போரிடம் வாங்க முடிவு செய்தல், வேண்டாணைச் சீட்டு பெற்ற பின்னரே பண்டங்களை வழங்கல் போன்றவையாகும்.

கொள்கைத் திட்டம் சிந்தனைக்கு வழி காட்டுகிறது. ஆனால் செய்முறையோ செயல் மேற் கொள்ள துணைபுரிகிறது. ஒரு திட்டத்தை நிறைவேற்றவே செய்முறைகள் உருவாக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, தனது ஊழியர்களுக்கு கோடை விடுப்பு அளிப்பது என்பது ஒரு நிறுவனத்தின் கொள்கைத் திட்டமாக இருக்கலாம். அதை எப்படி செயல்படுத்துவது என்ற முறையை தெளிவாக்குவது செய்முறை. அதாவது கோடை விடுமுறை வேண்டி எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும், விடுப்புக் கால ஊதியத்தை நிர்ணயம் செய்ய முடியாது, ஒவ்வொரு ஊழியருக்கும் விடுப்பு கிடைக்க வைத்திருக்க வேண்டிய பதிவேடுகளின் எவையெவை போன்றவை செயல்முறைகளாகும்.




**படம் எண் 5.1.1 சட்ட நடைமுறைகள்**

### சட்டத்தின் நோக்கம்

மனித நாகரிகத்தின் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி, அறிவியல் கண்டுபிடிப்புகள், மனித பண்பாடுகள் மற்றும் மனித குணங்கள் போன்றவை சட்டத் தேவையை, மாற்றங்கள் மற்றும் புதிய சட்டங்கள் உருவாக்குவதற்கும் காரணமாக உள்ளது. மேலும் சமூகத்தில் பல்வேறு வகையான பண்பாடுகள், அரசியல், வணிகம், தொழில், மொழிகள் மற்றும் மதம் போன்றவை மக்களை பிரிவு படுத்தாமல் அனைவரையும் சரிசமமாக வழிநடத்தவும், நியாயம் வழங்கவும், பொதுமக்களை கட்டுப்படுத்தவும் சட்டம் இன்றியமையாததாகும்.

எனவேதான் மிகவும் நாகரீகமடைந்த பல்வேறு சமூகங்கள் தமது பண்பாடு மற்றும் பொது மக்களை நேர்வழிப்படுத்த பல்வேறு வழிகாட்டு முறைகளை சட்டமாக வகுத்துள்ளன. மேலும் சட்டத்தில் பல்வேறு வகைகள் உள்ளன.




**படம் எண் 5.1.2 சட்டத்தின் வகைகள்**

குறிப்பாக பன்னாட்டு சட்டங்கள், அரசியலமைப்பு சட்டம், அரசியலமைப்பு சட்டம், குற்றவியல் சட்டம், சொத்துரிமை சட்டம், வணிகச் சட்டங்கள், பணியாளர் சட்டங்கள், வாகன சட்டம் என பல்வேறு சட்டங்கள் அந்தந்த நாடுகளின் ஆட்சியாளர்கள் மூலம் இயற்றப்பட்டு அந்தந்த நாடுகளின் ஆட்சியாளர்கள் மூலம் இயற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய சட்டங்கள் நம் நாட்டிலும் பெரும்பாலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## நம் நாட்டில் மனித சட்டத்தின் பரவல்

வணிகச் சட்டம் என்பது சட்டத்தின் ஒரு பிரிவு ஆகும், இதில் வணிகம், தொழில் மற்றும் வர்த்தகம் சார்ந்த விதிமுறைகளை உட்படுத்தி செயல்படுத்தி வருகிறது. மேலும் இந்த நிலையில் வணிக வளர்ச்சியின் காரணமாக வணிக சட்டத்தில் பல்வேறு சூழல்களில் மாற்றங்களும் கொண்டுவரப்பட்டு தேவைக்கேற்ப புதிய சட்டங்கள் இயற்றப்பட்டு செயல் படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக நம் நாட்டில், இந்திய ஒப்பந்தச் சட்டம், சரக்கு விற்பனைச் சட்டம், கூட்டாண்மைச் சட்டம், நிறும சட்டம், மாற்றுமுறை ஆவணச் சட்டம், காப்பீட்டு சட்டம், திவால் சட்டம், சரக்கு போக்குவரத்து சட்டம், வணிக மத்தியஸ்த சட்டம், பணியாளர்கள் சட்டம், தகவல் தொழில்நுட்ப சட்டம், அந்நியச் செலாவணி சட்டம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சட்டங்கள் என பல்வேறு சட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.

## மனிதச் சட்டங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

மனிதச் சட்டங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சியும் பற்றி பார்ப்போம்




**படம் எண் 5.1.3 மனிதச் சட்டங்கள்**

**(i) ஆங்கில வணிக சட்டம்**

ஆங்கில வணிகச் சட்டங்கள் பெரும்பாலும் நம் நாட்டில் பல்வேறு சட்டங்கள் இயற்ற உதவியாகவும், இந்திய ஒப்பந்தச் சட்டம், சரக்கு விற்பனை சட்டம், கூட்டாண்மைச் சட்டம் மேலும் பல்வேறு பணியாளர் சட்டங்கள் மற்றும் வணிகச் சட்டங்கள் உருவாக காரணமாக இருந்தது.

**(ii) நாடாளுமன்றச் சட்டம்**

நாடாளுமன்றச் சட்டம் என்பது நாட்டின் பொது மக்களால் தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன், புதிய சட்டத்துறை அமைச்சரால் இயற்றப்பட்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் குடியரசுத் தலைவர் ஒப்புதலுடன் சட்டமாகிறது. பின் அந்தந்த மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்துகின்றன.

**(iii) நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் வழக்குகள்**

நீதிமன்றங்கள் பல்வேறு வழக்குகளையும் பட்டியலிட்டு விவாதித்து தீர்ப்பு வழங்குகின்றன. இதில் மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம், பல்வேறு தீர்ப்பாயங்கள் பல்வேறு வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கி வருகின்றன. இத்தகைய தீர்ப்பின் மூலம் சட்டங்கள் முக்கியத்துவம் பெறுவதுடன் சரியான தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய நீதி மன்ற வழக்குகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

**(iv) வணிகம் மற்றும் சமூக பழக்கவழக்கங்கள்**

வணிகம் மற்றும் சமூக பழக்க வழக்கங்கள் நீதிமன்றங்கள் நீதி வழங்குவதில் பெரிதும் வழிகாட்டுகின்றன. இத்தகைய பழக்க வழக்கங்கள் மற்றும் பண்பாடுகள் சட்டத்தை வகுக்கவும், செயல்படுத்தவும், தீர்ப்பு வழங்கவும் ஆட்சியாளர்களுக்கு பெரிதும் உதவுகிறது.

**மாணவர் செயல்முறை**
இந்தியாவில் சட்ட நடைமுறைகளின் முக்கியத்துவத்தை நீவிர் ஒரு குழுவாக இணைந்து பாட்டியலிடுக.

## 5.2 நிறும சட்டம் 2013

நம் நாட்டில் ஆரம்பகாலங்களில் வர்த்தகக்குழு/சங்கம் வணிகம் மற்றும் நிறுவங்களை வழிநடத்திவந்தன. 1600 ஆம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனி ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் 1844 ஆம் ஆண்டு கூட்டுப்பங்கு நிறுமங்கள் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டது. 1857ஆம் ஆண்டு இந்தியாவில் கூட்டுப்பங்கு நிறுமம் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் 1913 ஆம் ஆண்டு இந்திய நிறுமச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்தபின் திரு. எச். சி பாபா (H.C.Baba) குழு நிறும சட்டம் இயற்ற பரிந்துரை செய்தது. பின்னர் ஆங்கில நிறுமச் சட்டம் 1948 அடிப்படையிலேயே இந்திய நிறுமச் சட்டம் 1956 இயற்றப்பட்டு 1956 ஏப்ரல் மாதம் முதல் நாள் செயல்பாட்டிற்கு வந்தது.




**படம் எண் 5.2.1 நிறும சட்டம்**

## இந்திய நிறுமச் சட்டம் 2013 அறிமுகம்

இந்திய நிறுமச் சட்டம் 1956, நிறுவனத்தின் தற்போதைய செயல்பாட்டிற்கு ஏற்றவகையில் 2013ஆம் ஆண்டு சட்டம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்திய நிறுமச் சட்டம் 2013 இயற்றப்பட்டு, இந்திய மக்களவை மற்றும் மாநிலங்களவையில் ஒப்புதலுடனும், குடியரசு தலைவர் ஒப்புதலுடன் சட்டம் அமலுக்கு வந்தது. இந்திய நிறுமச் சட்டம் 2013ல் 29 பாடங்கள் 470 சட்டப்பிரிவுகள் மற்றும் 7 அட்டவணைகளும் உள்ளன. மேலும் முந்தைய சட்டத்தை விடவும் கூடுதலாக தனித்தனி பாடங்கள் பதிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாளர்கள், அரசு நிறுவனங்கள், தகவல் மற்றும் புள்ளி விவரங்களை சேகரித்து வழங்குதல், நிதிகள், தேசிய நிறும தீர்ப்பாயங்கள் மற்றும் மேல்முறையீட்டு தீர்ப்பாயம், சிறப்பு நீதிமன்றங்கள் இடம்பெற்றுள்ளன.

## நிறுமம்

